இரண்டாம் பதிப்பு

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 28

சுபர் 32 | குதிர் 185 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 16 செவ்வாய்க்கிழமை 30.05.2017

3 பெண் குழந்தைகள் மீது மூதூரில் பாலியல் வதை

4 பேர் கைது; மாணவர்கள், மக்கள் வீதியில் போராட்டம்

திருகோணமலை, மே 30
திருகோணமலையில் மூன்று பெண் குழந்தைகள் பாலியல் ரீதியில் வதைக்கப்பட்டனர். அதைச் செய்த குற்றச் சாட்டில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர். இதனால் மூதூர் பெரிய வெளிப் பகுதியில் நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொதுமக்கள் கொந்தளித்தனர். பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.
>> 25

வித்தியா படுகொலை விசாரணை ஜூலை முதல் வாரத்தில் ஆரம்பம்

முதல் தடவையாக நேற்றுக் கூடியது தீர்ப்பாயம்

யாழ்ப்பாணம், மே 30
புங்குடுதீவில் கோரமாகக் கொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் படுகொலை வழக்கு விசாரணை ஜூலை மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
இந்த வழக்கு மூன்று நீதிபதிகள் கொண்ட தீர்ப்பாயத்தின் முன்பாக விசாரிக்கப்படவுள்ளது. தலைமை நீதியரசர் நீதிபதிகள்
>> 25

பேரிடரால் உயிரிழப்பு தொடர்ச்சியாக உயர்வு

நேற்று மாலை வரை 180 பேர் சாவு

கொழும்பு, மே 30
இயற்கைச் சீற்றத்தால் அள்ளுண்ட இலங்கையின் தென் பகுதிப் பிரதேசங்களில் சாவு எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றது. நேற்று மாலை வரை 180 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 109 பேர் காயமடைந்துள்ளனர் என்றும், 110 பேர் காணாமற்போயுள்ளனர் எனவும் இடர்முகாமைத்துவ மைய நிலையம் அறிவித்துள்ளது.
அத்துடன் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 92 குடும்பங்களைச் சேர்ந்த 5 லட்சத்து 56 ஆயிரத்து 472 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 640 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 5 ஆயிரத்து 329 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இடர்முகாமைத்துவ மைய நிலையம் வெளியிட்
>> 24

வெள்ளத்தால் அமைச்சர்களின் வாகன கொள்வனவு இடைநிறுத்தம்

கொழும்பு, மே 30
இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் நிறைவுறும் வரை அமைச்சர்களுக்கான புதிய வாகனக் கொள்வனவு இடைநிறுத்தப்படவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
>> 25

கனகராயன்குளம் விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, மே 30
வவுனியா, கனகராயன்குளத்தை அண்மித்த பகுதியில் நேற்று இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஒருவர் சாவடைந்ததோடு மற்றொருவர் படுகாயங்களுக்கு உள்ளானார் எனத் தெரிவிக்கப்பட்டது.
சாவடைந்தவரின்
>> 24

பதில் கிடைக்காத 100ஆவது நாள்

கிளிநொச்சியில் இன்று பெரும் ஆர்ப்பாட்டம் மக்களைத் திரண்டுவர உறவுகள் அழைப்பு

கிளிநொச்சி, மே 30
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று 100ஆவது நாளை எட்டியது. எனினும் இதுவரையில் அரசிடமிருந்து அவர்களுக்கு உருப்படியான பதில் ஏதும் வழங்கப்படவில்லை.
அரசின் பாராமுகத்தை, புறக்கணிப்பைக் கண்டித்து இன்று கிளிநொச்சியில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தைத் தாம் முன்னெடுக்க உள்ளார்கள் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.
இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை முன்னெடுத் திருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும் இன்று கிளிநொச்சி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வர். பொது மக்கள், பொது அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள் எனச் சகலரையும் போராட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவைத் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அழைப்பு விடுத்தனர்.
கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதியை அறியவும், அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் வடக்கு - கிழக்கில் தொடர் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. கிளிநொச்சி போராட்டம் இன்று 100 ஆவது
>> 25

கொலைக்கு உத்தரவிட்ட கோத்தா பொலிஸிடம் சிக்கியதாம் ஆதாரம்

கொழும்பு, மே 30
வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச நேரடியாக ஆலோசனை வழங்கினார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இது தொடர்பான ஆதாரங்களை, பொலிஸ் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
வெலிக்கடைச் சிறைச்சாலையில் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி கைதிகள் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர். காவலர்களின் துப்பாக்கிகளைப் பறித்து வைத்துக்கொண்டு தாக்குதல் நடத்தினர். கலவரத்தை அடக்கப் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் 27 கைதிகள் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர். விசாரணைகளின் பின்னர் பாதிக்கப்பட்ட கைதிகளுக்கும்
>> 25

கோத்தாவின் எகத்தாளம்

யாழ்ப்பாணம், மே 30
99 சதவீதமான தீவிரவாதிகள் தமிழர்களாக இருந்தபோது, நாங்கள் அம்பாந்தோட்டையில் தேடுதல் சோதனை நடத்துவது பயனற்றதாகும். 10 பேரைக் கைது செய்கின்றபோது 3 அப்பாவிகள் சிக்கியிருக்கக் கூடும். அதற்குநாங்கள் பொறுப் பேற்க
>> 25

பிரபாகரனைக் கொன்றவர்கள் தமிழக அரசியல் தலைவர்களே

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலச் செயலர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 30
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் அழிவுக்குத் தமிழகத் தலைவர்கள்தான் காரணம் என்று இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் மாநிலச் செயலாளர் சிறீநிவாசன் குற்றம்
>> 25

உதயன் மீது தாக்கல் செய்த வழக்கில் டக்ளஸ் தோல்வி

யாழ்ப்பாணம், மே 30
தனக்கு மானம் இருந்ததாகவும் அதில் உதயன் பத்திரிகை இழப்பை ஏற்படுத்தி விட்டதாகவும் தெரிவித்து முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தாக்கல் செய்த 4 வழக்குகளில் ஒன்றில் நேற்று அவர் தோல்வியடைந்தார்.
இணையத் தளத்தில் வெளியான செய்தி தொடர்பில் அவர் யாழ். மாவட்ட நீதிமன்றில் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். தனக்கிருந்ததாக அவர் கூறும் மானத்தை இழக்கச் செய்ததற்கு இழப்பீடாக 500 மில்லியன் ரூபாவைக் கோரியிருந்தார்.
2012ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு 5 வருடங்களாக நடந்து வந்தது. நேற்றைய தினம் வழக்கின் வலுவற்ற தன்மைகளைச் சுட்டிக்காட்டிய யாழ். மாவட்ட நீதிபதி ஜே.கஜநிதிபாலன் அதனைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.
>> 24

வீழ்ந்தது மீட்பு ஹெலி இருந்தோர் அருந்தப்பு

கொழும்பு, மே 30
இயற்கை இடரில் சிக்கியவர்களை மீட்பதில் ஈடுபட்டிருந்த இலங்கை வான் படையின் எம்.ஐ. 17 உலங்கு வானூர்தி நேற்றுக்காலை வீழ்ந்து உடைந்தது. இயந்திரக் கோளாறுக்கு
>> 24

ஹெலியில் பிறந்த குழந்தை

யாழ்ப்பாணம், மே 30
இயற்கை இடரினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த உலங்குவானூர்திக்குள் கர்ப்பிணிப் பெண்ணொருவர் குழந்தையைப் பெற்றெடுத்தார்.
பேரிடரால் பாதிக்கப்பட்ட
>> 25

வடக்கின் தபால் சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 30
தெற்கின் 8 மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பை அடுத்து வடபகுதிக்கான தபால்சேவை பாதிக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த தபால் தொடருந்தில் தபால் பொதிகள் எவையும் எடுத்துவரப்படவில்லை. இதேவேளை இன்று நிலமை சீராகக்
>> 25

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொல்கொட அணை உடையும் அபாயநிலை

கொழும்பு, மே 30

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாணப்பிட்டிய பொல்கொட அணை கடும் மழையால் உடையும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகப் பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

அணை உடையும் நிலையில் உள்ளதால், பாணந்துறை தெற்கு, பாணந்துறை வடக்கு, வாதுவ, பண்டாரகம, மொரொந்துடுவ, அகுருவத்தோட்ட ஆகிய இடங்களில் உள்ள மக்கள் உடனடியாக வீடுகளை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அவசர அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-5)

குருநகர் மீனவர்களே கடலில் இறங்காதீர்

நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30

சீரற்ற காலநிலை காரணமாக மறுஅறிவித்தல் வரை குருநகர் கடற்றொழிலாளர்கள் மீன் பிடிக்கச் செல்லவேண்டாம் எனக் குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்தது.

இந்த அறிவித்தல் நேற்றுக் காலை 8.00 மணி முதல் குருநகர் பகுதி வீதிகளில் விடுக்கப்பட்டது. இந்த அறிவித்தலை மீறிக் கடற்றொழிலுக்குச் செல்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் கூறப்பட்டது. (த-51)

முஸ்லிம் பெண் சாவுக்கு நீதி கோரிப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 30

புத்தளத்தில் கணவரால் எரித்துக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சாமிலாவின் சாவுக்கு நீதி கோரி நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முஸ்லிம் திருமணச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு சாமிலா போன்ற பெண்களின் சாவுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதுரங்குளி நல்லாந்தழுவப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய முஹம்மது தமீம் சாமிலா என்ற பெண் கடந்த 5 ஆம் திகதி அவரது கணவரால் கட்டிவைத்துத் தீமூட்டப்பட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனால் காயமடைந்த குறித்த பெண் புத்தளம் தள வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி உயிரிழந்தார்.

தனது மனைவியைத் தீமூட்டி எரித்ததாகக் கூறப்படும் கணவன் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்காக இரண்டு பொலிஸ் குழுக்களை நியமித்துள்ளதாகப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சாமிலாவின் சாவுக்கு நியாயம் கோரியும் அவரைக் கொலை செய்த கணவரைக் கைதுசெய்யக்கோரியும் அமைதிப் பேரணி ஒன்று நேற்றுப் புத்தளத்தில் நடைபெற்றது.

முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி அமைப்பு மற்றும் பல்வேறு மகளிர் அமைப்புக்கள் ஏற்பாடு செய்த இந்தப் பேரணியில் கலந்து கொண்ட பெண்கள் தமது வாயைக் கறுப்புத் துணியால் கட்டி கறுப்பு நிற ஆடைகளையும் அணிந்த வாறு எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்தப் பேரணியில் எரியூட்டிக் கொலை செய்யப்பட்ட சாமிலாவின் தாயும் கலந்து கொண்டார்.

முஸ்லிம் திருமணச் சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் இவ்வாறான படுகொலைகளை தடுக்க முடியும் எனப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (த-21)

இடர் பாதித்த பகுதிகளுக்கு தடையின்றி எரிபொருள்

சிறப்புப் பிரிவு நேற்று உருவாக்கம்

கொழும்பு, மே 30

இடரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு தடையின்றி எரிபொருள்களை விநியோகிப்பதற்குப் பெற்றோலிய வளத்துறை அமைச்சினால் இடர் முகாமைத்துவப் பிரிவு நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது இந்தப் பிரிவு அமைக்கப்பட்டதன் நோக்கமாகும் என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார். (த-5)

ஏற்றுமதி விவசாய திணைக்களப் பிரிவு யாழ்ப்பாணத்தில்

விவசாயம் சார் உற்பத்தி ஆலைகளை அமைப்பதற்கான உதவிகளுக்காக

யாழ்ப்பாணம் மே 30

யாழ்ப்பாணத்தில் விவசாயம் சார்ந்த உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு உதவிகளை வழங்கும் வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் புதிதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்தப் பிரிவினர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி விவசாயத் திணைக்களப் பிரிவின் ஊடாக விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலம் விவசாயிகளுக்கான இஞ்சி, மஞ்சள், வெற்றிலை, பாக்கு, மிளகு போன்ற பயிர்களைப் பெற்றுக்கொள்வதுடன் அதற்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் விவசாயிகளுக்கான பயிற்சிகள், நிதி உதவிகள் என்பவற்றையும் குறித்த திணைக்களம் ஊடாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாய உற்பத்திப் பொருள்கள் சார்ந்த தொழிற்சாலைகளை ஆரம்பிக்க விரும்புவோர் தங்களின் திட்ட முன்மொழிவுகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள ஏற்றுமதி திணைக்களத்தில் சமர்ப்பித்தால் அவை பரிசீலனை செய்யப்பட்டு உதவித் திட்டங்கள் வழங்கப்படும்.

உதாரணமாக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான திட்ட முன்மொழிவைச் சமர்ப்பிக்குமிடத்து அது ஏற்கப்பட்டு உதவித் திட்டம் வழங்கப்படும் போது, குறித்த பயனாளி ஒரு இலட்சம் ரூபாவைத் தனது நிதியில் இருந்து செலவிட வேண்டும். மிகுதி தொகையாக 5 இலட்சம் ரூபா உதவியாகவும், 4 இலட்சம் ரூபா கடன் அடிப்படையிலும் வழங்கப்படும்.

இந்த உதவித் திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்கான சந்தை வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறான சந்தை வாய்ப்புக் கிடைக்கும்போது யாழ்ப்பாண மாவட்டப் புகையிலைச் செய்கையாளர்களும் மாற்று பயிர்ச் செய்கைக்கு மாறக் கூடிய வாய்ப்பு உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (த-8)

வடக்கு - கிழக்கிலுள்ள மலையக மக்களுக்கு புதியதொரு அமைப்பு

வவுனியாவில் ஆரம்பித்து வைப்பு

வவுனியா, மே 30

வடக்குகிழக்கு வாழ் மலையக மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி வடக்கு-கிழக்கு வாழ் மலையக மக்களின் ஒன்றியம் நேற்று முன்தினம் வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் வடக்கு-கிழக்கில் வாழும் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் குறித்து ஆராயும் மாநாடும் இடம்பெற்றது.

காலை 9 மணிக்கு வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் இடம்பெற்ற மாநாட்டைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பும் இடம்பெற்றது.

இதில் வடக்கு-கிழக்கு வாழ் மலையகமக்கள் ஒன்றியத்தின் இணைப்பாளர்களில் ஒருவரான வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் என்.பி. நடராஜா கருத்து வெளியிடுகையில்,

இந்த அமைப்பு ஒரு அரசியல் கட்சி அல்ல. இது ஒரு ஒன்றியமாகும். வடக்கு - கிழக்கு மலையகத் தமிழ் மக்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி ஏனைய இன மக்களுடன் சமவாய்ப்புடன் வாழ்வதை உறுதிப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு வாழ் மலையக மக்களின் நலன் சார்ந்து அரசியல் ரீதியாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும் அமைப்பாகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதோடு, வடக்கு- கிழக்கில் மலையக மக்களின் நலன் களையும், உரிமைகளையும் பேணுவதிலும் முழுமூச்சாக ஈடுபடும்.

தமிழ்த் தேசியத்தோடு பயணிக்கவுள்ள எமது அமைப்பு, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து தமிழ் பேசும் மக்கள் என்னும் அடிப்படையில் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் - என்றார்.

இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த மலையக மக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-10-35)

பிரதேச செயலகங்களிலும் வெள்ள நிவாரணம் சேகரிப்பு

2ஆம் திகதிக்கு முன் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம் மே 30

தென் பகுதியில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்க முன்வருவோர் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் அவற்றைப் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென் பகுதியில் கடந்த சில நாள்களாகத் தொடரும் வெள்ள இடரால் நூற்றுக்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். ஏராளமானோர் சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறித் தற்காலிக முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு அனைத்தையும் இழந்து அல்லல்படும் மக்களுக்குத் தாமாக முன்வந்து அத்தியாவசியப் பொருள்களை வழங்க விரும்புவோர் தத்தமது பிரதேச செயலகங்களில் அவற்றை ஒப்படைக்க முடியும்

பொதுமக்களால் பிரதேச செயலகங்களில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் ஒன்றிணைக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஊடாக தெற்கில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அனுப்பி வைக்கப்படும் - என்றார். (த-8)

8 மாவட்டங்களில் பாடசாலைகள் பூட்டு

சீரற்ற காலநிலை காரணமாக

கொழும்பு, மே 30

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள 8 மாவட்டங்களில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட 8 மாவட்டங்களில் உள்ள சகல பாடசாலைகளின் அதிபர்களுக்கும் இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, களுத்துறை, கொழும்பு, கேகாலை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல பாடசாலைகளும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

திருடர்களை மடக்கிப் பிடிக்க முயன்றவர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மே 30

வளவுக்குள் நுழைந்த திருடர்களை மடக்கிப் பிடிப்பதற்கு முயன்றவர், திருடர்களின் வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அல்வாயை சேர்ந்த பாலசுந்தரம் மனோகரன் (வயது 55) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தப் பகுதியில் அடிக்கடி திருடர்களின் நடமாட்டம் காணப்பட்டதால் திருடனைப் பிடிக்க முற்பட்ட வேளை வாள்வெட்டு இடம்பெற்றதெனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 27 ஆம் திகதி இரவு வளவுக்குள் நாய்கள் குரைத்ததைக் கேட்டு மனைவி, பிள்ளைகளை வீட்டுக்குள் வைத்துப் பூட்டிவிட்டுப் பின்கதவுவழியாக, இவர் இருளில் வெளியே சென்றவேளை வாள்வெட்டுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளுக்கான மருந்துகளை பாதுகாக்க போராடிய மருத்துவர்

கொழும்பு, மே 30

தென்பகுதியில் ஏற்பட்ட இயற்கை இடரின்போது குழந்தைகளுக்கான மருந்துகளை காப்பாற்றுவதற்காக மருத்துவர் ஒருவர் போராடிய சம்பவம் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தபோதும், குழந்தைகளின் மருந்துகளை காப்பாற்றுவதற்காக மருத்துவமனை சென்றுள்ளார். கும்புருப்பிட்டிய பிரதேசத்தில் அரச மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவரே இந்த மகத்துவமான பணியைச் செய்துள்ளார். அவரது பெயர் பிரசாத் அவர் தனது உயிரைப்பற்றி கருத்திற் கொள்ளாமல் வெள்ளத்தைக் கடந்து வைத்தியசாலைக்குச் சென்று குழந்தைகளுக்கான மருந்துகளை பாதுகாத்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-5)

அத்துமீறிய விதைப்புக்களை இன்று அழிக்க நடவடிக்கை

கிளி. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் விதைக்கப்பட்டுள்ள மேலதிக விதைப்புக்களை அழிப்பதற்கு இன்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் சிறுபோகத்தின் போது 890 ஏக்கர் நிலமே செய்கைக்கு அனுமதிக்கப்பட்டது. ஆயினும் ஆயிரத்து 100 ஏக்கர் நிலத்தில் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துமீறிய விதைப்புக் காரணமாக 7ஆவது நீர் வழங்கலில் நீர் பற்றாக்குறை ஏற்படும். அதனால் மேலதிக விதைப்புக்களை உடனடியாக அழிப்பது என்று விவசாய சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து வயல்களையும் அளவிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிக விதைப்பு மேற்கொண்ட நிலங்கள் இனங்காணப்பட்டன. விவசாயிகளும் இனங்காணப்பட்டனர். 45 ஏக்கர் நிலத்துக்குரியவர்கள் மட்டும் இன்னமும் இனங்காணப்படவில்லை. மேலதிக விதைப்பு மேற்கொண்ட 210 ஏக்கர் நிலங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கு முன்னோடியாகக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக விதைப்புக்கள் உடனடியாக அழிக்கப்படும் என்றும், மேலதிக விதைப்பு மேற்கொண்டவர்களுக்கு உரமானியமும், நீர்ப் பங்கும் நிறுத்தப்படும் என்றும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விதைப்பு மேற்கொள்ளப்பட்ட வயல்களை இன்றே பொலிஸாரின் உதவியுடன் புல்லு மருந்து விசிறி அழிப்பது என்று நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது.

(ற-101)

இரணைதீவை விடுவிக்கக் கோரி நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணி

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இரணைதீவு மக்கள் தங்களின் பூர்வீக நிலத்தைக் கடற்படையினர் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று கவனவீர்ப்புப் பேரணி நடத்தினர்.

கிளிநொச்சி திரேசாம்பாள் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான பேரணி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்தது. மாவட்டச் செயலரிடம் மனு கையளிக்கப்பட்டது.

கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இரணைதீவை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இரணைதீவு மக்கள் கடந்த 29 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். இதுவரை அவர்களுக்கு பொறுப்புவாய்ந்த பதில் எதுவும் சம்பந்தப்பட்டவர்களால் வழங்கப்படவில்லை.

தமது பூர்வீக நிலம் விடுவிக்கப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்திருந்த நிலையில் நேற்றுக் கவனவீர்ப்புப் பேரணி நடத்தினர்.

பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், அருட்தந்தையர்கள், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ற-10, 35)

புகலிடம் கோரியவரை முத்தமிட்டதால் ஆஸியில் கம்பி என்னுகின்றார் தமிழர்

கொழும்பு, மே 30

ஆஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கையாளரான பெண்ணை முத்தமிட்ட குற்றச்சாட்டில், குடிவரவுத் தடுப்பு முகாமின் பாதுகாப்புப் பணியாளராகப் பணியாற்றிய ஈழத் தமிழருக்கு ஒரு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்ன் குடிவரவு இடைத்தங்கல் நிலையத்தில் பாதுகாப்பு பணியாளராகப் பணியாற்றிய 37 வயதுடையவருக்கே நீதிமன்றம் இந்தத் தண்டனையை வழங்கியுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜூலை - ஒகஸ்ட் மாதங்களுக்கிடையில், பெண் புகலிடக் கோரிக்கையாளரை தனது பணியக அறைக்குள் அழைத்து கதவைத் தாளிட்டார் என்றும், அவரை முத்தமிட்ட பின்னரே வெளியேற அனுமதித்தார் என்றும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

குற்றச்சாட்டுக்குள்ளானவரும் ஒரு புகலிடக் கோரிக்கையாளராவார். அவர் 2014ஆம் ஆண்டு மெல்பேர்ன் மருத்துவமனையில் பணிக்குச் சென்றபோது, சக பணியாளரை முத்தமிட்டார் என்ற குற்றச்சாட்டும் உள்ளது என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய செயல்களை பெண்களுக்கு எதிரான பாலியல் தாக்குதல்களாகக் கணித்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு புரோட்மிடோஸ் நீதிவான் நீதிமன்றம், ஒரு மாத சிறைத்தண்டனையை விதித்துள்ளது. அத்துடன், 18 மாத சமூக சீர்திருத்தத் திட்டத்தில் ஈடுபட உத்தரவிட்டது.

தண்டனைவிதிக்கப்பட்டவர் ஆஸ்திரேலியாவில் புகலிடம் தேடுவதற்கு முன்னர், இலங்கையில் தமிழ் ஊடகங்களில் ஊடகவியலாளராகப் பணியாற்றியவர் என்றும், குண்டுவீச்சுகள், வன்முறைகளின் சாட்சியாக இருப்பவர் என்றும் நீதிமன்றத்தில் சட்டவாளர் தெரிவித்தார்.

(ற-5)

கிளி. வைத்தியசாலைக் காணியை தனி நபருக்கு வழங்கத் தடை

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வளாகத்துக்குள் அடங்கும் முக்கால் ஏக்கர் காணியைத் தனியாருக்கு வழங்க எடுக்கப்படும் முயற்சியை உடனடியாகப் பிரதேச செயலாளர் தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையின் தேவைக்காக 50 ஏக்கர் காணி கையகப்படுத்தப்பட்டது. அதில் ஏ 9 வீதியோரம் உள்ள முக்கால் ஏக்கர் காணியின் உரிமையாளரிடம் இருந்து காணி கையகப்படுத்தப்படவோ அல்லது அதற்கான நட்ட ஈடோ வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் காணியை தன்னிடம் மீள ஒப்படைக்கு மாறு கோரி பிரதேச செயலாளருக்கு உரிமையாளர் விண்ணப்பித் திருந்தார். விண்ணப்பத்தை பிரதேச செயலாளர் அப்போதைய வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு அனுப்பினார்.

பிரதேச செயலாளரால் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளித்த வைத்தியசாலைப் பணிப்பாளர் காணியை மீள வழங்குவதில் ஆட்சேபனை கிடையாது என எழுத்தில் பதிலளித்ததை அடுத்து சர்ச்சை எழுந்தது. வைத்தியசாலையின் எதிர்காலத் திட்டங்களை கருத்தில் கொள்ளாமல் தனது அதிகாரத்துக்கு அப்பாற்பட்டு வைத்தியசாலைப் பணிப்பாளர் அனுமதியை எழுத்தில் வழங்கியமை ஓர் அதிகாரத் துஷ்பிரயோகம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்த விடயத்தில் தன்னிச்சையான முடிவு எடுத்தமை தொடர்பில் வடமாகாண சுகாதார அமைச்சு வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் விளக்கம் கோரியுள்ளது.

இந்த விடயம் நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அந்தக் காணியை வழங்குவதை பிரதேச செயலர் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் ஒப்புதல் இன்றிக் காணியை வழங்க முடியாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

(ற-101)

அமெரிக்கா பறந்தார் ரணில்

கொழும்பு, மே 30

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா பயணமாகி யுள்ளார். அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இலங்கையிலி ருந்து புறப்பட்டுச் சென்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனிப்பட்ட பயணமாக அமெரிக்கா சென்றுள்ள தலைமை அமைச்சர் அங்கு சில நாள்கள் தங்கியிருப்பார் என்று தெரிய வருகிறது.

இந்தப் பயணத்தின் போது அவர் அமெரிக்க அரசின் உயர் அதிகாரிகளுடன் அதிகாரபூர்வமற்ற பேச்சு நடத்தவுள்ளார் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

(ற-5)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017

பூங்காவனத் திருவிழா

இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணி பூசையைத் தொடர்ந்து வள்ளி, தெய்வானை சமேதராக சுப்பிரமணியர் திருக்கல்யாணம் நடைபெற்று பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலா நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். பல்கலை மாணவர் கொலை;

5 பொலிஸாரின் மேன்முறையீட்டு மனு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 30

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் சாவு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு மீது சட்ட மாஅதிபர் நேற்று அடிப்படை ஆட்சேபனையைத் தாக்கல் செய்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணையை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியேயுள்ள நீதிமன்றம் ஒன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கோரி 5 சந்தேகநபர்களும் மேன்முறையீடு செய்திருந்தனர்.

இவர்களின் மேன்முறையீட்டு மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரோஹினி வல்கம மற்றும் எஸ். துரைராஜா ஆகிய நீதிபதிகள் குழு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மேன்முறையீட்டு மனுவில் மனுதாரர்களாக இடையில் இணைந்து கொண்ட, உயிரிழந்த மாணவர்களின் உறவினர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, சந்தேகநபர்களின் மனு மீது ஆட்சேபனையைத் தாக்கல் செய்வதற்குப் பிறிதொரு திகதியை வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதற்கான காரணங்களை ஆராய்ந்த நீதிபதிகள் வழக்கை ஒத்திவைத்தனர்.

(த)

முன்பள்ளி நிதி ஒதுக்கீட்டால் நேற்று ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சர்ச்சை

யாழ்ப்பாணம், மே 30

நிகழ்வு ஒன்றுக்கு வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரை அழைக்காமையால் அவர் குறித்த முன்பள்ளிக்கு ஒதுக்குவதாக வாக்குறுதி அளித்த நிதியை நிறுத்தினார் என ஈ.பி.டி.பியின் பிரதி நிதி ஒருவர் குற்றம் சாட்டியதால் கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சர்ச்சை ஏற்பட்டது.

ஊரெழு கிழக்கு ஆனந்தகானம் பகுதியில் உள்ள முன்பள்ளிக்கு வடமாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்குவதாக வாக்குறுதியளித்தார் என்றும், பின்னர் நிகழ்வு ஒன்றுக்கு அழைக்கவில்லையெனக் காரணம் காட்டி அந்த நிதியை நிறுத்தினார் என்றும் ஈ.பி.டி.பியின் பிரதிநிதி ஒருவர் குற்றச் சாட்டை முன்வைத்தார்.

அத்துடன் டக்ளஸ் அமைச்சராக இருந்த காலத்தில் எவ்வளவோ நன்மை செய்தார். தற்போது அவை இல்லை எனக் கூறி கூட்டத்தை அவர் அரசியலாக்க முனைந்தமையால் அங்கு அமளி ஏற்பட்டது.

இதன்போது கருத்துரைத்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி,

குறித்த முன்பள்ளி நிகழ்வுக்கு எந்தக் கட்சியானாலும் பரவாயில்லை. மக்கள் பிரதிநிதிகளை அழையுங்கள் எதிர்க்கமாட்டோம். மாறாக மக்கள் பிரதிநிதியில்லாத கட்சி அமைப்பாளர்களை அழைக்க வேண்டாம் என்றே கூறப்பட்டது. அது மட்டுமன்றி உங்களுக்கு சேவையாற்றியதாகக் கூறியவர் தற்போதும் மக்கள் பிரதிநிதியாக நாடாளுமன்றில் அங்கம் வகிப்பதால் அவரை அழைத்திருக்கலாமே. அதனைத் தவிர்த்து கட்சியின் அமைப்பாளர்களை அழைப்பதே சர்ச்சை - என்றார்.

இதன்போது குறித்த முன்பள்ளிப் பிரதிநிதி மீண்டும் கருத்து வெளியிடமுற்பட்டார். இதன்போது எழுந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் கஜதீபன், உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் நிதியை அனுமதிப்பது உறுப்பினரின் முடிவாகும். அதனைக் கேள்விக்கு உட்படுத்த முடியாது - என்றார்.

வட மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கருத்து தெரிவிக்கையில்,

உங்கள் இடத்துக்கு யார் உதவினார் என கூறும் கருத்தின் மூலம் நீங்கள் யார் என்பது தெரியும். இதற்கும் அப்பால் இது அரசியல் பேசும் இடமில்லை. இதனை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்ததால் குறித்த விடயம் முற்றுப் பெற்றது.

(த-101)

ஆசிரிய ஓய்வூதியர் சங்கத்தின் 21ஆம் ஆண்டு நிறைவு

இலங்கை ஆசிரிய ஓய்வூதியர் சங்கத்தின் 21ஆம் ஆண்டு நிறைவுக் கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்குதலைவர்திரு. வ.தானையா தலைமையில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது எனச் செயலாளர் சி.சரவணபவானந்தன் தெரிவித்தார். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக திம்பிரிகசாய பிரதேச செயலர் திருமதி பிரியந்த திசாநாயக்க பங்கேற்பார்.

இதில் அங்கத்தவர் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-10)

மண் ஏற்றியவர் கைது

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம், தையிட்டிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக சிவப்பு மண்ணை டிப்பர் ரக வாகனத்தில் ஏற்றிய குற்றச்சாட்டில் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் வறணி பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. விசாரணைகளின் பின்னர் அவர் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவார் எனப் பொலிஸார் கூறினர். (த26)

ஓவியக் கலைக்கூடம் யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாண ஓவியக் கலைக்கூடம் அண்மையில் இலக்கம் 130, கண்டி வீதி எனும் முகவரியில் யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர்விடுதியின்உரிமையாளர்தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தியத் துணைத் தூதரகத்தின் கென்சியூலர் என்.நடராஜன் கலைக்கூடத்தைத்திறந்துவைத்தார். இதில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கர நேசனும் கலந்துகொண்டார்.

குறித்த ஓவியக் கலைக்கூடம்யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து ஓவியர்களினதும் கலைத்திறனை வளர்க்கும் வண்ணம் செயற்பட உள்ளது. குறித்த கலைக்கூடத்தில் ஓவியக்கலை, சிற்பக் கலை என்பனபயிற்றுவிக்கப்படுகின்றனஎனத் தெரிவிக்கப்பட்டது. (த-21)

விநாயகமூர்த்தியின் இறுதிக் கிரியை இன்று

கொழும்பு, மே 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இறுதிக் கிரியைகள், யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ளன.

சாவகச்சேரி மையப் பேருந்து நிலையத்தில் இன்று காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது உடல் வைக்கப்படும். அதன் பின்னர், கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் காலை 11.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகும். 1.30 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-5)

கொழும்பு பொரளை ஜயரத்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது.

ஒரே நேரத்தில் 3 வாகனங்களை மோதித் தள்ளிய மோ.சைக்கிள்

மதுபோதையே காரணம் எனப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30

மதுபோதையில் பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வேகமாகப் பயணித்த இரு இளைஞர்கள் ஒரே நேரத்தில் ஒரு முச்சக்கர வண்டி, இரு மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை மோதித் தள்ளினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், பலாலி வீதி ஆலடிச் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கோண்டாவில் திசை நோக்கி பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் மிக வேகமாகப் பயணித்தமையாலேயே இந்த விபத்து நேர்ந்தது.

முதலில் முச்சக்கரவண்டி ஒன்றை மோதிய இவர்கள், நிலைதடுமாறி பின்னால் வந்த மோட்டார் சைக்கிளையும் மோதினர். இதன் பின்னரும் வேகம் கொண்ட இவர்கள் மற்றுமொரு புதிய மோட்டார் சைக்கிளையும் மோதித் தள்ளினர்.

மூன்றாவதாக மோதப்பட்ட மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்யப்பட்டு 10 தினங்களே ஆகியிருந்தது. அதற்கு இலக்கத்தகடு கூடப் பொருத்தப்படவில்லை. அது முழுமையாகச் சேதமடைந்தது. மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டபோதும் மாலை 5.20 மணிக்கே அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்தனர். குறித்த விபத்தை ஏற்படுத்திய இளைஞர்களில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-101)

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு

பட்டதாரிகள் நால்வரும் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, மே 30

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்களில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பட்டதாரிகள் நால்வரையும், தலா 2 லட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்வதற்கு, திருகோணமலை நீதிவான் மன்ற நீதிபதி ரத்நாயக்கா அனுமதித்தார்.

பட்டதாரிகள் சார்பில் அரச தலைவர்சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கே.சயந்தன், கிரிசாந்தன், நுவாண்ட் போபகே ஆகியோர் மன்றில் நேற்று முன்னிலையாகினர். பிணை மனுவைச் சமர்ப்பித்திருந்தனர்.

அதில், நீதிவான் மன்றுக்குவெளியே நடந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணை செய்வதற்கான நியாயாதிக்கம் நீதிவான் மன்றுக்கு இல்லை என்று வாதாடினர். இது தொடர்பில் மேல் முறையீட்டு நீதிமன்றமே விசாரிக்க முடியும் என்றும் குறிப்பிட்டனர். நீதிவான் இதனை ஏற்றுக் கொண்டார்.

இருப்பினும் பொலிஸார் பிணை வழங்குவதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர். சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை, பொலிஸாரை அரச கடமைகளைச் செய்ய விடாமல் தடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் பட்டதாரிகள் மீது இருக்கின்றமையையும் சுட்டிக்காட்டினர்.

இதன்போது பட்டதாரிகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், நீதிமன்றம் அழைப்பாணை விடுத்ததுமே தாமாக மன்றில் அவர்கள் சரணடைந்திருந்தார்கள். தமது செயலுக்காகப் பகிரங்க மன்னிப்புக் கோரவும் தயாராக இருக்கின்றார்கள். இதனை மன்று கவனத்தில் எடுத்து அவர்களைப் பிணையில் விடுவிக்க வேண்டும் என்று கோரினர்.

இதனையடுத்து, நால்வரையும் தலா 2 லட்சம் ரூபா பெறுமதியிலான சரீரப் பிணையில் நீதிவான் விடுதலை செய்தார்.

பின்னணி

கிழக்கு மாகாண சபை அமர்வு ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெற்றபோது, பட்டதாரிகள் வேலை கேட்டுப் போராட்டம் நடத்தினர். போராட்டம் நடத்தக்கூடாது என்ற நீதிமன்றத் தடை உத்தரவைப் பொலிஸார் கொடுத்தபோது, பட்டதாரிகள் அதனைக் கிழித்து எறிந்தனர். இது தொடர்பில் மே மாதம் 23 ஆம் திகதி அவர்கள் கைது செய்யப்பட்டனர். பட்டதாரிகள் சார்பில், திருகோணமலை மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கம் முன்னிலையாக மறுத்திருந்தது. இதனையடுத்து, அவர்கள் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மன்றில் முன்னிலையானார்.

(த-5)

விநாயகமூர்த்தி மறைவுக்கு அரசியல் கைதிகள் இரங்கல்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் மறைவுக்கு தமிழ் அரசியல் கைதிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மகசின் சிறையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனுப்பியுள்ள செய்தியில்,

தமிழ் அரசியல் கைதிகள் ஆகிய எமது பார்வையில் அவரை ஒரு மீட்பராகக் கண்டுணர்ந்து வந்துள்ளதால் அவரின் இழப்பு பேரிழப்பாகும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுகளும் வதை களும் கட்டவிழ்த்துவிட்ட காலம் முதல் அரசியல் கைதிகளோடு உறவாடியவர், சிறைக்குள் அந்தி இழைகப்பட்ட தருணங்களில் எல்லாம் அழையாத விருந்தாளி யாக வந்து ஆற்றுப்படுத்தியவர். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழான குற்றவியல் வழக்குகளில் பட்டறிவு மிக்க சட்டத்தரணி, மிக நெருக்கடியான சூழ் நிலைகளை கடந்து தனது இறுதிக் காலம் வரையிலும் தன்னலம் பாராது தமிழ் கைதிகளின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து வந்துள்ளார் - என்றுள்ளது.

(த-101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முல்லை உற்பத்திகளுக்கு பன்னாட்டில் பெரும் மதிப்பு

முல்லைத்தீவு மாவட்டச் செயலர் பெருமிதம்

முல்லைத்தீவு, மே 30
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள சிறு கைத்தொழில் முயற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு, பன்னாடுகளில் பெரும் மதிப்புள்ளது. அவர்களின் உற்பத்திப் பொருள்கள் பன்னாட்டு வர்த்தகர்களையும் கவரும் வகையில் அமைந்துள்ளன.
இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொழில் முயற்சி இனங்காணலுக்கும், ஊக்கமூட்டலுக்குமான விழிப்பு ணர்வுச் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, வறுமையில் முதலிடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.
மீள்குடி யமர்வின் பின்னர் மக்களுக்குப் பல்வேறுபட்ட உதவித்திட்டங்களையும், தொழில் முயற்சிகளை யும் ஆரம்பித்து, அதன் ஊடாக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான செயற்றிட்டங்களைப் படிப்படியாக முன்னெடுத்து வந்துள்ளோம். அந்த வகையில் வறுமைக் கோட்டில் இருந்து எங்களுடைய மாவட்டம் முன்னேறியிருக்கும் என நான் நம்புகின்றேன்.
இந்த வருடம் இலங்கை அரசால் நிலைபேறான அபிவிருத்தியை முன்னெடுத் துச் செல்வதற்கான செயற்றிட்டத்தின் கீழ், வறுமை ஒழிப்பு வருடமாகப் பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.
அந்தவகையில் எங்களுடைய மாவட்டத்திலும் வறுமையை ஒழிப்பதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் நாங்கள் செய்யும் முயற்சி, மாவட்டத்தின் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துவதற்கு உதவி செய்வதாக அமையும். சிறப்பாக இயங்குகின்ற சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் இன்றும் எங்களுடைய மாவட்டத்தில் இருக்கின்றார்கள்.
அவர்களுடைய உற்பத்திப் பொருள்கள் பன்னாட்டு ரீதியில் பெயர் பெற்றுள்ளன. அதே போன்று அனைவரும் முன்னேற்றக ரமான பாதையில் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்கு முன் வரவேண்டும். கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் உள்ள திணைக்களம், உங்களது தொழில் முயற்சிகள் மேலும் வளம்பெற உதவிகள் செய்வதற்குத் தயாராக உள்ளது.
அதன் ஊடாக உங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடியதாக அமையும். இதன் போது மாவட்டம் பொருளாதாரரீதியில் முன்னேற்றங்களை அடைய முடியும். மாவட்டத்தில் உள்ள வளங்களைச் சரி யான முறையில் பயன்படுத்திக் கொண்டால், வறுமையை முற்றாக ஒழித்துக்கொள்ள முடி யும். சிறு கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள உங்களுடைய முயற்சி, மாவட்டத்தில் வறுமையைஒழிப்பதற்காகஅமைய வேண்டும். - என்றார்.

(ஐ-7)

பன்னாட்டு புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி நாளை

தென்மராட்சிப் பிரதேச சமூர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினர் பன்னாட்டு புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி நாளை புதன்கிழமை விழிப்புணர்வுப் பேரணியையும் உயர்தர வகுப்புமாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கையும் நடத்தவுள்ளனர்.
அத்துடன் பன்னாட்டுப் புகைத்தல் எதிர்ப்பு வாரத்தையொட்டிகிராம அலுவலர் பிரிவு ரீதியாகக் கிராம மக்களுக்கான விழிப்பு ணர்வு கருத்தரங்குகள் நாளை தொடக்கம் ஜூன் ஏழாம் திகதிவரை நடத்தவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
நாளை மதியம் 12 மணிக்குச் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் கூடும் அலுவலர்களும் பொதுமக்களும் நடைபவனியாகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வரை செல்வர் எனவும், அங்கு உயர்தர வகுப்பு மாணவர்களுக்கானபுகைத்தல்தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கைநடத்தவுள்ளனர்என வும் அறிவிக்கப்பட்டுள்ளது.
பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் நடைபவனியில் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர், பொலிஸார் உட்பட பலர் கலந்து கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
போதைக்குச் செலவிடும் பணத்தை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்க முன்வாருங்கள்என்னும்தொனிப்பொருளில் இந்த நடைபவனி இடம்பெறவுள்ளதெனவும் கூறப்பட்டது. (த-9)

பெருந்திருவிழா

வடமராட்சி,மே30
நெல்லியடி தடங்கன் புளியடி அருள் மிகு முருக மூர்த்தி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளன.
பெருந்திருவிழாவில் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மஞ்சத்திருவிழாவும், 7ஆம் திகதி புதன்கிழமை பி.ப.2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும், இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (த-173)

குடமுழுக்கு

யாழ்ப்பாணம், மே 30
சங்கானை மாவடி அருள்மிகு ஞானவைரவப்பெருமான் ஆலயக் குடமுழுக்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

(த-21)

செம்பியன்பற்றில் ஆயருக்கு வரவேற்பு

வடமராட்சி, மே 30
கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் தேவாலயப் பெருவிழாவுக்கு முதன் முதலாக வருகை தந்திருந்த யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு அந்தப் பகுதி மக்களால் பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.
பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்து வரப்பட்ட ஆயர் செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் தேவாலய பெருந்திருவிழாத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தார். கடந்த 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற பெருவிழாவுக்கு முதல் நாள் தாளையடி பங்குத் தந்தை அருட்திரு ஜி. அருள் நேசன் அடிகளார் தலைமை யில் இடம் பெற்ற நற்கருணைப் பெருவிழாவில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு கலாநிதி ப. ஜோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் கலந்து சிறப்பித்தார். (த-173)

சட்டவிரோதமாக மாடு வெட்டிய இரண்டு பேர் மண்டைதீவில் கைது

யாழ்ப்பாணம் மே 30
மண்டைதீவுப் பிரதேசத்தில் பற்றைக்குள் வைத்துச் சட்டவிரோதமாக மாடு ஒன்றை வெட்டினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
மண்டைதீவு 7 ஆம் வட்டாரப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஆள் நடமாட்டம் இல்லாத பற்றைக்குள் மாடொன்றை இறைச்சியாக்கிக் கொண்டிருந்த இரண்டு நபர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.
கைது செய்தவர்களிடம் இருந்து இறைச்சிக்காகக்கொல்லப்பட்ட மாடுமற்றும்கூரிய கத்திகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நேற்றையதினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இருவரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் ரியால் உத்தரவிட்டார். (த-8)

வேளாங்கன்னி ஆலயத்தின் திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் மே.30
குருநகர் றெக்கிளமேசன் வீதியில் அமைந்துள்ள வேளாங்கன்னி ஆலயத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.
இன்றும்நாளையும்வணக்க மாத வழிபாட்டைத் தொடர்ந்து மாலை 6 மணிக்குத் திருப்பலி இடம் பெறும்.
எதிர்வரும் ஜூன் 1ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச் செப மாலையும் தொடர்ந்து திருப்பலியும் நற்கருணை வழிபாடும் நடைபெறும். மறுநாள் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் அன்னையின் திருச் சொரூப ஆசீரும் இடம் பெறும். (த-51)

தெற்கு வெள்ளப் பாதிப்புக்கு வர்த்தகர்கள் உதவவேண்டும்

யாழ்ப்பாண வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம் மே 30
நாட்டின் தெற்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள இயற்கை இடரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்ய யாழ்ப்பாண வணிகர்கள் அத்தியாவசியப் பொருள்களைத் தந்துதவவேண்டும் என யாழ்ப்பாண வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:
நாட்டின் தெற்குப் பிரதேசங்களில் இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவ முன்வரும் வணிகர்கள் தங்களால் இயன்ற உலர் உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் போன்ற வற்றை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
யாழ்ப்பான வணிகர் சங்கத்தினால் சேகரிக்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் யாழ்ப்பான மாவட்டச் செயலரின் ஊடாக தெற்கில் அவதியுறும் மக்களுக்குச் சென்றடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
எனவே இன்றையதினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு வருகை தரும் பார வாகனங்களில் உங்களால் இயன்ற பொருள்களைக் கொடுத்து உதவவேண்டும் என்றுள்ளது.

(த-8)

சுவாமி விவேகானந்தர் வீதி முதன் முதலாக சீரமைப்பு

யாழ்ப்பாணம், மே 30
பண்டத்தரிப்பு சுவாமி விவேகானந்தர் வீதி முதன் முதலாக மறுசீரமைக்கப்பட்டு வருகின்றது என வலி. தென்மேற்குப் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சி.சி.மகேந்திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வேண்டுகைக்கு அமைவாக சுவாமி விவேகானந்தர் வீதியில் ஒரு கிலோ மீற்றர் தூரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக மறுசீரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.
வீதியை அகலிப்பதற்கு அப்பகுதியில் உள்ள மக்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்த வீதியை மக்கள் முழுமையாகப் பயன்படுத்தும் நிலை ஏற்படும் என்று அவர் மேலும் கூறினார். (த

இணுவில் கந்தசுவாமி கோயிலின் பெருந்திருவிழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 30
இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 25 நாள்கள் நடைபெறவுள்ளது.
எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம்திகதி மாலை 7 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 20ஆம் திகதி மாலை 7 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், 21 ஆம் திகதி பி.ப. ஒரு மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மாலை 7 மணிக்கு மாலை சப்பறத் திருவிழாவும், 22ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், எதிர்வரும் 23ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு தீர்த்திருவிழாவும் இரவு 9 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (த-10)

நெல்லியடி வணிகர் கழகத்தால் வெள்ள நிவாரணம் திரட்டும் பணி

யாழ்ப்பாணம், மே 30
தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி புரிவதற்காக நெல்லியடி வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் பொருள்கள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கழகத் தலைவர் தெரிவித்தார்.
பொருள்களை வழங்க விரும்புவோர் முதலாம் மாடி, பழைய சந்தை, பிரதான வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள வணிகர் கழக பணிமனையில் அல்லது வணிகர் கழகத்தின் பதாகைகள் கட்டப்பட்ட வாகனத்தில் ஒப்படைக்கலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021-2264998 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாநகர சபைக்குள் 104 அனுமதியற்ற கட்டடங்கள்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் 104 சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று மாநகர சபை இனங்கண்டுள்ளது. அவை தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் மாநகர சபை தெரிவித்தது.

"யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சட்டவிரோதக் கட்டடங்கள் உள்ளனவா? ஆம், எனில் எத்தனை கட்டடங்கள் உள்ளன ?' என்று தகவல் உரிமைச் சட்டத்தின் ஊடாக, யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

அதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் தகவல் அலுவலர் பதில் வழங்கியுள்ளார்.

"யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் 104 அங்கீகாரமற்ற கட்டட அமைப்புக்கள் காணப்படுகின்றன. கடந்த காலத்தில், நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலப் பகுதியில் உருவாக்கப்பட்டவையே மேற்கூறப்பட்ட அங்கீகாரமற்ற கட்டட அமைப்புக்கள் ஆகும். அவை தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் தற்போது மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் தொடர் நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பில் வழங்கப்பட்ட பதிலில் தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை, கொழும்பில் வெள்ளவத்தையில் அமைக்கப்பட்ட 7 மாடி சட்டவிரோதக் கட்டடம் அண்மையில் இடிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்ததுடன், 23 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் பெருநகர அபிவிருத்தி அமைச்சு, கொழும்பில் அமைந்துள்ள சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக தீவிர மான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. (ற-5)

குருமட வளாகத்தில் தூய ஆவி பெருவிழா

கொழும்புத்துறை, மே30

தூய ஆவியானவர் பெருவிழாத் திருவிழிப்பு ஆராதனை யாழ். புனித மாட்டீன் குருமட வளாகத்தில் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 6.30 மணிமுதல் மறுநாள் 4 ஆம் திகதி அதிகாலை 5 மணிவரை நடைபெறவுள்ளதாக யாழ். மறை மாவட்ட இறைதியானக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

தியானங்கள், ஆராதனைகள், நற்கருணை ஆசீர் என்பவற்றைத் தொடர்ந்து ஞாயிறு அதிகாலை 4 மணிக்கு யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் பெருவிழாத் திருப் பலியும் இடம்பெறும்.

அதேவேளை ஆயத்த வழிபாடுகள் பழைய பூங்காவீதியில் அமைந்துள்ள இறைதியான இல்லத்தில் 31 ஆம் திகதி புதன்கிழமை முதல் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள அருட்தந்தை மாட்டீன் ராஜ், சகோதரன் இருதயசாமி குழுவினர் வழிபாடுகளை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-135)

ஆலயப் பெருந்திருவிழா

தென்மராட்சி, மே 30

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

பெருந் திருவிழாக் கிரியைகள் கிரியாசிரோமணி சிவசிறி ந.இராஜேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (த-9)

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன், வாழைகளும் கட்டப்பட்டுள்ளன. அப்பாத்துரை விநாயகமூர்த்தி தென்மராட்சி, சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (ற-9)

மூன்று நாள்கள் மட்டுமே பல் மருத்துவரின் சேவை

அச்சுவேலி வைத்தியசாலையில் நோயாளர்கள் பெரும் சிரமம்

அச்சுவேலி, மே 30

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் பல் மருத்துவரின் சேவை வாரத்தில் மூன்று தினங்களுக்கு மட்டும் நடைபெறுவதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

அச்சுவேலி பிரதேச மருத்துவனையில் முழுநேர சேவையில் இருந்த பல் மருத்துவர் ஓய்வு பெற்றதை அடுத்து வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று தினங்கள் மட்டும் கடமை புரிவதற்கு சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையில் உள்ளவர்களில் ஒரு மருத்துவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திங்கள், புதன், வெள்ளி தினங்களில் பொது விடுமுறை மற்றும் வைத்தியரின் சுயவிடுமுறை ஆகியன வந்தால் பல் மருத்துவரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்குக் காத்திருக்கவேண்டி இருப்பதோடு பல் மருத்துவ சிகிச்சையை உரிய வேளையில்பெற்றுக்கொள்ள முடியாமல் அவதிப்பட வேண்டியுள்ளது.

அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் வலி.கிழக்குப் பிரதேசம் மட்டுமல்ல வலி.வடக்கு, வலி.தெற்கு, வடமராட்சி, தென்மராட்சி பகுதி மக்களும் சேவையைப் பெற்றுவருகின்றனர்.

நோயாளரின் வசதியைக் கருத்திற் கொண்டு பகுதி நேரமாகச் சேவை ஆற்றிவரும் பல் வைத்தியர் அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் முழுநேரக் கடமை புரிவதற்குச் சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றனர்.

(த-11)

வழுக்கையாற்று திட்டத்துக்கு மக்கள் ஒத்துழைப்புத் தேவை

தெல்லிப்பழை பிரதேச செயலர் தெரிவிப்பு

வழுக்கையாற்று அபிவிருத்தித் திட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டியுள்ளது என்று தெரிவித்தார் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் சிவசிறி.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வழுக்கையாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்தத் திட்டம் தொடர்பான தகவல்கள், ஆவணங்களை இங்குள்ள நிறுவனங்கள், சமூக மட்ட அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்கி விரைவாகத் தந்தால் வழுக்கையாற்றுத் திட்ட அபிவிருத்திப்பணிகளை தடையின்றி மேற்கொள்ளமுடியும்.

யாழ்ப்பாணத்தில் ஒரே ஆறு வழுக்கையாறாகும். இதனூடாக வரும் நீரை வெறுமனே கடலுக்கு அனுப்பாமல் பிரதேசத்தில் உள்ள குளங்களில் தேக்கி விவசாய அபிவிருத்தியை மேற்கொள்ளமுடியும். மக்கள் வாழும் பகுதியில் நீர் தேங்கவிடாது சகல வாய்க்கால்களையும் சீரமைத்து ஒருங்கிணைத்து பிரதான வாய்க்காலூடாக நீரோட்டத்தை ஏற்படுத்தி வழுக்கையாற்றின் மூலம் பயன்பெற முடியும் - என்றார்.

கட்டுவன் தெல்லிப்பழை ஊடாக வரும் பிரதான வாய்க்கால் அளவெட்டி பிளாக்கை குளத்துடன் இணையும் பிரதான கால்வாய்க்குமிடையில் தூர்ந்து கால்வாய் எங்குள்ளது எனத் தெரியாதுள்ளது. அந்தப் பகுதி விவசாயிகள் அதனைக் கண்டுபிடித்து பிரதான வாய்க்காலுடன் இணைக்க முன்வந்தால் உடனடியாக வேலையை ஆரம்பிக்க முடியும் - என்று கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப் பட்டது. (ற-8-3ல)

பெண்களுக்கான அலங்காரத் தோடுகள் தற்போது நவீன வடிவில் சந்தைக்கு வந்துள்ளன. இவை 400 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரு. துறைமுக அகலிப்புக்காக காணி கையகப்படுத்த எதிர்ப்பு

முன்னர் கூறப்பட்டதை விடவும் மேலதிகமாக தற்போது கையகப்படுத்தப்படுகின்றது எனக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 30

பருத்தித்துறை துறைமுக அகலிப்பின்போது தமது படகுகளை நிறுத்தும் கடற் கரைப்பகுதியை கையகப்படுத்தக் கூடாது என்று தெரிவித்து பருத்தித்துறை, கொட்டடி மீனவர்கள் நேற்று அமைதிப் பேரணியில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை கொட்டடி கடற்றொழிலாளர் சங்க அலுவலகம் முன்பாகத் திரண்ட மீனவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு துறைமுக வீதி, நகர பேருந்து நிலையம், பிரதான வீதி ஊடாக பிரதேச செயலகத்தை அடைந்தனர். பேரணியில் கொட்டடி மீனவர்கள், கொட்டடி விளையாட்டுச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

கொட்டடி மீனவர் சங்கத் தலைவர் எஸ். தேவராஜா தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனிடம் கையளித்தார். மனுவை மாவட்ட செயலரிடம் கையளித்து, உரிய அமைச்சின் கவனத்துக்கு இந்தப்பிரச்சினை கொண்டு செல்லப்படும் என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட முனை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும் இது தொடர்பான மனு ஒன்றையும் கையளித்துள்ளது.

"பருத்தித்துறை துறைமுக அபிவிருத்திக்கு நாங்கள் எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அபிவிருத்தி நடைபெற வேண்டும். துறைமுகத்தில் இருந்து கிழக்குப் புறமாக கடற்கரை வளாகத்தில் உள்ள நடராஜர் கலை அரங்கு வரையான காணிகளே கையகப்படுத்தப்பட வேண்டும். அதற்கு அப்பால் முனை வரையும் உள்ள காணிகளை கையகப்படுத்தப்படுவதை எதிர்க்கின்றோம். இந்த நடவடிக்கையால் கொட்டடியையும், அதனை அண்டிய பகுதியையும் சேர்ந்த மீனவர்களின் சுமார் 250 படகுகளை நிறுத்த இடம் இல்லாமல் போகும். தொழில் வாய்ப்புக்களையும் இழக்க நேரிடும். இந்த விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும்." என்று வடமராட்சி வடக்கு கடற்கரைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எம்.அருள்தாசன் தெரிவித்தார்.

"பருத்தித்துறை துறைமுக அபிவிருத்திக்கு துறைமுகம் அமைந்துள்ள கிழக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளில் காணிகள் கையகப்படுத்தப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. கிழக்குப் பகுதியில் நடராஜர் கலை அரங்கு வரையே காணிகள் கையகப்படுத்தப்படும் என்று மீனவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது நடராஜர் கலை அரங்குக்கு அப்பால் முனை வரையான கரையோரக் காணிகள் கையகப்படுத்தப்படவுள்ளன என்று தெரியவருகின்றது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நாம் பேரணி நடத்துகின்றோம்." என்று பேரணியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

"பருத்தித்துறை துறைமுக மீள்கட்டமைப்பை பார்வையிட வந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடமும் இந்தப் பிரச்சினை தெரியப்படுத்தப்படுத்தப்பட்டதா?" என்று பிரதேச செயலரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

"இது தொடர்பாக அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகின்றேன்." என்று பிரதேச செயலர் பதிலளித்தார்.

(ற-10,173,26)

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்

குழாய்க் கிணறு மூலமான நீர் வழங்கலை முழங்காவிலில் இடைநிறுத்தத் தீர்மானம்

கிளிநொச்சி, மே 30

கிளிநொச்சி, முழங்காவிலில் குழாய்க் கிணறுகள் மூலம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொள்ளும் நீர் வழங்கலை உனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. முழங்காவிலில் பெரும் குழாய்க் கிணறுகள் அமைத்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நீர் விநியோகம் மேற்கொள்கின்றது. அதனால் அந்தப் பகுதி நிலத்தடி நீர் வெகுவாகப் பாதிப்படைகின்றது. அங்குள்ள கிணறுகளின் நீர்மட்டம் சடுதியாகக் குறைந்துள்ளது என்று கூட்டத்தில் பிரதேச பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டின.

இது தொடர்பாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. நீர் விநியோகத்தை உடனடியாக இடைநிறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பகுதியில் நிலத்தடி நீர் தொடர்பாக தேசிய நீர் வள ஆய்வு சபை ஆய்வு செய்ய வேண்டும் என்றும், அந்தச் சான்றிதழின் அடிப்படையில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் வரை இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

மாவட்டத்தில் அதிக குழாய்க் கிணறுகள் உருவாக்கப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. குழாய்க் கிணறு அமைக்கும் இயந்திரம் வைத்திருப்பவர்கள் பொலிஸார் முன்னிலையில் அழைக்கப்பட்டு அனுமதி பெறாது குழாய்க் கிணறுகள் அமைக்கக் கூடாது என்றும், வயல்பிரதேசங்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கக் கூடாது என்றும் உடனடியாக அறிவுறுத்தப்பட வேண்டும் என்றும், அதன்பின்னரும் இது தொடருமானால் உடனடியாகச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ற-101)

நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்ட இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் பொலிஸார் நேற்றுச் சேகரிக்கப்பட்டன. யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. உதவிகள் வழங்க விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதி வரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்திலோ பொருள்களை ஒப்படைக்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்தனர். உதவிகள் வழங்குவோர் பொருள்களை மட்டுமே கையளிக்க வேண்டும் என்று பொலிஸார் கோரியுள்ளனர். (ற-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குத்தகை தொடர்பான வழக்குத் தள்ளுபடி

அச்சுவேலி, மே 30

அச்சுவேலி பொதுச் சந்தையில் அமைந்துள்ள கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கு வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் கேள்விப் பத்திரம் கோரியதற்கு எதிராகக் கடை இலக்கம் 11இன் குத்தகைக்காரர் சார்ப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு யாழ். மேல் நீதிமன்றால் தள்ளுபடி செய்யப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்றத்தில் கடை இலக்கம் 11இன் குத்தகைக்காரர் சார்பில் உறுதிகேள் எழுத்தானை (தடை உத்தரவு) கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வழக்கை விசாரணைக்கு எடுத்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி எம். இளஞ்செழியன் வழக்கைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

கடந்த ஆண்டு வலி. கிழக்குப் பிரதேச சபைச் செயலாளரால் அச்சுவேலிச் சந்தையில் அமைந்துள்ள கடைகளின் இலக்கம் குறிப்பிடப்பட்டு குத்தகைக்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டிருந்தது. குத்தகை கேள்வி கோரல் தொடர்பாக பத்திரிகைகளில் விளம்பரமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. (ற-11)

லொத்தர் சீட்டை காணவில்லை என தவறான முடிவை நாடிய நபர்

யாழ்ப்பாணம், மே 30

மூன்று கோடி ரூபா பரிசு விழுந்த அதிர்ஸ்டலாபச் சீட்டை மனைவி ஒளித்து வைத்துவிட்டார் என்ற கவலையில் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார் என்று கூறப்படும் சம்பவம் அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் நடந்துள்ளது.

அநுராதபுரம், விஜயபுர பிரதேசத்தில் வசித்த இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் அதிர்ஸ்டலாபச் சீட்டில் மூன்று கோடி ரூபா பரிசு கிடைத்ததாகவும், அந்தச் சீட்டை மனைவி வேண்டுமென்றே ஒளித்துவிட்டார் என்றும் குற்றஞ்சாட்டி வந்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மனைவி மகளின் வீட்டுக்குச் சென்றிருந்தபோது இவர் சமையலறையில் தூக்குமாட்டி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இலங்கை மகாவலி அதிகாரசபையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற இவர் ஏற்கனவே ஒரு முறை மனைவியுடன் வாக்குவாதப்பட்டு கிருமிநாசினியை அருந்தி உயிரை மாய்க்க முயன்றிருக்கிறார் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

தனக்கு மூன்று கோடி ரூபா பரிசு விழுந்திருப்பதாக அவர் வெறுமனே கற்பனை செய்துகொண்டிருந்தார் எனவும், அவ்வாறு பரிசு விழுந்திருந்தால் சீட்டை ஒளிக்கவேண்டிய அவசியம் எதுவும் தனக்கு இருக்கவில்லை எனவும் மனைவி வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ற-5)

நாடாளுமன்றுக்குள் வெள்ளம் புகாதவாறு முன்னேற்பாடுகள்

கொழும்பு,மே 30
கடும் மழையால் வெள்ளப்பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் வெள்ளம் உட் செல்வதைத் தடை தடுப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
கடந்த இரண்டு நாள்களாகக் கடும் மழை பெய்யாத காரணத்தால், நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள தியவன்ன ஓயாவின் நீர் மட்டம் அதிகரிக்க வில்லை. இன்றும், நாளையும் கடும் மழை பெய்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றுக்குள் வெள்ளம் உட்புகக் கூடும் என்ற அச்சத்தில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
நாடாளுமன்ற நுழைவாயில் மற்றும் சுற்றுப்புறங்களில் இலங்கைக் கடற்படையினர் மணல் மூடைகளை அடுக்கியுள்ளனர்.
அவசர நிலைமைகளைச் சமாளிக்கும் வகையில், 20 அதிகாரிகளைக் கொண்ட அனர்த்த முகாமைத்து வக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.
தியவன்ன ஓயாவில் வெள்ளம் ஏற்பட்டு நீர்மட்டம் அதிகரித்தால், நாடாளுமன்றுக்குள் 1992ஆம் ஆண்டும், 2010ஆம் ஆண்டும் வெள்ளம் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகள். உலங்குவானூர்தியில் இருந்து நேற்று எடுக்கப்பட்ட படங்கள்.

இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுப் பன்னாடுகள் தயார்

அரசின் கோரிக்கையை அடுத்து

கொழும்பு,மே 30
வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு உதவ, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளும், பன்னாட்டு அமைப்புகளும் முன்வந்துள்ளன.
இடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு, இலங்கை அரசால் பன்னாடுகளிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு அமைவாக, மேற்படி நாடுகளும், அமைப்புகளும், உதவ முன்வந்துள்ளன.
இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் இணைந்து, தொடர்ந்து நிவாரணங்களை வழங்கவும், மீட்புப் பணிகளில் ஈடுபடவும், ஐ.நா. அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.
அதேவேளை, பாகிஸ்தான் அரசும், இலங்கைக்கு உதவத் தயாரான நிலையில், நிவாரணப் பொருள்களை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது. இதேவேளை, இலங்கையில் இடர்களுக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு உதவுவதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், 15 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கத் தீர்மானித்துள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் தெரிவித்தார்.
அத்துடன், அமெரிக்காவின் நிவாரணக் குழுவொன்றையும் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.
இதேவேளை, இந்திய அரசின் நிவாரணப் பொருள்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் அடங்கிய இரு கப்பல்கள், ஏற்கனவே இலங்கை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ஐ)

இடர் ஏற்பட்ட பிரதேசங்களில் 5,000 பொலிஸார் கடமையில்

கொழும்பு, மே 30
பேரிடரில் சிக்கிய 123 பேரின் உயிர்களை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். அவர்களுக்காக விடுமுறையில்லாது பொலிஸார் பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.
இடர் நிலமை தொடர்பில், இடர்முகாமைத்துவ அமைச்சில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நிவாரணப் பணி மற்றும் மீட்புப் பணியில் 5 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். அவர்கள் 123 உயிர்களைக் காப்பாற்றியுள்ளனர். பாதிக்கப் பட்ட பகுதிகளில் எந்தவொரு கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களும் பதிவாகவில்லை. 23 பொலிஸ் நிலையங்கள் இடரில் பாதிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றிலுள்ள ஆவணங்கள் பத்திரமாக உள்ளன. இடர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்கள் வரவேண்டாம். இதனால் மாத்திரம் 18 பேர் உயிரிழந்துள்ளனர். என்றார்.
இதேவேளை பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக லங்கா சதொச நிறுவனம் தயாராகவுள்ளது என்றும், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் இலவசமாக இந்தப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.
(ற-5)

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகளில் இலங்கை இராணுவத்தினர், துருப்புக்காவி கவச வாகனங்களைப் பயன்படுத்தி வருகின்றனர்.
அதிக ஆழமற்ற நீர்ப் பகுதிகளிலும் பயணம் செய்யக் கூடிய 15 பி.ரி.ஆர் மற்றும் டபிள்யூ.எம்.இசட் துருப்புக் காவி கவச வாகனங்கள் இந்த மீட்பு நட வடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு பகுதியில் வெள்ளத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்பதற்கும், இறந்தவர்களின் உடல்களை எடுத்துச் செல்வதற்கும் இந்தக் கவச வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இடரால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மே 30
வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்குமாறு கல்வியமைச்சர் அகிலவி ராஜ் காரியவசம் அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.
பாதிக்கப்பட்ட மாணவர்களின் விவரங்களைச் சேகரித்து கல்வியமைச்சுக்கு உடனடியாக அனுப்புமாறு அவர் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார் என்று கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
(ற-5)

நீர்த்தேக்கங்கள் நிரம்பியதால் நீர்மின் உற்பத்தியும் அதிகரிப்பு

கொழும்பு,மே 30
தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழையால் நாட்டிலுள்ள பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. அதனால் நீர்மின் உற்பத்தி மீண்டும் 25 வீதத்தால் உயர்ந்துள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
கடும் வறட்சியால் இரு வாரங்களுக்கு முன்னர் பிரதான நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. அதனால் தேசிய மின் கட்டமைப்புக்கு 10 15 வீத நீர் மின்சாரமே கிடைத்து வந்தது.
எனினும், கடந்த வாரம் முதல் பெய்துவரும் பலத்த மழையால் நீர்த்தேக்கங்களின் மட்டம் அதிகரித்துள்ளது. அதனால் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படும் நீர் மின்சாரம் 25 வீதமாக அதிகரித்துள்ளது.
பிரதான நீர்த்தேக்கங்களான காசல்ரீ, மவுசாகலை, கொத்மலை, ரந்தெனிகல, லக்ஷபான ஆகியவற்றின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மழை தொடர்ந்தால் அதற்கேற்ப நீர்மின் உற்பத்தியும் அதிகரிக்கும் என்று இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக் ஷன ஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

இரு ஆலயங்களின் உண்டியல் உடைத்து பணம் திருட்டு

வவுனியா, மே 30

வவுனியாவில் இரு ஆலயங்களின் உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவங்கள் கடந்த வெள்ளிக்கிழமையும், நேற்று முன்தினமும் நடந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை சூசைப்பிள்ளையார் குளம் பகுதியிலுள்ள புனித அந்தோனியார் திருச்சொரூபத்திலுள்ள உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது, நேற்று முன்தினம் இரவு பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்திலுள்ள மூன்று உண்டியல்கள் ஆலயத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டு 100 மீற்றருக்கு அப்பாலுள்ள வயல்பகுதியில் வைத்து உடைக்கப்பட்டு அவற்றிலிருந்த பணம் திருடப்பட்டது என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நரசிங்கர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் நான்கு தடவைகள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தை அண்டி மதுபானப் போத்தல்கள் காணப்படுகின்றன. திருட்டுக் கும்பல்தான் அந்த மது அருந்தியிருக்கலாம் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். திருட்டுச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களை நான்கு சந்தர்ப்பங்களிலும் பொலிஸார் கைது செய்யவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு வருடத்திற்கு முன்பு பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்துக்கு இரவு பாதுகாப்பு கடமைக்கு என ஆலய நிர்வாக சபையினரால் ஊழியர் ஒருவர் தனியார் நிறுவனத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் இரவும் இவர் கடமையில் இருந்துள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் இரவு கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியரிடமும் விசாரணைகள் மேற்கொண்டனர். (ற - 10)

பொலித்தீன் அற்ற சுற்றாடலை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம்

கிளிநொச்சி, மே 30

பொலித்தீன் அற்ற சுற்றாடலை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் நேற்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் ஜெயந்தி தன பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொலித்தீன் பாவனையற்ற சுற்றாடலை உருவாக்குவோம் என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு மாணவர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டதுடன், சத்தியபிரமாணமும் செய்தனர்.

நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா மற்றும் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கல்வி அமைச்சர் உரையாற்றுகையில் இயற்கை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்கள் நினைவு கூரப்பட்டனர். (ற -35)

மெல்போர்னுக்குவிமான சேவை

கொழும்பு,மே 30

இலங்கைக்கும் மெல்போர்னுக்கும் இடையில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி முதல் நேரடி வானூர்தி சேவை ஆரம்பிக்கப்படும் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் வானூர்திச் சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

மெல்போர்ன் - கொழும்புக்கு இடையிலான நேரடிப் பயணங்களுக்காக A330 300 ரக வானூர்தி பயன்படுத்தப்படவுள்ளது. அதில் 283 பயணிகள் பயணம் செய்ய முடியும். நேரடி சேவையின் மூலம் பத்து மணித்தியாலங்களில் இலங்கையிலிருந்து மெல்போர்ன் செல்ல முடியும் எனவும் நிறுவனம் தெரிவித்தது. (ற -ஐ)

ஆஸ்திரேலியா இரங்கல்

இலங்கையில் ஏற்பட்ட இடர்களில் உயிரிழந்த மக்களுக்கு ஆஸ்திரேலியா இரங்கல் வெளியிட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அயலுறவுத்துறை அமைச்சர் ஜூலி பிஷொப், இலங்கையின் பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ஸ டி சில்வாவுக்கு இரங்கல் செய்தியை அனுப்பியுள்ளார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இலங்கைக்குத் தேவை ஏற்பட்டால் உதவிகளை வழங்கவும் ஆயத்தமாக இருக்கிறோம் என்று ஆஸ்திரேலியா குறிப்பிட்டுள்ளது. (ற - ஐ)

மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 10 . 1931

இறப்பு
28 . 05 . 2017

திருமதி அருள் (கிளி ரீச்சர்) துரைசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை, அரியாலை)

யாழ். அரியாலை, நீர்நொச்சித் தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருள் துரைசாமி 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - கனகம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பு துரைசாமியின் அன்பு மனைவியும், சஞ்சயன், சலந்திரன், வானதி, சுமதி, சுபாங்கி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி கதிரவேலு மற்றும் தியாகராசா, காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் பரமேஸ்வரி குணம், யோகராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.05.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50, அருளம்பலம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.**

தகவல்:-
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி இரஞ்சிதாதேவி தர்மராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்)

யாழ்ப்பாணம், சீனியர்லேன், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், A9 வீதி, புளியங்குளத்தைப் புகுந்தவிடமாகவும், கொழும்பு, இல.36 1/6, ஈ.எஸ்.பொன்னாந்து மாவத்தை, வெள்ளவத்தை மேரு இல்லத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி இரஞ்சிதாதேவி தர்மராஜா நேற்று முன்தினம் (28.05.2017) ஞாயிற்றுக்கிழமை தனது 63 ஆவது வயதில் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - தையல்முத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான உடையான் நாகலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகலிங்கம் தர்மராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விவேகானந்தம், குலசிங்கம் மற்றும் சீதாதேவி, பத்மலஷ்சுமி, பொன்குமார், சிறிகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசமலர், யோகராஜா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது புளியங்குளத்து இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**A9வீதி, புளியங்குளம் சந்தி,
புளியங்குளம்.**

தகவல்
தர்மராஜா (கணவர்)

077 743 0976

மரண அறிவித்தல்



பிறப்பு
14 . 03 . 1965

இறப்பு
27 . 05 . 2017

போதகர் சாந்தன் சந்திரசேகரன்

(போதகர் - தீர்க்கதரிசன தேவசபை காந்திநகர், திருகோணமலை)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தீர்க்கதரிசன தேவசபையின் ஸ்தாபகரும் யூதாவின் செங்கோல் ஒளி ஒலி நடா ஊழியத்தின் ஸ்தாபகருமான போதகர் சாந்தன் சந்திரசேகரன் அவர்கள் 27.05.2017 சனிக்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் திரு. திருமதி கண்ணன்சாந்தன் - செல்லம்மாள் தம்பதிகளின் அன்புமகனும் சுதாமதியின் அன்புக்கணவரும், ஷேம், ஸ்டீபன், ஷேபா ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற போதகர் டேவிட் (இந்தியா) மற்றும் சாந்தன், கண்ணன் (திருகோணமலை), அழகி (அம்பாறை), வள்ளி (இந்தியா), கண்ணம்மா (மட்டக்களப்பு), காலஞ்சென்ற மாரியம்மா மற்றும் லிங்கேஸ்வரி (இந்தியா), சரஸ்வதி (திருகோணமலை), சாந்தா (இந்தியா), ராகினி (திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராஜா,ரெட்ணசிங்கம் மற்றும் ராஜி (பிரான்ஸ்), சுதர்ஷன்(பிரான்ஸ்), சிவக்குமார் (மட்டக்களப்பு), முரளி (கொழும்பு), கோமலேஸ்வரன் (வவுனியா), ஜெயசீலன் (பிரான்ஸ்), பிரேமன் (கொழும்பு), ஸ்ரீரங்கராஜா (கொழும்பு), காலஞ்சென்றவர்களான பத்மாவதி, தேவராணி மற்றும் கௌரிகலாதேவி (பிரான்ஸ்), பாமா (பிரான்ஸ்), கல்யாணி, யோகராணி (கொழும்பு), கிருபா (வவுனியா), கனகசுந்தரி (பிரான்ஸ்), சாந்தநாயகி (கொழும்பு), மலர் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லடக்க ஆராதனைகள் தீர்க்கதரிசன தேவசபை, காந்திநகரில் இடம்பெற்று நல்லடக்கத்துக்காகப் பூதவுடல் பெரிய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தீர்க்கதரிசன தேவசபை,
காந்திநகர்,திருகோணமலை.**

தகவல்
குடும்பத்தினர்.

077 415 9909

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அரசியல் நேர்மை கொண்டவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 30

அரசியலில் நேர்மையும், அனைவரையும் அரவணைத்துச் செயற்படும் உயரிய பண்பும் கொண்டு விளங்கிய அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இழப்பு தமிழ் மக்களுக்கும் அவர் சார்ந்திருந்த எமது கட்சிக்கும் பேரிழப்பாகும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விநாயகமூர்த்தியின் மறைவையிட்டு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டபோது, அவர்களுக்கெதிரான வழக்குகளில் அவர்கள் சார்பாக முற்பட்டு அவர்களின் விடுதலைக்கான முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வந்தார்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது உறவினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுக்கும் எனது சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது.

(ற-5)

மலையக இளைஞர்களுக்காக போராடியவர் விநாயகமூர்த்தி

கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் இரங்கல்

யாழ்ப்பாணம், மே 30

மலையக இளைஞர்களின் விடுதலைக்கும், மலையக மக்கள் முன்னணியின் அரசியல் வரலாற்றிலும் அதன் ஆரம்பத்திலும், மறைந்த அப்பாத்துரை விநாயகமூர்த்தி பெரும் பங்களிப்பைச் செய்துள்ளார். இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மூத்த சட்டத்தரணியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயமூர்த்தியின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் உள்ளதாவது

மூத்தசட்டத்தரணிஅப்பாத்துரைவிநாயகமூர்த்தியின்மறைவுபெரும் இழப்பாகும். மலையக மக்கள் முன்னணி ஆரம்பித்த காலத்தில் மறைந்தஎமதுதலைவர் பெரியசாமி சந்திரசேகரனுக்கு பலவழிகளிலும் உதவி செய்தவர். இன்று எங்களுடைய கட்சி தலைநிமிர்ந்து மலை யகத்தில் இருப்பதற்கு இவரும் ஒரு கார ணம். எங்களுடைய கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் 1991 ஆண்டு காலப்பகுதியில் அன்றைய அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாககூறிமலையகத்தில்பலஇளைஞர்களை கைது செய்தது. அந்த நேரத்தில் ஒரு மூத்த சட்டத்தரணியாகநீதிமன்றத்தில்முன்னிலையாகி எங்களுடைய மலையக இளை ஞர்களைவிடுவிப்பதில்பெரும்பங்காற்றியவர். இன்று பல இளை ஞர்கள் உயிரோடு இருப்பதற்கு இவர் ஒரு முக்கிய காரணகர்த்தாவாக விளங்கியவர்.

இவருடைய மறைவு எங்களுடைய மலையக இளைஞர்களுக்கு ஒரு பெரும் இழப்பாகும். இந்த நேரத்தில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் என்ற வகையில் அவருடைய குடும்பத்தாருக்கு எனது ஆழந்த அனுதாபங்களை எங்களு டைய கட்சியின் சார்பாகவும் மலையக இளைஞர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது.

(ற-10)

தமிழர்களுக்காக விநாயகமூர்த்தி ஆற்றிய பணிகள் அளப்பரியன

யாழ். இந்து சமயப் பேரவை இரங்கல்

யாழ்ப்பாணம், மே 30

பயங்கரவாதத் தடைச் சட்ட அடக்குமுறைகளின் போதும், ஏனைய அராஜக நடவடிக்கைகளின்போதும் மக்களின் நலனைக்காக்கவும், அநீதியின்பிடியில்இருந்து மீட்கவும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆற்றிய பணி அளப்பரியது.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி. சக்திகிரீவன் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் மறைவையிட்டு விடுத்துள்ள இரங்கல் அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில்உள்ளதாவது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மூத்த சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் மறைவு ஈடு செய்ய முடியாதபேரிழப்பாகும். கடந்தகாலப்போர்ச் சூழ்நிலையில் எந்தவித காரணமும் இன்றிக் கைது செய்யப்பட்ட இளைஞர்களை மீட்க அவர் அர்ப்பணிப்புடன் ஆற்றிய பணி மக்கள் நெஞ்சங்களில் ஆளப்பதிந்துள்ளது.

இந்து நிறுவனங்களுக்கும் இந்து ஆலயங்க ளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளையும் துணிந்து நின்று எதிர்த்த பெருமை அவரைச் சாரும். அவரின்மறைவால்துயருறும்அன்பர்களுடன் இணைந்து நாமும் அஞ்சலி ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம் - என்றுள்ளது.

(ற-10)

17 ஆம் ஆண்டு நினைவு துளிகள்...

சின்னத்துரை கனகசபை
(ஓய்வு நிலை இராணுவ அதிகாரி)

சிதம்பரப்பிள்ளை விசாலாட்சி

திதி: 30.05.2017

" ஈஸ்வரி இல்லம் "
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

சு.பரமேஸ்வரன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
செல்லையா சிவப்பிரகாசம்

மலர்வு
12.12.1943
உதிர்வு
03.06.2014

திதி: சஷ்டி திதி (30.05.2017)

ஆண்டுகள் மூன்று ஓடிமறைந்தாலும்
ஆறாது எம்மனத் துயரம்
எம் ஆழ்மனதில் உங்கள் அன்புமுகம்
என்றென்றும் அகலாது நிலைத்திருக்கும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
ரேகா
சூரியராஜ்

தோற்றம்
05.02.1984

மறைவு
09.06.2016

ஓராண்டு ஓடியும், ஓயவில்லை உன் நினைவு!
எம் மனைவிட்டு, எம் உறவில் இருந்து உதிர்ந்துவிட்ட
எமது உயிர்ப்பூவே!! பல யுகம் ஓடினாலும்!!!
ஓயாது உன் நினைவலைகள் !!!
நீ பெற்ற உன்பிள்ளை
துடிக்கிறது மீண்டும் உறவாட எம்முடன் வருவாய் என்று,
ஒளியிழந்த குடும்பத்துக்கு மீண்டும் ஒளியூட்ட
எம் உறவில் வந்து உத்தித்திடுவாய்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உன் நினைவுடன்

அண்ணாசிலையடி,
கரணவாய், கரவெட்டி.

தாயார் - இலங்கையன் சின்னம்மா
மகள் - டனுஸ்ரிகா.

31 ஆம் நாள் நினைவு தினமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

பிறப்பு
01 . 11 . 1940

இறப்பு
30 . 04 . 2017

திருமதி விசுவலிங்கம் செல்லம்மா

கடந்த 30.04.2017 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கு அமரர் விசுவலிங்கம் செல்லம்மா அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 01.06.2017 வியாழக்கிழமை எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசனம் வழங்கப்படும். இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம். மேலும் அன்னார் நோயுற்ற காலங்களில் வைத்திய உதவி புரிந்த குடும்ப வைத்தியர் டாக்டர் சுபாநாதன் அவர்களுக்கும் மற்றும் வைத்திய உதவி புரிந்தவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ.விசுவலிங்கம் (கணவர்), வி.குணசீலன்
குடும்பத்தினர்.

கைதடி வடக்கு, கைதடி - 021 321 0734

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
23 . 11 . 1958



விண்ணில்
09 . 06 . 2016

அமரர் குழந்தைவேலு குலேந்திரராஜன் (ராஜன்)

(முன்னாள் ராஜன் பொடி பில்டேர்ஸ் உரிமையாளர்)

ஓராண்டு ஒரு நொடியாய் ஓடினாலும், ஆறவில்லை அப்பா
எம் துயரம் ஒவ்வொரு விநாடியும்
உன் எழில் முகம் காணத்துடிக்கின்றது எம் இதயம்
இரவு பகல் என்றில்லாது கணப்பொழுதும் கனவிலும்
நினைவிலும் நிறைந்து எம்மை வழிநடத்துபவரே
இறை ஒளியில் அமைதியுடன் இணைந்து எமக்காய்
பரிந்துரைக்க இறைவனை இறைஞ்சுகின்றோம் இடைவிடாது

எமது குடும்ப குலவிளக்கு ராஜனின் முதலாம் ஆண்டு நிறைவுக் கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோச [illegible] அழைக்கின்றோம்.

[illegible]
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
077 661 2464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் சரிவு பாதித்த பகுதிகளில் மீட்பு பணிகளைத் துரிதப்படுத்துக

மகிந்த ராஜபக்ச கோரிக்கை

கொழும்பு, மே 30

இடர் நிகழ்ந்த அனைத்து பகுதிகளிலும், மீட்பு நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படவேண்டும் என்று அரச முன்னாள் தலைவர் மகிந்த ராஜபக்ச வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அசாதாரண நிலமை காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இடர் குறித்து நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

அதில் உள்ளதாவது

அசாதாரண காலநிலை காரணமாக மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். அண்மைக் காலங்களில் நாம் எதிர் நோக்கியுள்ள மோசமான அழிவுகள் இவையாகும். வெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மக்களுக்கான தகவல்களை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரச, தனியார் ஊடகங்களின் பங்களிப்புக்கள் பாராட்டப்பட வேண்டியவையாகும். என்றுள்ளது. (ற-ஜ)

இடர் பாதித்த இடங்களில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு

கொழும்பு,மே 30

இடர்கள் நிகழ்ந்த பகுதிகளில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடர் நிலமைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பாலான எரிபொருள் விற்பனை நிலையங்கள் வெள்ளம் காரணமாக மூடப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் உணவுகளைத் தயார் செய்வதற்கு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடி தண்ணீர் விநியோகமும் தடைப்பட்டுள்ளது. நில்வளாகங்கை பெருக்கெடுத்ததன் காரணமாக, முதலைகளின் ஆபத்து அதிகமாகியுள்ளது. தேவையற்ற விதத்தில் நீரில் இறங்குவதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று திணைக்களம் அறிவித்துள்ளது. (ற-ஜ)

வேலையாள்கள் தேவை

- காசாளர்
- விற்பனையாளர்

யாழ். நகரில் உள்ள வெதுப்பகம் ஒன்றுக்குத் தேவை

(A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது)

(இருபாலாரும் விரும்பத்தக்கது)

கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

077 314 7580

குழந்தையின்மை, ஆண்மைக்குறைவிற்கு நிரந்தர தீர்வு

உயிரணுக்கள் உற்பத்தியில் சாதனை

எங்களது மருந்தை ஒரு சில நாட்கள் மட்டும் தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் செயற்கையாக இல்லாமல் இயற்கையாகவே குழந்தை பாக்கியம் பெறலாம். திருமணத்திற்கு தயாராகும் வாலிபர்கள் மற்றும் முதியவர்கள் எங்களது சிகிச்சையின் பலனை முதல் மாதத்திலேயே முழுமையாகப் பெற்று இல்லறவாழ்வை இனிமையாக ஆரம்பிக்கலாம்

பாரம்பரிய சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்கள்

செல்: 0091 9842457673, 0091 9600336009

இலங்கை செல்: 075 4154364

வைத்திய கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்

2006 முதல் இன்றுவரை 1261 மாணவர்கள்

இல. 40, பலாலி வீதி, (அரியகுளம்)	No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி.	IELTS
03.06.2017 சனி 8.00	29.05.2017 பி.ப. 4.00	Life Skills A1, B1
0779 789 456	021 320 2973	வகுப்புக்களும்.....
021 221 7781		

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

அறிவித்தல்

கட்டட திறப்பு விழா ஒத்திவைப்பு

30.05.2017 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சியில் அமைந்த விவசாயபீட மற்றும் பொறியியற்பீடத்தில் நடைபெற இருந்த இந்திய மக்களின் உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட கட்டடத்தின் உத்தியோகபூர்வ கையளித்தல் மற்றும் திறப்புவிழா நிகழ்வு நாட்டின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இது தொடர்பாக தங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கும் சிரமங்களுக்கும் மனம் வருந்துகின்றோம்.

பதிவாளர்.

29.05.2017

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

வருடாந்த மஹோற்சவம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது 12.06.2017 அன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 15 நாள்கள் வெகு விமர்சையாக நடைபெறுகையில் நாள்தோறும் விசேட பூசைகள், மகேஸ்வர பூசைகளும் இடம்பெறுவதோடு கலாசார நிகழ்வுகளும், இரவு 10.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதனால் அம்பாள் அடியவர்கள் கலாசார ஆடைகள் மற்றும் தங்களின் பாதுகாப்புக்குட்பட்ட அணிகலன்களையும் அணிந்து ஆசார சீலர்களாக ஆலயத்துக்கு வருகை தந்து அம்பிகையின் அருளைப் பெறுவீர்களாக.

விசேட உற்சவங்கள்

பொங்கல்	- 12.06.2017 (திங்கள்)
தேர்த்திருவிழா	- 24.06.2017 (சனி)
தீர்த்தத் திருவிழா	- 25.06.2017 (ஞாயிறு)

கடை வாடகை ஒப்பந்தம்

மேற்படி ஆலய மஹோற்சவ சபை தற்காலிக வாடகைக் கடை ஏலத்தில் விடுதல் நாளை (31.05.2017) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ஆலய முன்றிலில் இடம்பெறும். எனவே கடைகளைப் பெற விரும்புவோர் நேரில் வந்து ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

021 205 0899 - பரிபாலன சபை -

தேசியமொழிக் கல்விமற்றும் பயிற்சி நிறுவனம்

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும்

அரசகரும மொழிகள் அமைச்சு

தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியராவதற்கான அடிப்படை பயிற்சி பாடநெறியை பெற்றுக்கொள்வதற்கான அரிய வாய்ப்பு

இரண்டாம் மொழிகற்பித்தல் பற்றியசான்றிதழ் கற்கைநெறி – தமிழ்

தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களாக பயிற்சி பெறுவதற்கு ஆர்வம் காட்டுகின்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து இக் கற்கைநெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1. க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் தமிழ் மொழியில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்
2. 28 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டாம் மொழியான சிங்கள மொழிக்கு சாதாரணசித்தியைப் பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாக கருதப்படும்.

இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றியஅடிப்படைப் பயிற்சியைப் பெற்றுத்தரும் இச் சான்றிதழ் கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல் எமது நிறுவனத்தின் இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய டிப்ளோமா கற்கை நெறிக்கு பிரவேசிப்பதற்கான அடிப்படைத்தகைமையாகும்.

மேலும் இக்கற்கை நெறியை பூர்த்தி செய்ததன் பின்னர் எமது நிறுவனத்தின் மொழி வகுப்புகளுக்கான தற்காலிக மொழி ஆசிரியராக கற்பிப்பதற்கு வாய்ப்பு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் அதற்கு தேவையான மொழி அறிவு மற்றும் கற்பித்தல் திறனும் பரீட்சிக்கப்படும்.

ஒரு பயிற்சிகற்கை நெறிக்காக அனுமதிக்கக்கூடிய அதிகூடிய மாணவர்களின் எண்ணிக்கை 60 ஆவதுடன், இவ் வருடத்தில் ஐந்து தமிழ் மொழி மூல கற்கைநெறிகளை எதிர்காலத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
150 மணித்தியாலங்களை உள்ளடக்கிய இச்சான்றிதழ் கற்கைநெறியானது முழு நேர வதிவிடக் கற்கைநெறியாக கலேவத்த, அகலவத்தையில் அமைந்துள்ள பயிற்சிநிலையத்தில்18 நாட்கள் தொடர்ச்சியாகநடைபெறும். இக் கற்கை நெறிக் காலத்திற்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகள் நிறுவனத்தினால் வழங்கப்படும். பல்வேறுபட்ட சுகவீன நிலைமைகள் அல்லது வேறு நோய் தொடர்பான விடயங்கள் இருப்பின் மாணவர்களை இணைத்துக் கொள்ளும்போது அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் உங்கள் விண்ணப்பபடிவத்தில் அது தொடர்பாக குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்படும் இறுதித்திகதி– 2017.06.19

உங்களால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் (கல்விமற்றும் ஏனைய தகைமைகளுடனானசான்றிதழ்களின் பிரதியுடன்) கீழ் காணும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் "இரண்டாம் மொழிகற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி - 2017" என குறிப்பிடுப்பிடப்படல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
தேசியமொழிக் கல்விமற்றும் பயிற்சிநிறுவனம்,
இல.321/1, வரியலைவல் வீதி,
மாகும்புர, பன்னிபிட்டிய.
தொலைபேசி இல: 011-3092903, 011-3355420, 034-3944352

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோத சிகரெட்டுக்கள் கட்டுநாயக்கவில் சிக்கின

கொழும்பு, மே 30

சட்டவிரோதமாக இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட 3 மில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்கள், நேற்றுத் திங்கட்கிழமை அதி காலை 2 மணியளவில் கட்டுநாயக்க பன் னாட்டு வானூர்தி நிலைய சுங்கப் பிரிவால் கைப்பற்றப்பட்டன.

கட்டாரில் இருந்து வந்த இரு விமானங்களில் சிகரெட்டுக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

300 சிகரெட்பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டுள்ளன என்று சுங்கப் பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க குறிப்பிட்டார். கொழும்பைச் சேர்ந்த 36 மற்றும் 38 வயதான இருவரே இந்த சம்பவத்தில் சந்தேக நபர்களாக இனங் காணப்பட்டுள்ளனர் என்று பஸ்நாயக்க சுட் டிக்காட்டியுள்ளார்.

சந்தேகநபர்களுக்கு தண்டம் விதிக்கப் பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்களை அழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ற-5)

கடை வாடகை, விற்பனைக்கு

புதுக்குடியிருப்பு கந்தசாமி கோயில் வீதியில் 30 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும். கடையின் நீளம் 70அடி, அகலம் 16 அடி. இதைவிட இரண்டு கடைகள் விற்பனைக்கும் உண்டு
நீளம் 70 அடி, அகலம் 16 அடி.
077 434 0246

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும்

அமரர்
பாலசிங்கம் சாரங்கநாதன்
(10 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.)

தோற்றம்
31.08.1978

மறைவு
02.05.2017

எமது அன்புத் தெய்வம் 02.05.2017 செவ்வாய்க்கிழமை அன்று எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை அம்பலவன் பொக்கணை புனித தீர்த்தக்கரையிலும் 01.06.2017 வியாழக்கிழமை புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்திலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெற்று தொடர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உடனிருந்து உதவிகள் செய்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர் களுக்கும் துன்பத்தில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

077 241 7522

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

அப்பாக்குட்டி நாகராசா

(முன்னைநாள் முகாமையாளர் - கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்- கிளிநொச்சி)



யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல.116, D10, உருத்திரபுரம், கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்பொழுது இல.144, கட்சன் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியில் வசித்து வந்தவருமாகிய அப்பாக்குட்டி நாகராசா (முன்னைநாள் முகாமையாளர் கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம், கிளிநொச்சி) அவர்கள் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் பாசமிகு கணவரும், சிவகுமார் (கனடா), ராஜ்குமார் (கனடா), கணேஷகுமார் (லண்டன்), துஸ்யந்தினி (லண்டன்), விஜயநந்தினி (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தீஸ்வரி (கனடா), அனுஷா (கனடா), ரேணுகா (லண்டன்), மகேஸ்வரன் (லண்டன்), பிரபாகரன் (வட்டக்கச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகிர்தன், சஞ்சனா, சாதனா, கனுஷா, ரூபிகா, மர்ஷிகா, சஞ்சயன், புவீனன், ரம்மியா, சிவதர்சன், தஷானி, தஷாங்கன், குவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை இல.144, கட்சன் வீதி, வட்டக்கச்சியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

சரவணமுத்து பரம்சோதி

[இடைப்பிட்டி, காரைநகர்]

திதி : 30.05.2017

தோற்றம்
1951
☆
07
☆
29

மறைவு
2013
☆
06
☆
13

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
(வெங்கடேஸ்வரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனை ஏற்க முடியாது

அமைச்சர் மனோ கணேசன் திடீர் போர்க்கொடி

கொழும்பு,மே 30

நாடாளுமன்றில் உண்மையான எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் இல்லை. ஆனால் அவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டதன் மூலம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டது என்ற செய்தி, சிங்கள மக்களுக்குச் சொல்லப்பட்டது.

இவ்வாறு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றில் இடம் பெற்ற விவாத நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையான எதிர்க்கட்சித் தலைவராக நாம் சம்பந்தனை ஏற்க முடியாது. அவர் முழு நாட்டின் பிரச்சினைகளையும் நாடாளுமன்றில் பேசுவதில்லை. வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பிரச்சினைகளை மட்டும்தான் பேசுகின்றார். அரசியல் காரணங்களுக்காக அவர் இந்தப் பதவியை வகிக்கின்றார்.

முழுநாட்டையும் அவர் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை என்று மகிந்த அணியின் நிலைப்பாட்டுடன் நான் ஒத்துப் போகின்றேன். ஆனால், இந்தப் பதவியை ஏற்றதன் மூலம் அவர் ஒரு நல்ல செய்தியை இந்த நாட்டின் சிங்கள மக்களுக்குக் கூறியுள்ளார்.

நாம் இந்தத் தேசத்தின் ஒரு பங்காளியாக மாறிவிட்டோம் என்பதும், தனி நாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விட்டோம் என்பதும்தான் அந்தச் செய்தியாகும். உண்மையில் இது அவசியமான செய்தி. சிங்கள மக்கள் மத்தியில் இருந்த சந்தேகத்தை, தப்பெண்ணத்தை நீக்குவதற்கு இந்தச் செய்தி உதவியுள்ளது என்றே கூற வேண்டும்.

அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்று முழு நாட்டையும் பிரதிநித்துவப்படுத்தவில்லை என்பது இரண்டாவது பிரச்சினையாகும். அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பேசிய அளவுக்குக்கூட சம்பந்தன் பேசுவதில்லை.

இருந்தாலும், தனி நாட்டுக் கொள்கை கைவிடப்பட்டுள்ளது என்ற செய்தி எல்லாவற்றையும்விட முக்கியமானதாகும். இன்று தெற்கில் உள்ள கடும்போக்குவாதிகள் அரசியல் தீர்வுக்கு எதிராக, புதிய அரசமைப்புக்கு எதிராகப் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். இன்றைய அரசு நாட்டை இரண்டாகப் பிரித்து வடக்குக் கிழக்கைத் தமிழர்களுக்கு வழங்கப் போவதாக இவர்கள் பரப்புரை செய்து வருகின்றனர். தமிழருக்கு தமிழீழம் வழங்கப் போகின்றது என்று கூறி வருகின்றனர் - என்றார். (ஜ -3)

தமிழ் தெரியாத பொலிஸாரால் சாரதிகள் பெரும் அசௌகரியம்

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு,மே 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள போக்குவரத்துப் பொலிஸார் சிலர், தமிழ் தெரியாதவர்களாக இருக்கின்றனர். அதனால் நாள்தோறும் சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தெரியாத பொலிஸார் சிலர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பில் அரச தலைவருக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளேன். அந்தக் கடிதத்தைக் கருத்திற் கொண்டு, அரச தலைவரின் செயலாளரால், சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளருக்கு, மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தெரிந்த பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துமாறும், அல்லது பொலிஸாருக்குத் தமிழ் மொழியைக் கற்பிக்குமாறும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான பிரதி எனக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் குறித்த பிரச்சினை இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை- என்றார்.

(ஜ)

குடிதண்ணீர் தொழிற்சாலை திட்டத்துக்கு அனுமதி மறுப்பு

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், மே 30

நீர்வேலி சிறுப்பிட்டியில் குடிதண்ணீர் தொழிற்சாலை அமைப்பதற்காக கோரப்பட்டிருந்த விண்ணப்பத்தை கோப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு நிராகரித்துள்ளது.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சிறுப்பிட்டியில் புதிதாக குடி தண்ணீர் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. தொழிற்சாலைக்கு அனுமதி வழங்குவது தொடர்பில் நேற்று நடை பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் திட்ட முன்மொழிவுக்கான பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொழிற்சாலைக்கான அனுமதியை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பியபோது ஆழ் துளைக் கிணறு ஊடாக நீரைப் பெறுவது மற்றும் கழிவு நீரை வெளியேற்றுவதற்கான திட்டங்கள் என்பன இல்லாததால் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு அனுப்பி ஆராய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது என்று பிரதேச செயலாளர் கூறினார்.

"சிறுப்பிட்டிப் பகுதியில் பல விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. இந்தப் பகுதியில் ஆழ் துளைக் கிணறுகளைப் பயன்படுத்தி குடி தண்ணீர் தொழிற்சாலையை அமைப்பதால் அப்பகுதியின் நீர் வளம் பெரிதளவில் பாதிக்கப்படும். தொழிற்சாலைத் திட்டத்தில் கழிவு நீரை வெளியேற்றுவதற்கான முறையான திட்டங்கள் எவையும் இல்லை. தற்பொழுது எமது மாகாணத்தில் குடி தண்ணீர் பிரச்சினை உருவாகியுள்ளது. அதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் எழுந்துள்ள குடிதண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக பிற மாவட்டங்களில் இருந்து குடி தண்ணீரை கொண்டு வருவது தொடர்பில் நாம் ஆராயும் நிலையில் இவ்வாறான தொழிற் சாலையை அமைப்பது பொருத்தமற்றது." என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதி சுட்டிக்காட்டினார். கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக் காட்டிய விடயங்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்துக்கு அனுமதி வழங்குவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. (ற-8)

சாதல, விஜேதாசவின் பதவிகளை நீக்க கோரிக்கை

கொழும்பு,மே 30

ஊழல் மற்றும் மோசடிகளை மறைப்பதற்குத் துணை போகும் சாகல ரத்நாயக்க, விஜேதாச ராஜபக்ச இருவரையும் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்க வேண்டும்.

இவ்வாறு கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக தேசிய அமைப்பின் தலைவருமான சதுர சேனாரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மற்றும் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்குத் தண்டனை பெற்றுக் கொடுப்பதாக வாக்களித்தே இந்த அரசு பதவிக்கு வந்தது. ஆனாலும் இன்று வரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அதற்கான காரணம் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச இருவரும் ஊழல், மோசடிகளில் தொடர்புடைய அரசியல்வாதிகளைப் பாதுகாக்கும் நோக்கில் செயற்படுகின்றனர்.

கடந்த அரசின் ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பான 82 வழக்குகள் இது வரை ஒழுங்கான முறையில் விசாரணை நடத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

பொலிஸ்நிதி மோசடிப்பிரிவு, சட்ட மா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாகக் குறித்த ஊழல், மோசடிகளில் தொடர்புடையவர்களைப் பாதுகாப்பதில் சாகல ரத்நாயக்க, விஜேதாச ராஜபக்ச இருவரும் செயற்படுகின்றனர்.

எனவே அவர்கள் இருவரும் வகிக்கும் அமைச்சுப் பதவிகளிலிருந்து இருவரையும் பதவி நீக்க வேண்டும் - என்றார். (ஜ)

அரச தலைவரின் பகிடியான கருத்தே சரத் பொன்சேகாவின் பதவி விவகாரம்

முதலமைச்சர் பேசல ஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு,மே 30

சரத் பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமிப்பது தொடர்பில் அரச தலைவர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. பகிடியாகவே பொன்சேகாவிடம் அவ்வாறு கேட்டார். இவ்வாறு வடமத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாடு இப்போது முழுமையான ஜனநாயக நாடாக மாறிவிட்டது. முன்னைய ஆட்சியில் காணப்பட்ட அச்ச நிலைமை இப்போது இல்லை. எவரும் சரி தத்தமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தலாம். அதற்காக அவர்கள் அச்சுறுத்தப்படவோ, கடத்தப்படவோ, கொலை செய்யப்படவோ மாட்டார்கள்.

இந்தச் சுதந்திரத்தை அனுபவித்த அதிகமானவர்கள் இப்போது அரசுக்கு எதிரான பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் நடத்தப்படுவது ஆட்சியில் இடம்பெறுகின்ற தப்புகளுக்கு எதிராக அல்ல. அதிக சுதந்திரம் வேண்டுமென்றே அப்படிச் செய்கின்றனர். அந்தச் சுதந்திரம் தொடர்ந்தும் இருக்கும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அது நீக்கப்படமாட்டாது. ஆனால், சரத் பொன்சேகாவை மீண்டும் இராணுவத் தளபதியாக நியமித்து, இந்தப் போராட்டங்களை முடக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கப் போவதாக எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். அப்படியானதொரு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை அரசுக்கு இல்லை. பொன்சேகாவை இராணுவத் தளபதியாக நியமிப்பதுபற்றி அரச தலைவர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து இது தொடர்பில் அவர் பகிடியாகவே பொன்சேகாவிடம் கேட்டார். இதை வைத்து நாம் ஒரு முடிவுக்கு வர முடியாது - என்றார்.

(ஜ - 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHA
Twitter : UTHAYA



அமெரிக்காவில் உள்ள நூற்றாண்டுகால பழமை மிக்க "ரிங்ளின் பிரதர்ஸ்" என்ற கேளிக்கை நிறுவனம் அண்மையில் தனது கடைசிக் காட்சியை நடத்தி முடித்தது. இதைத் தொடர்ந்து அந்தக் கேளிக்கை நிறுவனம் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டது. இறுதி நிகழ்வில் பங்கேற்ற அலக்சாண்டர் லேசி என்ற பயிற்சியாளர், தான் பயிற்சி கொடுத்து வளர்த்துவந்த சிங்கத்துக்கு விடைகொடுக்கும் ஒளிப்படமே இது. (ம)

ரக்கா நகரில் வான் தாக்குதல்; 17 பேர் சாவு

டமஸ்கஸ், மே 30
சிரியாவின் ரக்கா நகரின் தெற்குப் பகுதியில் நேற்று நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பிரிட்டனை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தகவலை உறுதிசெய்தது.
"தாக்குதல் நடத்தப்பட்ட பகுதி ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து அண்மையில் கைப்பற்றப்பட்ட பகுதி. தாக்குதல் நடத்திய தரப்பு எது என்று உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை இதை நிகழ்த்தியிருக்கலாம்" என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் குறிப்பிட்டது. (ம)

அணுவாயு ஏவுகணை

நேரில் பார்

பியாங்யாங், மே 30
ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, ஏனைய உலக நாடுகள் ஆகியவற்றின் எதிர்ப்பையும் தடைகளையும் மீறி மற்றொரு ஏவுகணையை வடகொரியா நேற்றுமுன்தினம் சோதித்தது. இந்த ஏவுகணை அணுவாயுதங்களைச் சுமந்து செல்ல வல்லது என்று அயல்நாடான தென்கொரியா வெளிப்படுத்தியது.
வடகொரியா தொடர்ந்து அணுவாயுத சோதனை, ஏவுகணை சோதனை போன்றவற்றை நடத்தி வருகிறது. தென்கொரியா, அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபை கடும் எச்சரிக்கை மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்தும் வடகொரியா கண்டுகொள்ளவில்லை. இதனால் கொரியத் தீப கற்பகத்தில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
பிரிட்டனின் மன்செஸ்டர் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் கொரியத் தீப கற்ப விவகாரம் பேசுபொருள் அல்லாமல் மாறிக்கொண்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் மிகப்பெரிய அளவில் ஏவுகணைச் சோதனையை நடத்தியது வடகொரியா. அணுவாயுதங்களைச் சுமந்து செல்லவல்ல இந்த ஏவுகணைச் சோதனை வெற்றிபெற்றது எ
நடப்
ஏவுக
பெற்
இது
ஊட
இந்த
நாடா
ட்ரம்
காரம்
வட
னை
எடுக்
படுகி

அழுகிறது மன்செஸ்டர்

லண்டன், மே 30
பிரிட்டனின் மன்செஸ்டர் நகரில் கடந்த 22 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு அந்த நகர மக்கள் இன்றுவரை தமது அஞ்சலியைச் செலுத்தி வருகின்றனர்.
மன்செஸ்டர் நகரில் நடைபெற்றுக் கொண்டிருந்த இசை நிகழ்ச்சியொன்றில் நடத்தப்பட்ட இந்தத் தற்கொலைத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். பலர் காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அங்கு தொடர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது.
பொது இடங்களில் வைக்கப்படும் மலர்செண்டுகள், மெழுகுவர்த்திக் குவியல்கள் மக்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் தக்க சான்றாக உள்ளன. மன்செஸ்டர் நகரில் நிலவிய பதற்ற நிலை தற்போது படிப்படியாக குறைந்து இயல்புக்குத் திரும்புகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

பற்றி எரிகிறது பிரேசிலியா

பிரேசிலியா, மே 30
பிரேசிலில் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக அதிபர் மைக்கல் டெமர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து தொடர்ந்து பேரணிகளை நடத்தி வருகின்றனர். இதனால் கிட்டத்தட்ட ஒருமாதத்துக்கு மேலாக அங்கு பதற்றநிலை உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பிரேசில் அதிபர் மைக்கல் டெமர் மீது முறையான ஆதாரங்களுடன் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டு வைக்கப்பட்டுள்ளது. இதனால் அவர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி எதிர்ப்புக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. எனினும் அவர் பதவி விலக மறுப்புத் தெரிவித்துள்ளார். இதனால் இளைஞர்கள் அரசுக்கு எதிராகப் பேரணிகளிலும் கலவரங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாகத்தலைநகர்பிரேசிலியாவில் அதிகளவான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் 90 சதவீதமானவை கலவரங்களாக மாறுகின்றன என்று குறிப்பிடப்படுகிறது. பிரேசிலியாவில் உள்ள பெரும்பாலான அரச அலுவலகங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால்தீக்கிரையாக்கப்பட்ட நிலையில், ஏனைய பல அலுவலகங்களுக்குப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (ம)

மாட்டிறைச்சி
கேரளா, கர்

புதுடில்லி, மே 30
மாட்டு இறைச்சி விற்பனை, தோலுக்காக விலங்குகளைக் கொல்லுதல் ஆகியவற்றுக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ள நிலையில், இந்தச் சட்டத்தை ஏற்பதற்கு கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளன. தமிழகத்திலும் இந்

தத் திட்டத்துக்
பலை ஏற்பட்டு
எமது மாநிலத்
றைச்சியை வி

ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவில் ஜேர்மனியின் எதிர்காலம் இருக்கவில்லை

மெர்க்கல் தெரிவிப்பு

அதிபர்டொனால்ட்ட்ரம்பின் தலைமையிலான அமெரிக்காவை நம்பி ஜேர்மனியின்எதிர்காலம்இல்லை என ஜேர்மனி அதிபர் மெர்க்கல் தெரிவித்தார்.
ஜேர்மனியில் உள்ள பவேரியா நகரில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். "அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவு நமக்குத் தேவைதான். ஆனால், டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்காவை நம்பி ஜேர்மனியின் எதிர்காலம் இல்லை. ஐரோப்பிய நாடுகளின் பலம் மற்றும் பல வீனங்களை நாம்மட்டுமே எதிர்கொள்ள வேண்டும். அமெரிக்காவின் தலையீட்டால் தான் ஐரோப்பிய பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் என்ற நிலை ஏற்படக் கூடாது. கடந்த சில நாள்களாக எனக்கு ஏற்பட்ட அனுபங்களில் இந்த உண்மை விளங்கியது" என மெர்க்கல் மேலும் தெரிவித்தார்.
ட்ரம்ப், அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்ற காலம் முதல் அமெரிக்காவுக்கும், ஜேர்மனிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. முன்னதாக, "அதிகளவான அகதிகளை ஏற்றுக்கொண்டமை ஜேர்மனின் முட்டாள்தனம்" என்றுட்ரம்ப் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலடியாக "மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்கா மேற்கொள்ளும் நகர்வுகளாலேயே அகதிகள் உருவாகினர்" என்று மெர்க்கல் தெரிவித்தார். இதையடுத்தே காரசார விமர்சனங்கள் தொடர்ந்து கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...யுதத்தை சுமந்து செல்லவல்ல ...ணையை சோதித்தது வடகொரியா

...ார்வையிட்டார் அதிபர் கிம்



...றது என்றும் தெரிவிக்கப்பட்டது.
நடப்பு வருடத்தில் வடகொரியா சோதித்த ஏவுகணைகளில் மிக முக்கியத்துவம் பெற்ற ஏவுகணைச் சோதனையாக இதுவே அமைந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இந்த விவகாரத்துக்கு ஜப்பான் முதல் நாடாக கண்டனம் தெரிவித்தது. அதிபர் ட்ரம்பின் கவனத்துக்கும் இந்த விவகாரம் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.
வடகொரியாவின் இந்தச் சோதனைக்குக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொரியத் தீபகற்பத்தில் அமெரிக்காவின் போர்க்கப்பல்கள் முகாமிட்டுள்ள நிலையில் உலக அரசியலில் மீண்டும் பேசுபொருள் ஆகியுள்ளது கொரியத் தீபகற்பம்.

நேரில் பார்வையிட்டார் கிம் ஜோங் உன்

வடகொரிய அரசின் கே.சி.என்.ஏ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ செய்திக்குறிப்பில், 'வடகொரியாவின் தேசிய இராணுவ அறிவியல் அக்கடமியின் ஏற்பாட்டில் புதிய வகை ஏவுகணைச் சோதனை நடைபெற்றது. இதை அதிபர் கிம் ஜோங் உன் பார்வையிட்டார்.
இந்த ஆயுதம், அதன் செயற்பாட்டுத் திறன், முழுமையாக சரிபார்க்கப்பட்டது. இந்த ஆயுதம், வான்வழித் தாக்குதலை நடத்த எண்ணுகிற எதிரியின் கெட்ட கனவை அழித்து விடும்' என நேற்றுச் செய்தி வெளியிட்டது. (ம)

பிரிட்டனில் 23,000 ஆயுததாரிகள் பதுங்கல்

உளவுத்துறை எச்சரிப்பு

லண்டன், மே 30
பிரிட்டனில் 23 ஆயிரம் ஆயுததாரிகள் பதுங்கி இருக்கலாம் என, அந்த நாட்டு உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. மன்செஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் இந்த எச்சரிக்கை வெளிவந்துள்ளது.
இந்த 23 ஆயிரம் பேரில் சந்தேகப்படும்படியான 3 ஆயிரம் பேர் விசாரணை வளையத்துக்குள் வைக்கப்பட்டுள்ளனர்.
ஏனைய 20 ஆயிரம் பேர் முந்தையை, விசாரணைகளின் அடிப்படையில் 'எஞ்சிய ஆபத்துகள்' என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
அகதிகளாகப் பிரிட்டனுக்குள் நுழைந்தவர்களினதும் சந்தேகப்படும்படியான நடத்தை உடையவர்களினதும் சமூக வலைத்தளங்கள், அலைபேசி உரையாடல்கள் ஆகியன தற்போது மிக உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

...ச்சி தடைச் சட்டத்துக்கு ...கர்நாடகாவில் எதிர்ப்பு

...ட்டத்துக்கு எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.
...மாநிலத்தில் மாட்டி ...யை விரும்பிச் சாப்பிடும் மக்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். மட்டுமல்லாமல் தேர்தல் பதனிடல் உள்ளிட்ட தொழிலை முக்கிய வருவாயாகக் கொண்டு நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழுகின்றன. எனவே மாட்டு இறைச்சித் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாது என்று கேரளா, கர்நாடகா மாநிலங்கள் உறுதியாக அறிவித்துள்ளன. தமிழகம் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (ம)

BAJAJ MOTORCYCLES
PLATINA
ComforTec
எரிபொருள் மீதப்படுத்தலில் முதல்வன்

விலை 213,800/= ரூபா.

அதிக எரிபொருள் சிக்கனம்

இலக்ரிக் ஸ்டார்ட்

மேலதிக வசதியான ஆசனம்

நீண்டதூர பயணத்திற்கு ஏற்ற ஷொக் அப்சோபர்

*உயர் எரிபொருள் பாவிப்பு அளவுக்கமைய செலுத்தக்கூடிய நிலையில் பரீட்சிக்கப்பட்டு அதிக எரிபொருட்சிக்கனம் மிக்கதென நிரூபிக்கப்பட்டது.

நிபந்தனைகள் உண்டு.

...டார் கம்பனி லிமிட்டட்
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 2 011-4700600 011-4700677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

கட்சி நலன்களுக்காக சமூகக் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது

புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தில் உள்ள சுடலையைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலர் நடத்தி வரும் போராட்டம் வரம்பு மீறி வன்முறைக்குள் புகுந்துள்ளமை கவலை அளிக்கிறது. ஒரு சிலர் தமது கட்சி நலன்களுக்காக நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களை உசுப்பேற்றி, குழப்பங்களை ஏற்படுத்தி அதில் அரசியல் ரீதியில் குளிர் காய முற்படுவது நிலமையை மேலும் விபரீதமாக்கி வருகிறது.

நெருக்கமான குடிமனைகளுக்கு அருகே சுடலை இருப்பதால் தமக்குச் சுகாதாரப் பிரச்சினைகள் எழுகின்றன என்றும், சடலங்களை எரிக்கும்போது எழும் துர்நாற்றத்தைச் சகிக்க முடியவில்லை என்றும் காரணம் கூறியே அந்தச் சுடலையை அகற்றக் கோருகிறார்கள்.

இந்தக் காரணங்களை நியாயமற்றவை என்று கூறிவிட முடியாது. ஆனால், இது அந்தக் கிராமத்தின் பிரச்சினை மட்டும் அல்ல. பல இடங்களில் அதேபோன்ற தொரு நிலை உண்டு. ஒப்பீட்டளவில், கலைமதியைவிட நெருக்கமான குடிமனைகளுடன் இன்றும் இயங்கும் சுடலைகளும் யாழ். மாவட்டத்தில் பல உண்டு.

சுடலைகள் எல்லாம் ஊருக்குப் புறத்தே எல்லையில்தான் இருந்தன. நாம்தான் பெருகப் பெருக குடிகளைப் பெருக்கி சுடலை எல்லைகள் வரை சென்று குடியமர்ந்துவிட்டோம். இப்போது சுடலைகள் பிரச்சினை என்கிறோம். அப்படியே அது பிரச்சினை என்றால் அது ஒரு கிராமத்தின் அல்லது சமூகத்தின் பிரச்சினை அல்ல. அது பொதுக் கொள்கை ஒன்றின் அடிப்படையில் முடிவெடுக்கப்பட வேண்டிய பிரச்சினை. வடக்கு மாகாண சபை அது தொடர்பில் ஒரு திட்டவட்டமான கொள்கையைத் தயாரிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

மதுபான நிலையங்கள், மது விற்பனை நிலையங்கள் எங்கு, எப்படி அமையலாம், அமையக்கூடாது என்று விதிகள் இருக்கின்றனவோ, அதுபோன்றே சுடலைகளும் எங்கு, எப்படி அமைய முடியும், அமைய முடியாது, சுடலையில் இருந்து எவ்வளவு தூரத்திற்கு அப்பால் குடிமனைகள் ஏற்படுத்தப் படலாம் அல்லது குடிமனைகளில் இருந்து எவ்வளவு தூரத்திற்கு அப்பால் சுடலைகள் அமைக்கப்பட முடியும் என்கிற பொது விதிமுறைகளை மாகாண சபை உருவாக்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையை அப்படித்தான் தீர்க்க வேண்டுமே ஒழிய சட்டத்தை மீறும் வன்முறைகள் மூலம் அல்ல. ஆனால், கலைமதியில் நடப்பதோ பிழையான முன்னுதாரணமாக இருக்கிறது. சுடலைக் காணியே குடிமனைகளுக்காக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது என்று பிரதேச சபையின் பதிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. அங்கு இப்போது தூண்டிவிடப்படும் போராட்டங்களும் சுடலை இருக்கும் எஞ்சிய காணியையும் (சுமார் 15 பரப்பு) அபகரிப்பதற்கான திட்டம் என்கிற அச்சம் பலரிடமும் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

அதனால்தான் இந்தப் பிரச்சினைக்கு நீதிமன்றம் வழங்கிய மிக யதார்த்தபூர்வமான நியாயமான தீர்வையும்கூட மதிக்காது, வன்முறையில் இறங்கியிருப்பதன் பின்னணியைப் பார்க்கும்போதும், இதன் பின்னால் இருக்கும் அரசியல் நோக்கங்களைப் பார்க்கும்போதும், இந்தச் சுடலையைப் பயன்படுத்தும் சிறுப்பிட்டி மக்களை அச்சுறுத்தும் நோக்கில் அவர்களின் வாழைத் தோட்டங்களை அறுத்தெறிந்திருப்பதைப் பார்க்கும்போதும் அந்தப் பகுதி மக்களிடம் காணப்படும் இந்த அச்சத்தைப் புறந்தள்ளிவிட முடியாது.

மக்களுக்கு நியாயபூர்வமான பிரச்சினை இருந்தால் அதனைத் தீர்ப்பதற்கான அங்கீகரிக்கப்பட்ட வழிமுறை உண்டு. பலவந்தத்தாலும், பலாத்காரத்தாலும், வன்முறையாலும், அச்சுறுத்தலாலும் அதனைச் சாதிக்க முனையக்கூடாது. அதிலும் ஒரு அரசியல் கட்சியின் நலனுக்காக சமூகங்களுக்கு இடையில் குழப்பத்தை ஏற்படுத்தி அதில் குளிர்காய முனைவதை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது. இதனை அனுமதித்தால் அது வேறு ஒரு புற்றுநோயாகி எல்லா இடங்களுக்கும் பரவி புவிடும்.

இப்படிச் சொல்கிறோம் என்பதற்காக கலைமதி மக்களின் பிரச்சினைகளைப் புறக்கணித்துவிட வேண்டும் என்பது அர்த்தமல்ல. அதனைத் தீர்ப்பதற்கு அரசியல் சுயநலனும் வன்முறையும் பயன்படுத்தப்படக்கூடாது என்பதே பொருள்.

இனி ஒருபோதும் போர் ஏற்படாது

ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயகா நேர்காணல்

■ தமிழில்- எம் .ஐ.முபாறக்

"வடக்கில் இனி ஒருபோதும் போரோ அல்லது பிரிவினைவாதப் போராட்டமோ ஏற்படாது. போர் ஒன்று ஏற்படுவதற்கு முதல் தடையாக இருப்பவர்கள் வடக்கு தமிழர்கள்தான். அரசியல்வாதிகள் அவர்களை போரை நோக்கித் தள்ளினாலும் வடக்குப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீண்டும் ஆயுதம் எந்த அனுமதிக்கமாட்டார்கள்" இது, சிங்களத் தொலைக்காட்சியொன்று ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயகாவுடன் மேற்கொண்ட நேர்காணல்ஒன்றின்போது அனுரகுமார திசநாயக வெளியிட்ட கருத்தாகும். குறித்த நேர்காணலின் முழு விவரங்கள் இங்கு தரப்படுகின்றன.

கேள்வி: உங்களுக்கு எதிர்க்கட்சி பிரதான அமைப்பாளர் பதவி கிடைத்தது எந்த அடிப்படையில்?

பதில்: நாடாளுமன்றத்தை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ,ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஈபிடிபி, ஜேவிபி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய ஆறு கட்சிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அவற்றுள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஆளுங்கட்சியாக இருக்கின்றன.
தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகள் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்ந்துள்ளன. இந்தக்கட்சிகளுள் அதிக ஆசனங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இருப்பதால், அதற்குப் பிரதான எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைத்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பைவிட ஜே.வி.பி அதிக வாக்குகளை பெற்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் மாத்திரமே போட்டியிட்டது. ஆனால், நாம் தேசிய மட்டத்தில் போட்டியிட்டோம். இவற்றைக் கருத்திற் கொண்டு எமக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையே இணக்கப்பாடொன்று எட்டப்பட்டதன் காரணமாகவே இந்தப் பதவி எனக்குக் கிடைத்தது. பிரதான எதிர்க்கட்சித் தலைவர்தான் பிரதான அமைப்பாளர் பதவியைத் தீர்மானிப்பார்.

கே: தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஜே.வி.பி இணக்கப்பாடு என்பது கொள்கை ரீதியில் எந்த அளவுக்குச் சாத்தியம்?

ப: அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதாரம் போன்ற விடயங்களில் எம்மால் இணங்கிப் போகக்கூடிய விடயங்களும் உள்ளன, இணங்கமுடியாத விடயங்களும் உள்ளன. ஆனால், நாடாளுமன்றத்துக்குள் எதிர்க்கட்சியாக இருக்கும்போது பொதுவான இணக்கப்பாடுகள் அதிகம் உள்ளன.
சபைக்குள் அவற்றை நிறைவேற்றுவதற்காகவே நாம் இணங்கிச் செயற்படுகின்றோம். இந்த இணக்கம் தேசியவாதத்துக்கும், ஜேவிபியின் கொள்கைக்கும் ஆபத்தை ஏற்படுத்தாது.

கே: ஆட்சி மாற்றத்துக்கு உதவிய தரப்பை மகிழ்ச்சிப்படுத்தவே இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று குற்றச்சாட்டு உள்ளதே?

ப: அரச தலைவர் தேர்தலில் மகிந்த தோல்வியடைந்ததும், மகிந்த தரப்பு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது. நிமால் சிறிபால டி சில்வா எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். எனக்கு எதிரான குற்றச்சாட்டு உண்மையென்றால் மைத்திரியின் வெற்றிக்கு உதவாத மகிந்த அணிக்கு எப்படி எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டது. அந்தப் பதவிஎமக்கு அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு அல்லவா வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்டு இப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் மகிந்த தரப்புக்கு எதிர்கட்சித் தலைவர் பதவியைக் கொடுத்தால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பே ஆளுங்கட்சியாகவும் எதிர்கட்சியாகவும் இருக்கும். இது எப்படி ஜனநாயகமாகும்.?
மஹிந்த ஆட்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 162 ஆசனங்களைக் கொண்டிருந்தது. 41 ஆசனங்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியகட்சி பிரதான எதிர்க்கட்சியாக இருந்தது. ஆட்சி அமைப்பதற்கு 113 ஆசனங்கள் மாத்திரமே தேவை.

ஐ.ம.சுதந்திரக் கட்சியினரே அரசிலும் எதிர்க் கட்சியிலும் தலைமைப் பொறுப்பை ஏற்க நேர்ந்திருக்கும்

162 உறுப்பினர்களுள் 113 ஐ மாத்திரம் வைத்துக்கொண்டு மீதி 49 பேரை மகிந்த எதிர்க் கட்சி வரிசையில் அமர வைத்திருந்தால் ஐக்கிய தேசிய கட்சி கொண்டிருந்த 41 உறுப்பினர்களைவிட இந்த 49 பேரும் அதிகமாகும். மிக இலகுவாக எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கைப்பற்றி இருக்கலாம். அரசும் எதிர்க் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கட்சியாக இருந்திருக்கும்.
அரசைத் தவிர்த்து அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள கட்சிதான் எதிர்க்கட்சியாக இருக்க முடியும் என்பதுதான் எல்லோரும் அறிந்த, ஏற்றுக்கொண்ட ஜனநாயகம். அந்த அடிப்படையில்தான் அதிக ஆசனங்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க் கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

கே: மகிந்த அணியில் 51 பேர் இருப்பது தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆசனங்களைவிட அதிகமில்லையா?

ப: இந்த 51 பேரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றவர்கள். அது மாத்திரமன்றி அவர்களுள் அதிகமானவர்கள் இப்போதும் மைத்திரிபாலவால் கூட்டப்படும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர். அவர்கள் மைத்திரிக்கு எதிராகச் சத்தமிட்டாலும்கூட எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துகொண்டு மைத்திரி ஆட்சியைப் பாதுகாக்கின்றனர்.
அதிகமான சந்தர்ப்பங்களில் அரசின் சட்டமூலங்களுக்கு மகிந்த எதிர்த்து வாக்களிப்பதில்லை. அவர் வாக்களிப்பில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்கிறார். பதிலுக்கு மைத்திரி அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கையில் இருந்து அவர்களைப் பாதுகாக்கின்றார். இதெல்லாம் அவர்கள் நடத்தும் நாடகம்.

கே: நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துகொண்டு செல்லும் இந்தச் சந்தர்ப்பத்தில், அதைக் கட்டியெழுப்பும் வகையில் ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை மீண்டும் இலங்கைக்குக் கிடைத்துள்ளது. இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

ப: சர்வதேச சந்தைக்குள் நாம் நுழைவது, ஏற்றுமதியை அதிகரிப்பது நல்ல விடயம்தான். ஆனால், எமது உற்பத்தியை அதிகரிக்காமல் சந்தை வாய்ப்புக் கிடைத்து என்ன பயன்? எமது பொருளாதாரக் கொள்கை பிழையானது. மாறிமாறி ஆட்சி செய்த இரண்டு கட்சிகளும் எமது நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்துவிட்டன.

அரசின் பொருளாதாரக் கொள்கை பலவீனமானது

இந்த அரசு பின்பற்றும் பொருளாதாரக் கொள்கை நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதுதான். இந்த நிலையில், எப்படி எமது உற்பத்தி அதிகரிக்கும்? உற்பத்திக்குத் தேவையான வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்துவிட்டு வெளிநாடுகளில் இருந்து உற்பத்திகளை இறக்குமதி செய்துகொண்டிருக்கின்றோம். இந்த நிலையில், எமக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருக்கும் இந்தச் சந்தை வாய்ப்பை எம்மால் எப்படி முழுமையாகப் பயன்படுத்த முடியும்? ஆட்சியாளர்கள் பின்பற்றுகின்ற பொருளாதாரக் கொள்கை கடன்களை அதிகரித்ததைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை. கடன்களை அடைப்பதற்கு ஏற்ப வருமானம் போதாது. வருமானத்தை அதிகரிப்பதற்கு எந்தவொரு திட்டமும் இந்த அரசிடமில்லை. இந்த இரண்டு கட்சிகளையும் விரட்டி விட்டு புதிய ஆட்சியை அமைப்பதன்மூலம்தான் இந்தப் பிரச்சினைகளில் இருந்து எம்மால் தப்பிக்க முடியும்; பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

கே: அரச தலைவர் தேர்தலின்போது மைத்திரியை வெல்ல வைப்பதற்காக நீங்கள் அவரிடம் பணம் பெற்றீர்கள் என்று குற்றச்சாட்டுக்கள் உள்ளனவே?

ப: நாம் அப்படிப் பணம் வாங்கும் அளவுக்கு கேவலமான அரசியல் செய்யவில்லை. எம்மீதான பொறாமையின் வெளிப்பாடுதான் இது. மகிந்த இல்லாவிட்டால் அரசியல் செய்ய முடியாது என்ற வங்குரோத்து நிலையை அடைந்துள்ள விமல் வீரவன்ச மற்றும் முஸம்மில் போன்றவர்களின் வேலைதான் இது.

மகிந்தவின் ஆட்சியில் அரச தலைவர் செயலகத்தில் வாகனம் ஒன்றைப் பெற்று அதைப் பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் வாடகைக்குவிட்டு அந்த வாடகைப் பணத்தை மனைவியின் வங்கிக் கணக்கில் வைப்பில் வைத்தவர்தான் இந்த முஸம்மில்.

தாம் செய்த திருட்டை மறைப்பதற்காக அடுத்தவர்களுக்கு திருட்டுப் பட்டம் கட்ட இவர்கள் முயற்சிக்கின்றனர். மகிந்தவின் ஆட்சியில் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தவர்கள் இப்போது அதை இழந்து தவிக்கின்றனர். அந்த வேதனையின் வெளிப்பாடுதான் இந்தக் குற்றச்சாட்டு.

நாம் பணம் பெற்றிருந்தால் அரசுக்கு ஆதரவாக அல்லவா செயற்பட்டுக் கொண்டிருப்போம். நாம் அப்படி செயற்படவில்லையே. இந்த அரசின் ஊழல், மோசடிக்கு எதிராக களத்தில் இறங்கிச் செயற்படுகின்றோம்.

எமக்கு பல தரப்பினரும் பண உதவிகள் செய்கின்றனர். அவற்றை நாம் முறையாகப் பதிவு செய்து வைத்திருக்கின்றோம். ஒரு ரூபா என்றாலும்கூட அதற்கு எம்மால் தெளிவாகக் கணக்குக் காட்ட முடியும்.

இனவாதம் பேசும் வடக்கின் தமிழ் அரசியல்வாதிகள்

கே: வடக்கில் சிவாஜிலிங்கம் போன்றவர்கள் இனவாதத்தைக் கக்குகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ப: எமது நாட்டில் 30வருடங்களாக போர் ஒன்று இடம்பெற்று பாரிய அழிவுகளுடன் இப்போது அது முடிவுக்கு வந்துள்ளது. ஆனால், மீண்டும் ஒரு போரோ அல்லது பிரிவினைவாதப் போராட்டமோ ஏற்படாது என்பதை நான் பொறுப்புடன் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். புலிகளின் போராட்டம் அதன் தலைவர் பிரபாகரனை மையமாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டது. தற்கொலைப் போராளிகள் அவர்களின் உயிரை மாய்ப்பதற்கு முன் பிரபாகரனுடன் அமர்ந்து உணவு உண்பதையே பெரிய வரப்பிரசாதமாகக் கருதினர். அப்படிப்பட்ட ஒருவரின் கொலையை தமிழர்கள் படுதோல்வியாகக் கருதுகின்றனர். அவரது சாவுக்குப் பின் ஒரு சிறு தாக்குதல் சம்பவமும்கூட இடம்பெறவில்லை. திடீரெனப் போர் முடிவுக்கு வந்தது. உலகில் எங்குமே அப்படி நடந்ததில்லை. பிரபாகரன் இல்லாத நிலையில், இனிப் போர் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> போர் முடிவடைந்து எட்டு வருடங்கள் முடிந்துள்ள நிலையில், போரால் வீடுகளை இழந்த மக்களுக்கு இன்னமும் வீடுகளை அமைத்துக் கொடுக்காமல் இருப்பது எந்தவகையில் நியாயம்? ஒருவர் மரணித்தால் சில நாட்களில் அந்தச் சோகம் உறவினர்களின் மனதை விட்டுப் போய்விடும். ஆனால், கடத்தப்பட்டால் தினமும் சோகம்தான். இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அடுத்தது காணிப் பிரச்சினை. இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. இவை அனைத்தும் வேகமாகத் தீர்க்கப்பட்டால்தான் இனவாத அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

என்ன பயன் என்று நினைத்து அவர்கள் போராட்டத்தில் இருந்து ஒதுங்கிவிட்டனர்.

அடுத்தது போரின் இறுதிக் கட்டத்தில் தேசிய மட்டத்திலான தமிழ்க் குழுவினர் இராணுவத்துடன் இணைந்து செயலாற்றத் தொடங்கினர்.

இந்த 30 வருட காலப் போரால் தெற்கில் ஆகக்கூடியது 100சம்பவங்கள் இடம் பெற்றிருக்கும். ஆனால், வடக்கில் 30 வருடங்களில் தினமும் போர்தான். கொலை, ஆட்கடத்தல், கொள்ளை என ஏகப்பட்ட சேதங்களை அவர்கள் எதிர் கொண்டனர்.

போர் தமிழர்களுக்குத்தான் அழிவைக் கொடுத்தது. போர் முடிவடைந்த காலப் பகுதியில் நான் வடக்கிற்குச் சென்றேன். ஒரு வீடுகூட மிச்சமிருக்கவில்லை; ஒரு மரம்கூட மிச்சமிருக்கவில்லை. போர் உற்பத்தி செய்த விதவைகள் மாத்திரம் 45 ஆயிரம் பேராகும்.

இப்படியோர் அழிவை எதிர்கொண்ட சமூகம் மீண்டும் தமது பிள்ளைகள் ஆயுதம் ஏந்துவதற்கு அனுமதிக்குமா? ஆயுதப் போராட்டம் மீண்டும் ஆரம்பமாவதற்குத் தடையாக இருப்பவர்கள் வடக்கு மக்கள்தான்.

வடக்கு மக்கள் போரில் பறிகொடுப்பதற்காகத் தங்களது பிள்ளைகளை வளர்ப்பதில்லை. தெற்கில் உள்ள பெற்றோர் எந்த நோக்கத்துக்காக பிள்ளைகளை வளர்க்கிறார்களோ அதே நோக்கத்துக்காகத்தான் வடக்கில் உள்ள பெற்றோரும் பிள்ளைகளை வளர்க்கிறார்கள்.

தமது இருப்பைத் தக்கவைக்க மக்களைப் பலிக்கடாக்கள் ஆக்கும் அரசியல்வாதிகள்

கே: அரசியல்வாதிகள் மக்களை மீண்டும் போரை நோக்கித் தள்ளக்கூடிய ஒரு நிலை தோன்றியுள்ளதே?

ப: பொதுவாக அரசியல்வாதிகள் என்பவர்கள் அவர்களின் இருப்புக்காக மக்களைப் பலி கொடுப்பவர்கள்தான். வடக்கு அரசியல்வாதிகளின் செயற்பாடும் இனவாதத்தைக் கக்குவதுதான். அவர்கள் போருக்கு முன்னரும் அப்படித்தான்; போருக்குப் பின்னரும் அப்படித்தான்.

அதேபோல், தெற்கிலும் இனவாதத்தைக் கொண்டு தமது அரசியல் இருப்பைப் பாதுகாக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். சிவாஜிலிங்கம் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். சட்டையை, பனியனைக் கழட்டிக்கொண்டு மனநோயாளிபோல் அங்கும் இங்கும் அலைந்து திரிபவர். அவரது கருத்தை நாம் கவனத்தில் எடுக்கத் தேவையில்லை. அவர் என்னதான் கூறினாலும் அவரிடம் அதிகாரம் இல்லை. அவர் ஒரு டம்மி. அவரது பைத்தியகாரத்தனமான கூற்றுக்கு ஊடகங்கள் முன்னுரிமை கொடுப்பது தவறாகும். அவரின் கூற்று வடக்கில் தாக்கம் செலுத்தாதபோதிலும், தெற்கில் தாக்கம் செலுத்தவே செய்கிறது. வடக்கில் இருந்து கிளம்பும் இனவாதத்தைத் தூக்கிக்கொண்டு போய் அரசியல் செய்கின்ற தெற்கு அரசியல்வாதிகள் சிவாஜிலிங்கம் போன்றவர்களின் கூற்றை வெகுவாக வரவேற்கின்றனர்.

சிவாஜிலிங்கம் போன்றவர்களால்தான் தெற்கு அரசியல்வாதிகள் சிலரின் இருப்பு ஆட்டம் காணாதுள்ளது. அவரின் கூற்றை நாங்கள் கணக்கில் எடுப்பதில்லை. மக்களையும் கணக்கில் எடுக்க வேண்டாம் என்றே கேட்கின்றோம். வடக்கில் இருந்து உண்மையான இனவாதம் தலைதூக்கினால் அதை நாம் கணக்கில் எடுத்தே ஆகவேண்டும்.

அதேவேளை, வடக்கில் உள்ள உண்மையான பிரச்சினையை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். போர் முடிவடைந்து எட்டு வருடங்கள் முடிந்துள்ள நிலையில், போரால் வீடுகளை இழந்த மக்களுக்கு இன்னமும் வீடுகளை அமைத்துக் கொடுக்காமல் இருப்பது எந்தவகையில் நியாயம்?

ஒருவர் மரணித்தால் சில நாட்களில் அந்தச் சோகம் உறவினர்களின் மனதை விட்டுப் போய்விடும். ஆனால், கடத்தப்பட்டால் தினமும் சோகம்தான். இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

அடுத்தது காணிப் பிரச்சினை. இப்படி ஏகப்பட்ட பிரச்சினைகள் உள்ளன. இவை அனைத்தும் வேகமாகத் தீர்க்கப்பட்டால்தான் இனவாத அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அவர்கள் மக்களை போருக்குத் தள்ளிவிடும் அபாயத்தில் இருந்து மக்களை காப்பாற்ற முடியும். என்றார்.



ஆசிரியருக்கான கடிதம்

மனமிருந்தால் இடமுண்டு

சுற்றாடல் சுத்தம் பேணாமையால் ஒட்டுமொத்தச் சமூகங்களும் பாதிப்புக்களுக்கு உள்ளாக நேர்வது வெளிப்படையான ஒன்று. எமது சுற்றுச் சூழல் சுகாதாரம் பேணப்படாததால் டெங்கு போன்ற பயங்கரத் தொற்று நோய்களுக்கு இலக்காகி அநியாய உயிரிழப்புக்களையும் சந்திக்க நேர்ந்து வருகிறது. அந்த வகையில் பாதீனியத்தின் பெருக்கம் காரணமாக, தூய்மையற்ற நீர்ப்பாவனை காரணமாக உடனடி விரைவுத் தாக்கத்துக்கு உட்படாத போதிலும், காலப் போக்கில் மறைமுகப் பாதிப்பின் தாக்கம் எமக்குக் கடும் அச்சுறுத்தலை விளைவிக்கப் போகிறது.

அந்த வகையில் வடக்கின் சுற்றாடல் அமைச்சு பாடசாலை மட்டத்தில் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டமொன்றை முன்னெடுக்க முன்வந்துள்ளமை பாராட்டுக்கு உரிய ஒன்றாகும்.

உலக சுற்றாடல் தினம் வருடா வருடம் ஜூன் மாதம் 5ஆம் திகதியன்று கடைக்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை முன்னிலைப்படுத்தி எமது எதிர்காலச் சந்ததியினரான மாணவ சமூகம் பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையைத் தவிர்ப்பதற்கான, முற்று முழுதாகக் கைவிடுவதற்கான விழிப்புணர்வுப் பரப்புரைத் திட்டமொன்றை முன்னெடுக்க வடக்கு சுற்றாடல் அமைச்சு மேற்கொள்ளும் முயற்சிக்கு, கல்விச் சமூகத்தின் சகல மட்டங்களைச் சேர்ந்தோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். பிளாஸ்ரிக் பைகள், ஒரு தடவை மட்டும் பயன்படுத்திவிட்டு வீசும் பிளாஸ்ரிக் தயாரிப்புக்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதைத் தடுக்க சட்டபூர்வ நடவடிக்கை கூட உரிய பயனளிக்கத் தவறிவரும் நிலையில், மனமிருந்தால் இடமுண்டு என்ற விதத்தில் நாம் அனைவரும் இந்தப் பிளாஸ்ரிக் பொருள்களது பாவனையைக் கைவிட உறுதி எடுத்துக் கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் முக்கிய தேவையொன்றாக ஆகியுள்ளது.

க.குணரத்தினம்

கடன் மேலீடுகள் நாட்டுக்குத் தேவையற்றவை மாறாக முதலீடுகளே அதிகம் வேண்டப்படுகின்றன

அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்க கருத்து வெளியீடு

தற்போதைய கூட்டாட்சி அரசின் பயணத்திலே நாட்டின் முன்னேற்றம் சார்ந்து உருவாக்கப்படுவதான கடன் மேலீடுகள் நாட்டுக்குத் தேவையற்றவை மாறாக அதிகரித்த முதலீடுகளே வேண்டப்படுகின்றன என்பதான கருத்துக்கள் அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள அயலுறவுத்துறை அமைச்சகத்தில் புதிய பதவிநிலைக் குரித்தான கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், "கடன் சுமையற்ற நாட்டை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்றவுள்ளேன். அயலுறவுத்துறை அமைச்சர் என்ற வகையில் பன்னாடுகளுக்கும் சுற்றுலா சென்று கொண்டிருப்பதை தவிர்த்துக் கொண்டு இலங்கையின் அபிமானத்தை நிலைநாட்டுவதிலும், அதனைச் சிறந்த முறையிலே கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்வேன்.

ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருந்தால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது. இந்தநிலையிலே இலங்கைக்கே உரியதான தனித்துவங்களை பேணிப் பன்னாட்டு ரீதியில் நாட்டை கட்டியெழுப்ப முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளேன். அயலுறவுத்துறை அமைச்சர் என்ற வகையில் அரச தலைவர், தலைமை அமைச்சர், சக அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி முடிவுகளை எடுப்பதுடன், நாட்டை வெற்றிப் பாதையில் முன்னோக்கி கொண்டு செல்ல பாடுபடுவேன்" என்றார்.



இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு மலேசிய முதலீட்டாளர்கள் அதீத ஆர்வம்

300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யத் தீர்மானம்

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் மலேசியாவின் முதலீட்டாளர்கள் அதீத ஆர்வத்தை வெளிக்காட்டியுள்ளதான தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் மலேசிய அரசும், அந்தநாட்டின் தனியார் முதலீட்டாளர்களும் இணைந்து இலங்கையில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகை மதிப்பீடு உடையதான முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவர்கள் இலங்கையின் எண்ணெய், எரிவாயு மற்றும் சக்திவளத்துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளவுள்ளதுடன் பொழுதுபோக்குப் பூங்கா உள்ளிட்ட விடயங்களிலும் முதலீடு செய்யவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒலீமா இன்டஸ்ரீஸ் சிறந்த தொழில் முயற்சியாளராக தெரிவு

தோற்பொருள் உற்பத்தியில் சிறப்பு விருது பெற்றது

பாதுகாப்பான பாதணிகளின் உற்பத்தித் துறையில் ஈடுபட்டு வருகின்ற ஒலீமா இன்டஸ் ரீஸ் தனியார் நிறுவனம் '2016 ப்ளேம்' தொழில் முயற்சியாளர் விருது வழங்கல் விழாவில் பாதணிகள் மற்றும் தோற்பொருள்கள் உற்பத்தி பிரிவில் அதிசிறப்பு விருதை வென்றுள்ளது.

மேல் மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வானது கொழும்பில் அண்மையில் இடம்பெற்றிருந்தது. நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்ட அரசதலைவர் மைத்ரிபால சிறிசேனவால் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டது. ஒலீமா இன்டஸ் ரீஸ் நிறுவனத்தின் தலைவர் எஸ். கே அஜித் பிரியதர்ஷனவால் பாதணிகள் மற்றும் தோற்பொருள்கள் உற்பத்தி பிரிவின் கீழான அதிசிறப்பு விருது பெற்றுக்கொள்ளப்பட்டது.

தொம்பே, தெக்கட்டன, பெலகலவில் பிரதேசங்களில் அமைந்துள்ள ஒலீமா தொழிற்சாலையானது தற்போது அதி நவீன தொழில்நுட்பத்தின் உறுதுணையோடு இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையிலே உள்நாட்டு இறப்பரை மூலப்பொருள்களாகக் கொண்டு இறப்பர் கம் பூட்ஸ், பாதுகாப்பான பாதணிகள், அலங்கார பாதணிகள், கன்வஸ் பாதணிகள், வேலைத்தள பாதுகாப்பு அணிகலன்கள் உள்ளிட்ட உயர் தரத்திலான அழகிய வடிவங்களிலான உற்பத்திகளை சந்தைக்கு ஒலீமா வழங்கி வருகின்றது.

"உள்நாட்டு இறப்பரை மூலப்பொருள்களாகக் கொண்டு உற்பத்தி செய்யும் ஒலீமா இன்டஸ் ரீஸ் முன்னணியில் திகழ்கிறது."

இரண்டு வருடங்களில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இல்லாது போகும் அபாயம் காணப்படுகிறது

உலகத் தொழிற்சங்கத்தின் இலங்கைக் குழுவின் உதவித் தலைவர் சுட்டிக்காட்டு

இலங்கைக்கு கிடைத்துள்ளதான ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை எதிர்வரும் இரண்டு வருடங்களில் இல்லாது போகும் அபாயம் காணப்படுவதான தகவல் உலக தொழிற்சங்கத்தின் இலங்கைக் குழுவின் உதவித் தலைவர் எண்டன் மாகஸினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக தற்போது கிடைத்துள்ளதான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மூலம் கிடைக்கும் பிரதிபலன்களில் நூற்றுக்கு 50 வீதமான வற்றை தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு வாக்குறுதியளிக்கப்பட்ட போதிலும் அந்தவிடயங்கள் சாத்தியமாகாத சந்தர்ப்பங்கள் காணப்படுவதனாலேயே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை பற்றியதான மேற்போந்த விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள அவர்,

" ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் பெறுவதற்காக தொழிற்சங்கம் என்ற வகையில் கடுமையாகப் போரடினோம். இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கு சலுகைகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இதனை மேற்கொண்டிருந்தோம். அதற்கான பிரதிபலன்களை தொழிலாளர்களுக்கு வழங்குவதாக தொழிற்றுறை அமைச்சர் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்" - என்றார்.

வாடிக்கையாளர் நிதிச் செயற்பாடுகள் குறித்து இடைக்கால அறிக்கை

மத்திய வங்கியின் நிதிச் சபை ஆராய்வு

கடந்த நிதியாண்டின் (2015/16) மார்ச் மாதம் 31 ஆம் திகதி நிறைவடைந்த ஒரு வருட காலப் பகுதிக்குரித்தான வாடிக்கையாளர் நிதிச் செயற்பாடுகள் தொடர்பிலும் நடப்பு நிதியாண்டின் (2016/17) ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரையான இறுதி ஐந்து மாதங்களின் ஆரம்ப வாடிக்கையாளர்களின் நிதி செயற்பாடுகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் தொடர்பிலும் பதிவிடப்பட்ட இடைக்கால அறிக்கை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது ஆரம்ப வாடிக்கையாளர்களின் நடவடிக்கைகளில் காணப்படுகின்ற முரண்பாடுகள் போன்றதான முறிகள் விநியோக சந்தையில் இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளின் போது நிலவும் இடர்பாடுகள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

மேலும் மேற்சொல்லப்பட்ட விடயம் தொடர்பில் தற்போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள விசாரணை அறிக்கையிடல் செயல்நிலைகளை துரிதப்படுத்துமாறும் மத்திய வங்கியின் நிதிச்சபையானது சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல்களையும், பரிந்துரைகளையும் வழங்கியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரிசி இறக்குமதிக்கான அனுமதியை தனியார் துறைக்கு வழங்க அமைச்சரவை தீர்மானம்

அரிசியின் விலை அதிகரிப்புத் தொடர்பில் அவதானம்

அரிசி இறக்குமதிக்கான அனுமதியைத் தனியார் துறைக்கு வழங்குவது தொடர்பிலான தீர்மானத்தை அமைச்சரவை மேற்கொண்டுள்ளதானதகவல்தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக தேசிய சந்தையில் அரிசியின் விலை அதிகரித்து வரும் நிலைமை தொடர்பில் அமைச்சரவை மேற்கொண்டுள்ள அவதானத்தின் அடிப்படையிலேமேற்படிஅரிசிஇறக்குமதிஅனுமதிவழங்கல்குறித்தான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கமைவாகஇறக்குமதி செய்யப்பட வேண்டிய அரிசியின் அளவு, வாழ்க்கைச் செலவு போன்றதான அடிப்படைவிடயங்களை அமைச்சரவையின் உப குழு தீர்மானித்தன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உள்நாட்டுவிவசாயிகள்பாதிப்படையாதவகையிலும்நுகர்வோர்கட்டுப்படியான விலை நிர்ணயத்தில் அரிசியைக்கொள்வனவுசெய்யக்கூடிய வகையிலும் அரிசியை இறக்குமதி செய்வதே இந்தத் தீர்மானத்தின் பிரதான நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரனிப் பீற்றர்

குடும்ப விரிசல்களும் மாற்றத்தின் அவசியமும்

மாதா, பிதா, குரு, தெய்வத்தின் அருள்த்துணையோடு பக்தியிலும் பண்பிலும் அன்பிலும் அறிவிலும் உயர் ஒழுக்கத்திலும் மதிக்கப்பட்ட ஓர் இனம் தமிழ் இனமாகும். இந்தச் சிறப்பு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருந்தன. தாயான வள் மாதா. அன்னை, அம்மா என மகோன்னதமான ஒரு நிலையில் மதிக்கப்பட்டாள். அன்புறவின் ஊற்றும் அவள் தான். தன் பிள்ளைகள் ஒவ்வொன்றும் ஒழுக்கத்திலும் மற்றவர்களை மதிக்கின்ற பண்பிலும் நிறைந்தவர்களாக வளர்க்கின்ற கலங்கரை விளக்கமாக அன்னை விளங்கினாள். அதனாலே அம்மா என்ற உறவு மதிக்கப்பட்டது, போற்றப்பட்டது, சமூகங்களுக்குள்ளே அம்மாவும் தந்தையும் உறவுக்காரர்களாக இருக்கும் போது வேறுபாடுகள் முரண்பாடுகள் குற்றங்காணுதல் சண்டை சச்சரவுகள் ஏற்படுதல் பிரிந்துசெல்லுதல்இவைகள்எல்லாம் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவே அன்றைய சமுதாயத்தில் இருந்தன.

திருமணங்கள் பலவிதம்

காலப் போக்கின் மாற்றங்களால் கல்வி அறிவின் மேம்பாட்டால் காதல் திருமணங்கள், சீர்தனத் திருமணங்கள், விருப்புத் திருமணங்கள் என்ற முறைமைகள் உள்வாங்கப்பட்டன. பெற்றோர் பெரியோர் நிச்சயிக்கின்ற திருமணங்கள் வெகுவாகக் குறைந்தன. காதல் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள் அந்தஸ்துக்கு ஏற்ற சீர்தனத் திருமணங்கள் உணர்வுகளால் தூண்டப்பட்டு சீர்திருத்தத் திருமணங்கள் நடந்தேறின. 50 வருடங்களுக்கு முற்பட்ட திருமணங்களில் குடும்பங்களில் ஒருவரையொருவர் மதித்து மதிப்புக் கொடுத்து வாழ்ந்த நிலையானது பிற்பட்ட இன்றைய காலங்களில் அருகி வருவதையும் காண்கின்றோம். கல்வி அறிவின் தரத்துக்கு ஏற்ப சீர்தனம் பெற்றுப் பெண்ணை மணமுடிக்கின்ற நிலமை மாற்றம் பெற்று வந்துள்ளது. இதனாலே சமூக உயர்வு தாழ்வு நிலையும் தலை தூக்கியுள்ளது. காதல் வயப்பட்டவர்களும் காமவயப்பட்டவர்களும் எவருடைய சொல்லுக்கும் கட்டுப்படாமல் தமது விருப்பங்களை நிறைவேற்ற ஒன்று சேர்ந்து வாழும் நிலை பிற்காலங்களில் அனேக குடும்பங்கள் முரண்பட்டும் தர்க்கப்பட்டும் பிரிந்தும் கூட வாழும் நிலைகள் நடந்தேறிக் கொண்டே இருக்கின்றன. பெற்றோர்கள் இப்படியான திருமணங்களுக்கு ஒப்புதல் சொல்கின்றவர்களாகவே உள்ளனர் என்பதும் வேதனையான உண்மையாகும்.

உறவுகளின் சங்கமான குடும்பம்

குடும்பம் என்று கூறும் போது தனியே கணவன் மனைவி மட்டுமல்ல. பிள்ளைகள், பேரன் பேர்த்தி, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி போன்ற கூட்டுக் குடும்பமாக ஒரு பிள்ளையின் வளர்ப்பிற்கு அன்று துணை போனார்கள் பெண் மருமகள், அம்மா, தாய் வந்தவள் என்று நோக்கப்படவில்லை. அவள் பல படிப்பினைகளை அந்தப் பெரிய குடும்பத்திலிருந்து கற்றுக் கொண்டாள். ஒற்றுமை, கூட்டுறவு, விட்டுக் கொடுப்பு, அன்பு, பாசம், இவைகள் அந்தக் குடும்பத்திலே மேலோங்கி இருந்ததை இன்றும் சில குடும்பங்களிலே நாம் காணமுடியும். மதிப்பு, மரியாதை ,விருந்தோம்பல், உறவு நிலைகளை பலப்படுத்துவதாகவும் , மேம்படுத்துவதாகவும், மாமி தாய், அம்மா, எல்லோரையும் அன்புறவுக்குள் வைத்திருக்கின்ற குடும்ப தலைவியாகவும் விளங்கினாள். அதனால் அந்தக் குடும்பங்களில் உருவாகிய பிள்ளைச் செல்வங்கள் ஒழுக்க சீலர்களாகவும் அனுபவங்களை உள்வாங்கியவர்களாகவும் கல்வியிலும் பக்தி நெறிகளிலும் வியந்து போற்றுமளவுக்கு மாதா, பிதா, குரு, தெய்வத்தின் ஆசி பெற்றவர்களாக விளங்கினார்கள். அவர்களுடைய பேச்சு உரையாடல்கள் உறவினர்கள் ஏனையவர்களுடன் மதிப்போடும் மரியாதையோடும் நடந்து கொள்வது இப்படிப் பிள்ளைகள் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும் குடும்பப் பணிகளிலே பெற்றோருக்கு உதவி புரிகின்றவர்களாகவும் இருந்தமையால் உயர்வான உறவு நிலை காணப்பட்டது.

வீட்டுக்கு நல்ல வளைவை என்று பெரியோர்கள் கூறுவார்கள். வீடு கம்பீரமானதாகவும் உறுதியானதாகவும் இருக்க வேண்டுமானால் வைத்துக் கட்டப்படும் வளைவைரமானதாக இருக்க வேண்டும் என்பது கருத்தாகும். அதேபோல இல்லம் சிறப்பானதாக இருக்க வேண்டுமானால் வீட்டுக்கு எடுக்கும் மருமகள் பெண் நல்லவளாக வல்லவளாக நற்குணங்கள் பொருந்தியவளாகப் பார்த்து அவளை மருமகளாக வை என்பதும் ஒரு கருத்தாகும். இந்தக் குணங்கள் சிறப்புக்கள் இல்லாவிட்டாலும் பணமும் சொத்தும் அத்துடன் அழகும் சீர்தனமாக உள்ள பெண்ணை மருமகளாக ஆக்கிக் கொள்ள விரும்பும் அம்மா மாமி எப்படி வரும் மருமகளிடம் முன்பு சொன்ன பண்புகளை எல்லாம் எதிர்பார்க்கலாம். மருமகளிடமிருந்து மரியாதையை வீட்டுப் பணியை எதிர்பார்க்கலாம். இங்கு முறுகலும் முரண்பாடுகளுமே ஏற்படும். இன்று தொலைக்காட்சிகளில் அம்மா மாமி வில்லியாக வந்து குடும்ப பிறழ்வை ஏற்படுத்துவதும் அன்பு உறவு கணவன், மனைவி, மாமி, மருமகள், மச்சாள்மாரிடம் ஏற்பட வாய்ப்புக்கள் குறைவே. பணம் இருந்தும் புரிந்துணர்வு இல்லாத வாழ்வு, காதல் சீர்திருத்த திருமணங்களும் வாழ்வின் கஷ்டங்கள் ஏற்படும் பொழுது உடைந்து சிதைந்து போகும் நிலைகளே இன்றுள்ளது. எனவே இங்கு உருவாகும் பிள்ளைச் செல்வங்கள் முற்றிலும் மாறுபட்ட குணஇயல்புகள் பழக்க வழக்கங்கள் உறவு நிலைகள் சுய சுதந்திர மனப்பான்மை கொண்டவர்களாகவும், மென்மைப் போக்கற்றவர்களாகவும், தாம் விரும்பும் வழியில் நடப்பவர்களாகவும், முரண்பட்டுக் கொள்கின்றவர்களாகவும் வாழும் சூழ்நிலையை இவர்களுடைய குடும்பங்கள் இவர்களுக்கு கொடுத்து விடுகின்றன. இந்தக் குடும்பங்களிலிருந்து உறவு நிலையில் விரிசல்கள் ஏற்படுகின்றமை இந்தக் குடும்பங்களைப் பாதிக்கின்றன. அதேவேளை சமுதாயமே அதிக அளவில் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றது.

> குடும்பம் என்று கூறும் போது தனியே கணவன் மனைவி மட்டுமல்ல. பிள்ளைகள், பேரன் பேர்த்தி, பெரியம்மா, பெரியப்பா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி போன்ற உறவுகளைக் கொண்ட கூட்டுக் குடும்பமாக ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்கு அன்று துணை போனார்கள். மருமகளானவள் வந்தவள் என்று நோக்கப்படவில்லை. அவள் பல படிப்பினைகளை அந்தப் பெரிய குடும்பத்திலிருந்து கற்றுக் கொண்டாள். ஒற்றுமை, கூட்டுறவு, விட்டுக் கொடுப்பு, அன்பு, பாசம், இவைகள் அந்தக் குடும்பத்திலே மேலோங்கி இருந்ததை இன்றும் சில குடும்பங்களிலே நாம் காணமுடியும்.

குடும்பத்தின் மாண்பு

குடும்பமே குவலயத்தை வாழ்விப்பதும் வழிப்படுத்துவதும் அதே வேளை முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கும் குடும்பங்கள் தான் காரணமாக அமைகின்றன. நற்கருவூலத்திலிருந்து நன்மையும் தீயகருவூலத்திலிருந்து தீமையும் தோன்றுவது இயல்பானதாக இருக்கின்றது. பெற்றோரின் வாழ்வே பிள்ளைகளின் உறவுகளில் பிரதிபலிக்கும் ஒரு தாய் தன் பாலோடு சேர்த்து பாசத்தையும் நேசத்தையும் நற்பண்பையும் நற்பேச்சையும் நல்லுறவையும் ஊட்டினால் அவை பிள்ளையிடம் சென்றடையும் பாலூட்டா தாயின் பிள்ளைகளிடம் இவற்றை எதிர்பார்க்க முடியாது. ஒவ்வொரு பிள்ளையின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அன்னையின் செயற்பாடுதான் முதற் காரணம். மருமகளை மாமா, மாமி உறவுகள் எவ்வளவுக்கு அன்பு காட்டுகின்றார்களோ அங்கே உருவாகும் பிள்ளைகள் அன்புறவின் அடையாளங்களாக வாழ்வார்கள். மாமா, மாமி உறவு கள் மருமகளை கொடுமைக்கு உள்ளாக்கினால் அல்லது அல்லது கணவன்கொடுமைப்படுத்தினாலும் பிள்ளைகள் முரண்பாடும், வன்முறைக்குணமும், பழிபாவங்களுக்கு அஞ்சாதவர்களாகவே உருவாகுவார்கள். இது அவர்களின் தவறாகக் கருத முடியாது. ஒவ்வொரு தாய் தகப்பனும் இன்னுமொரு தாய் தகப்பனை உரு வாக்குவதில் பரம்பரையை வளர்த்தெடுப்பதில் அன்போடும் பண்போடும் நல்லுறவில் வாழ்ந்தால், வாழ முற்பட்டால் குடும்பங்கள் உறவில் விரிசல்கள் ஏற்பட்டு மலினப்பட்டு போகாமல் அன்பும், பண்பும், மதிப்பும், மரியாதையும் அளித்து அறிவிலும் ஆன்மிகத்திலும் உயர்வான குடும்பங்களாக எம் குடும்பங்கள் மாறிட முடியும்.

கட்டுரையாளர்:
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையின் கட்டை விரல்களின் குணாதிசயப் பலன்



உங்களுடைய கண்கள், மூக்கு, கன்னம், விரல்கள் போன்றவற்றின் வடிவத்தை கொண்டே நீங்கள் எத்தகைய குணநலன்களை கொண்டிருப்பவர்கள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

உதாரணத்திற்கு, கைரேகை பார்ப்பது போன்றுதான். இப்போது உங்களது கட்டை விரல்கள் எந்த வடிவில் அமைந்துள்ளது என்பதை வைத்து உங்களை அறிந்து கொள்ளுங்கள். சிலருக்கு நேரான தோற்றத்துடன் கட்டை விரல் இருக்கும், ஒரு சிலருக்கு சற்று வளைந்து கோணலாக இருக்கும்.

கோணல் கட்டை விரல்

கோணலான கட்டை விரல் கொண்டிருப்பவர்கள் நல்ல குணநலன்களோடு இருப்பார்கள், தங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படையாக பேசி, எந்த ஒரு கடினமான சூழ்நிலையையும் நேர்த்தியாகக் கையாளும் திறமை கொண்டிருப்பார்கள்.

நேரான கட்டை விரல்

இதற்கு உரியவர்கள் தீவிரமான குணநலன்கள் கொண்டிருப்பார்கள், இந்தக் காரணத்தினாலேயே இவர்கள் உற்சாகம் குறைந்து இருப்பார்கள்.

வரலாற்றில் இன்றைய தினம்

1574 -மூன்றாம் ஹென்றி பிரான்சின் அரசரானார்.

1631 -முதலாவது பிரெஞ்ச் புதினத் தாளான கசட்டி பிறன்ஸ் பிரசுரிக்கப்பட்டது.

1806 - பின்னாளில் அமெரிக்க அரசதலைவர் ஆகிய அன்றூ ஜாக்சன் சண்டை ஒன்றில், சார்ள்ஸ் டிக்கின்சன் என்பவரைக் கொன்றார்

1842 -லண்டன் கொன்ஸ்ரியூசன் குன்றுப் பகுதியில் இளவரசர் அல்பேட்டுடன் பயணித்துக் கொண்டிருந்த விக்டோரியா இராணிமீது ஜோன் பிரான்சிசால் கொலை முயற்சி முன்னெடுக்கப்பட்டது

1868 -ஞாபகார்த்த தினம் முதன் முதலாக ஐக்கிய அமெரிக்காவில் அனுஷ்டிக்கப்பட்டது

1876-ஒட்டமான் சுல்தான் அப்துல் அஸிஸ் பதவியிலிருந்து அகற்றப்பட்டு அவரது மருமகன் ஐந்தாம் முறாட் பதவியேற்றார்

1913 -லண்டன் ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து, முதலாவது போக்லாந்துப் போர் முடிவுக்கு வந்தது இதனையடுத்து அல்பேனியா சுதந்திரம் அடைந்தது.

1917-முதலாம் அலெக்ஸாண்டர் கிரேக்கத்தின் அரசரானார்

1922-லிங்கன் நினைவாலயம் வோஷிங்டனில் திறந்து வைக்கப்பட்டது

1932-கிரேக்கத்தின் தேசிய அரங்கு உருவாக்கப்பட்டது

1942-இரண்டாம் உலக மகாபோர் ஆயிரம் வரையான பிரிட்டன் குண்டுவீச்சு விமானங்கள் ஜேர்மனியின் கோலோன் மீது 90 நிமிட தாக்குதல்களை மேற்கொண்டது.

1966-அரசதலைவர் யோசப் முபுடுவின் கட்டளைக் கமைய கொங்கோவின் முன்னாள் தலைமை அமைச்சர் எவரிஸ்ரி கிம்பா மற்றும் பல அரசியல்வாதிகள் பொது மக்கள் முன்னிலையில் சாவுத் தண்டனைக்கு உள்ளாகினர்.

1967-நைஜீரியாவின் கிழக்குப் பகுதி பியப்ரா குடியரசென சுதந்திரப் பிரகனம் செய்ததையடுத்து சிவில் போர் மூண்டது.

1998-பாகிஸ்தான் கறான் பாலைவனத்தில், பாகிஸ்தானால் அணுச்சோதனை நடத்தப்பட்டது.

1999 -ராசிக்கின் பூதவுடலுக்கு வரதராஜப்பெருமாள் அழுதபடி அஞ்சலி

2003-அரசின் யோசனையை புலிகள் நிராகரித்தமையையிட்டு அரசுத் தரப்பில் அதிர்ச்சி

2008-கொத்துக்குண்டுகளைத் தடைசெய்யும் பன்னாட்டு பட்டயம் டப்ளினில் கொண்டுவரப்பட்டது.

2012- செய்ரா லியோன் சிவில் போரின் போது, மேற்கொண்ட மனிதப்படுகொலைகளுக்காக, லைபீரிய முன்னாள் அரசதலைவர் சார்ள்ஸ் ரெய்லருக்கு 50 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

2013-ஒரேபாலின விவாகத்தைத் தடைசெய்யும் சட்டம் நைஜீரியாவில் கொண்டுவரப்பட்டது.

2016-கிழக்கு முதல்வருக்கான முப்படைத் தடை நீக்கம் நாடு திரும்பிய அரசதலைவர் அதிரடி உத்தரவு

2016-மூன்று தினங்களில் காணிகள் இனங்காணப்பட வேண்டும் அதிகாரிகளுக்கு மைத்திரி அறிவுறுத்து.

2016 -வடக்கில் 3795 பேருக்கு சிறுநீரகப் பாதிப்பு

2016-இலங்கையின் சுகாதாரத்துறை தரமான சேவையை வழங்குகிறது என வடக்கு சுகாதார அமைச்சர் பெருமிதம்.

2016-கிழக்கு முதலமைச்சர் மன்னிப்புக் கோர வேண்டுமென அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு.

2016 -அகதிகள் படகு கவிழ்ந்து மத்திய தரைக் கடலில் 700 க்கு மேற்பட்டோர் சாவு.

2016 -உக்ரைன் தீ விபத்தில் 17 பேர் சாவு

நாளை

வைகாசி-17

புதன்கிழமை -31.05.2017

திதி: ஷஷ்டி பி.ப.01.29

நட்சத்திரம்: ஆயிலியம் பி.ப.05.09

சுபநேரம்:04.22-05.52 வரை

ராகுகாலம்:11.52-01.22 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்கின் வெள்ள இடரும் வடக்கின் போர் அவலமும்

தென்னிலங்கையில் ஏற்பட்ட இயற்கைப்பேரிடர் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திவிட்டது. இதில் 151 பேர் சாவைத் தழுவியுள்ளதாகவும், 111 பேரைக் காணவில்லையெனவும், சுமார் 4 லட்சம் பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் அவதிப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைவிட பல நூற்றுக்கணக்கான வீடுகள் அழிவடைந்துள்ளன. சொத்துக்கள் பலவும் சேதமடைந்துள்ளன. ஆறுகள் தொடர்ந்து பெருக்கெடுத்து ஓடுவதால் மக்களின் அவலம் மேலும் மோசமான கட்டத்தை எட்டிவிடுமென அஞ்சப்படுகின்றது.

நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட தமது சகோதர உறவுகளுக்கு உதவவேண்டியது அவசியமானதொரு கடமையாகும். பாதிக்கப்பட்டவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள். என்ன மொழி பேசுபவர்கள், எத்தகைய மதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டிய தருணம் இதுவல்ல. உதவி செய்வது தான் இன்றைய தேவையாகும்.

இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் வரலாறு காணாத இன்னல்களுக்கு ஆளானார்கள். பல்லாயிரக் கணக்கானவர்கள். தமது உயிர்களை இழந்தனர். ஏராளமானவர்கள் தமது அவயவங்களை இழந்தனர். கணக்கிட முடியாத அளவுக்குச் சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

ஆனால் இவை தொடர்பாகத் தென்னிலங்கை மக்கள் சிறிது கூட அனுதாபம் காட்டவில்லை. மாறாக அரசியல்வாதிகளின் ஏற்பாட்டில் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். குதூகலித்து மகிழ்ந்தனர்.

ஆனால் தெற்கில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தமிழ் உறவுகள் அக்கறை காண்பிப்பதைக் காணமுடிகின்றது. இது அவர்களின் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. இனத்தாலும். மதத்தாலும், மொழியாலும் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற உணர்வு நாட்டு மக்கள் அனைவரது மனங்களிலும் ஊற்றெடுக்க வேண்டும். வடக்கில் பாதிப்பு என்றால் தெற்கில் உள்ளவர்கள் துடிக்க வேண்டும். அதே போன்று தெற்கில் இடர் என்றால் வடக்கில் உள்ளவர்கள் கலங்கி நிற்க வேண்டும். இத்தகைய தொரு நிலை ஏற்படுமாயின் நாட்டில் சமாதானமும். நல்லுறவும். சகோதரத்துவமும் விரைவிலேயே மலர்ந்துவிடும்.

சுடோக்கு
எண் விளையாட்டு

	9				6			8
2		1			7			
	7					4		
	3		6		8		5	
			5	3	9			
		9		7				
3							6	
						5	8	9
	6			5		7		4

நேற்றைய சுடோக்கின் விடை

2	1	8	3	5	9	7	4	6
7	5	4	1	6	2	8	3	9
3	9	6	8	7	4	2	1	5
8	4	5	2	1	6	9	7	3
1	7	9	5	4	3	6	8	2
6	2	3	9	8	7	4	5	1
9	6	1	4	3	8	5	2	7
4	3	2	7	9	5	1	6	8
5	8	7	6	2	1	3	9	4

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

எனது வாழ்க்கை வரலாறு திரைப்படமாக முடிவெடுத்த உடனே, வானூர்தி வீரக ளுக்குத்தான் முதல் காட்சியைக் காண்பிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றி யது என்று கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.

உலகளவில் விளையாட்டுப் பிரபலங்களின் வாழ்க்கை வரலாறு படமாக உருவாகி வருகிறது. அதன்படி குத்துச்சண்டைப் பிரபலம் மேரி கோம், கிரிக்கெட் வீரர் தோனி உள்ளிட்டோரின் வாழ்க்கை வரலாறு படமாக உருவாகி ரசிகர்களி டையே நல்ல வரவேற்பைப் பெற்றன. அந்தவ கையில், இந்திய கிரிக்கெட் உலகின் ஜாம்பவா னாகத் திகழ்ந்த சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கை வரலாறு 'சச்சின் எ பில்லியன் ட்ரீம்ஸ்' என்ற பெயரில் ஆவணப்படமாக உருவாகியுள்ளது. இப்படத்தை ஜேம்ஸ் எர்ஸ்கின் என்பவர் இயக்கி யுள்ளார். ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார். இப்படத்தை `200 நாட் அவுட் புரொடக் ஷன்ஸ்' என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்தி மொழியில் உருவாகியுள்ள இப்படம் தமிழி லும் டப் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இப் படத்தின் தமிழ் பதிப்புக்கு மதன் கார்க்கி பாடல்கள் மற்றும் வசனங்களை எழுதியிருக்கிறார். படத் தின் அறிமுக நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சச் சின் "எனது வாழ்க்கை சினிமாவாக உருவாகிறது என முடிவெடுத்த உடனேயே, படத்தின் முதல் காட்சியை வானூர்திப் படை வீரர்களுக்கு காண் பிக்கப்பட வேண்டும் எனத் தோன்றியது" எனக் கூறியுள்ளார். இந்திய வானூர்திப் படையில் சச் சின் டெண்டுல்கள் குரூப் கேப்டன் பொறுப்பை வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



Natu @Natu_talks
இழந்தவன் தேடுவதும்
இருப்பவன் தொலைப்பதும்தான்
தாய் அன்பு

இதுவும் "அரிய" புகைப்படம்தான்

அவள் என்னை விட்டுப் பிரிந்தால் மது குடிக்க மாட்டேன்
தாடி வைக்க மாட்டேன் அழுது புலம்ப மாட்டேன்..
அமைதியாகத் தூங்கிக் கொண்டிருப்பேன்..அவள் தங்கையின் மடியில்!
கொய்யாலே..! கல்லறையில் தூங்குவேன்னு நினைச்சியா.....?????

ராசிபலன்



மேடம்: நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும். மன உறுதி மிகவும் அவசியம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதி கரிக்கும். லாபம் சுமார்.

இடபம்: தாமதித்த செயலில் புதிய திருப்பம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடுவீர்கள். வரு மானத்துடன் நிலுவைப் பணம் வசூலாகும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி.

மிதுனம்: கடந்த காலத்தில் உழைப்புக்கான பலன் பலன் தேடி வரும். அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

கடகம்: சுயலாபத்துக்காகச் சிலர் உங்களைப் புகழ்ந்து பேசுவர். முன்யோசனையுடன் நடப்பது நல்லது. தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிகளை விரைந்து முடிப்பர்.

சிங்கம்: நிதானமுடன் செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடையூறை முறியடிப்பது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

கன்னி: மனதில் உற்சாகமும் செயலில் நேர்மையும் நிறைந்திருக்கும். விலகிச் சென்றவரும் விரும்பி வந்து அன்பு பாராட்டு வர். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர்.

துலாம்: இஷ்ட தெய்வ அருள் வாழ்வில் துணைநிற்கும். சிறு செயலையும் நேர்த்தி யுடன் செய்து முடிப்பீர்கள். தொழில், வியா பாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். நிலுவைப்கடனில் ஒருபகுதி அடைபடும்.

விருச்சிகம்: மனக்குழப்பம் உருவாகிச் சிரமம் தரலாம். நண்பரின் உதவி கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த இலக்கு எளிதாக நிறை வேறும். அளவான பணவரவு கிடைக்கும். வீட்டுச் செலவு அதிகரிக்கும்.

தனுசு: முக்கியமான செயலைப் பிறரை நம்பி ஒப்படைக்க வேண்டாம். நிதானமுடன் பேசுவது நற்பெயரைக் காப்பாற்றும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

மகரம்: ஆன்மிகச் சிந்தனை அதிகரிக்கும். திட்டமிட்ட பணிகளை இலகுவாக நிறை வேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை முன்னேற்றம் பெறும். லாபம் பன்மடங்கு உயரும்.

கும்பம்: கூடுதல் பணி மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தும். நற்பெயரைப் பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சராசரி லாபம் கிடைக்கும். பெண்களுக்குக் குடும்ப தேவைக்கான செலவு அதிகரிக்கும்.

மீனம்: எதிர்கால நலன் கருதி பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் உயரும். பணி யாளர்கள் சலுகை கிடைக்கப்பெறுவர். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வினோதமான சந்தை

நானும் அப்பாவும் சந்தைக்குள் நுழைந்தோம். அன்று ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாளானதால் காய்கறிச் சந்தை களை கட்டயிருந்தது. புத்தம் புதியதாய் அதிகாலையில் பறிக்கப்பட்ட காய்கறி களும், பழ வகைகளும் அழகழகாக அடுக்கப்பட்டும், குவியல்களாக குவிக்கப்பட்டும் கண்களுக்கு குளிர்ச்சியாக காட்சியளித்தன. வழமைக்கு மாறாக அந்தப் பெரியவரின் காய்கறி விற்பனைப் பகு தியில் நீ முந்தி நான் முந்தி என போட்டி போட்டு பலரும் காய்கறிகளை வாங்கிக் கொண்டிருந்தனர். நாமும் அவ்விடத்துக்கு சென்றோம். அங்கே ஒரு அருமையான காட்சி ஓடிக்கொண்டிருந்தது. அன்று அதிகாலையிலேயே வழமையாக காய்கறி வியாபாரம் செய்யும் அந்த முதியவரிடம் காய்கறிகள், ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டதன்படி, அன்றைய வியாபாரத்தை காய்கறிகளே கவனித்துக் கொண் டிருந்தன. பெரியவர் காய்கறிகளின் மத்தியில் இருந்து பணத்தைப் பெற்று பையில் போட்டுக் கொண்டிருந்தார். அவர் அருகில் வண்டி தொந்தியுடன் குண்டுப் பூசணிக் காய் உட்காந்து தராசை பிடித்த படி காய்கறிகளைத் தராசில் போட்டபடியிருக்க, காய்கறிகளின் இனிமையான கூவல் வியா பாரத்தை விறுவிறுப்பாக்கிக் கொண்டிருந்தது.

கத்தரிக்காய்க் குவியலில் இருந்து ஒரு குரல் "அக்கா ஊதாக் கலர் சட்டையணிந்த அக்கா, ஊதாக் கலரான என்னையும் கொஞ்சம் திரும்பிப் பாரக்கா ஆ... இன்று ஞாயிறுதானே! கோழிக் குழம்புக்கு கறிவேப்பிலை தாளித்து மசித்த கத்தரிக்காய் மசியல் மிகவும் பொருத்தமாயிருக்குமே! என்ன தம்பி காயில பூச்சி புழுவா தேடுறீங்க? நீங்க கொண்டு வந்து விட்டாதான் இங்க பூச்சு புழு எல்லாம். எங்களிடம் ஏகப்பட்ட சத்துகள் உண்டு தெரியுமா? பொஸ்பரசு, போலிக் அசிட், விற்றமின் ஏ,பி, சி அது மட்டுமா? இதய நோய், சிறுநீரக நோய், நீரிழிவு நோய் களை நாங்கள் சீராக்குவோம். நல்ல நினைவாற்ற லையும் கொடுப்போம். தீராத வியா தியான புற்று நோயைக் கூடத் தடுப்போமே" என்று தம் பெருமைகளை அள்ளி வீசிக் கொண்டிருந்தது கத்தரி.

அப்போது "தங்கச்சி இங்க வாம்மா. எங்கே உன் கைவிரல்களைக் காட்டு? பாரம்மா உன் விரல்கள் போலவே நான் நீண்டு மெலிந்து அழகாக இருக்கிறேன் அல்லவா?". இதனால் தானே எங்களுக்கு ஆங்கிலத்தில் "லேடீஸ் பிங்கேஸ்" என்ற பெயரும் வந்தது. இன்று யாருக்குத் தான் நீரிழிவு நோய் இல்லை. என்னை வாங்கிப் போய் இரவில் நீரில் ஊற வைத்து அதிகாலையில் அந்த நீரைப் பருகி வந்த நோய் பார்த்துப் பார்த்துப் பறக்குமே. என்ன அப்பிடிப் பாக்கிறீங்க? என்னில் வழுவழுப்பு உண்டென்று என்னைத் தள்ளி வைக்காதீர்கள். வழுவழுப்பில் தான் சக்தியே உள்ளது. குழந்தை கள் வெண்டிக்காய் உண்டால் மூளை வளர்ச்சி ஏற்பட்டு கணக்கில் புலி ஆவார்கள். என்னைத் தொட்டுப் பார்த்து தள்ளிவிடாமல் முறித்துப் பார்த்து வாங்குங்கம்மா" என்ற வெண்டிக்காயை முந்திக் கொண்டு.

"வெண்டிக்காய் அக்கா கொஞ்சம் தள்ளக்கா" என தலையை நீட்டியது ஒல்லிக் குச்சி முருங்கைக்காய் "ஐயா வாங்கய்யா வாத்தியாரய்யா. எங்க விலையைக் கேட்டு விட்டு ஓடா தீங்க. எமக்கு இப்போது மதிப்பு அதிக முங்க" காக்கிலோ காணும். காய்ச்சலான பிள்ளைக்கும், பிள்ளை பெத்த அம்மாவுக்கும் பக்குவமா பத்தியம் வைக்க வாங்கிப் போங்க. நாங்கள் இரத் தத்தை சுத்திகரிப்போம். தொற்றுக்கள் ஏற்படாமலும் தடுப்போம். கண்பார்வையைக் கூட எம்மால் அதிகரிக்கச் செய்ய முடியுமே" என்றது முருங்கைக்காய்.

"முருங்கையம்மா பேசினது போதும். கொஞ்சம் ஒதுங்கம்மா" என்று பாம்பு போல நெளிந்தது பிஞ்சுப் புடலங்காய். "ஐயா பெரியவரே நான்தான் பிஞ்சுப் புடலங்காய். எடுத்துப் பாருங்க.நான் கடிக்க மாட்டேன். இந்த வெயில் வெக்கைக்கு எங்களைப் பால்கறி வைத்துச் சாப்பிட்டுப் பாருங்கோ. அல்சர் கூட எட்டியும் பாராது. வயதான காலத்தில் எலும்புகள் பலம் பெற நாங்கள் உதவுவோம்" என்று கூறி முடியவும் பாவற்காய் தலையை நீட்டியது.

"அம்மா வாங்கோ! என்னம்மா, நான் கசப்பானவள் என்றா யோசனை செய்கிறீர்கள். கசப்பான மருந்தை ஏன் குடிக்கிறீங்கள். நோய் தீரத் தானே! என்னை வாங்கி நல்ல இளநீரும் புளியும் விட்டு சமைத்தால் மிகவும் சுவையாக இருப்பேன். வயிற்றில் உள்ள பூச்சியெல்லாம் கண் காணாத இடத்துக்குப் போய் விடும். என்னைத் தினமும் சாறெடுத்துக் குடித்தால் சக்கரை நோய் இருந்த இடம் தெரியாது ஓடிவிடும் வாங்குங்க".

பாவற்காயை விரட்டிய படி தக்காளி "அம்மா குட்டைப் பாவற்காய்அம்மா! விலகுங்கோ! தள தள என்ற தக்காளி என்னைப் பாருங்க. செக்கச் சிவந்திருக்கும். நான் தான் சந்தை யிலே அழகி. பச்சையாக சம்பலுக்கும், சாம்பாருக்கும் ஏற்றவள் நான். இந்த வெய்யிலுக்கு ஜூஸ் செய்தும் குடிக்கலாம். என்னிடம் விற்றமின் ஏ.பி.சி உண்டல்லவா? என்று முழக்கியது.

இதோ கரட், "தக்காளி தங்கச்சி, நீ பெரிய அழகி என்று பெருமையடிக்காதே. இன்னும் கொஞ் சம் வெயில் ஏற நீ சட்னியாகி பழுதடைந்து விடுவாய். பிறகு மாட்டுக்குத்தான். சாப்பாடு. நான் உன்னைப் போலவா? செவ்விளநீர் கலரில் எவ்வளவு அழகாக இருக்கிறேன்". தொடர்ந்தும் குறையாத அழகுடன் இருப்பேன்! என்னிடம் விற்றமின் ஏ அதிகம் உள்ளது. குழந்தைகளின் உணவில் என்னைச் சேர்த்தால் பிற்காலத்தில் பார்வைக் கோளாறே வராது. பச்சை யாகவும் சாப்பிடலாம். பால்க்கறியும் வைக்கலாம்" என்று பெருமை பேசியது கரட்

கீரைக் கட்டுக்களும் வல்லாரையும் ஒரு பக்கத்தில் பசுமை காட்டி நின்றன. "ஐயா! பெரியய்யா! எங்களில் நிறைய இரும்புச் சத்தல்லவா இருக்கிறது. இது தெரியாதா உங்களுக்கு? உங்கள் இரத்தத்தில் ஈமோகுளோபினை அதிகரிக்கச் செய்வோமே நாங்கள்" என்று கீரையும் வல்லாரையும் கூவின.

அப்போது உருளைக் கிழங்கோ, சித்தப்பா கிழக்கு வாங்க மறந்திட்டீங்களா? என்னில் நிறைய மாச்சத்து உண்டல்லவா. உங்கள் குழந்தை விரும்பி சாப்பிடுவான் அல்லவா? ஆ... இன்று உருளைக் கிழக்கு இல்லாத இறைச்சிக்கறியா? அரைகிலோ எடுத்துப் போங்க" என்று கூறுகையில்.

"எல்லோரும் எல்லாம் வாங்கிறீங்க, நாங்களில்லாமல் கறி சமைப்பீங்களா" என்று ஒரு போடு போட்டது. பெரிய வெங்காயம். அன்று சந்தையில் வெங்காயம் குறைவாக இருந்ததால் வெங்காயத்தின் குரல் கேட்ட எல்லோரும் அடித்துப் பிடித்து வெங்காயத்தை அள்ளினர். இந்த அளவில் பெரியவரின் கடையில் இருந்த காய்கறிகள் பலவும் தீர்த்து போயின. பெரியவரின் கடையில் வேடிக்கை பார்த்ததில் நாம் காய்கறிகளை வாங்க மறந்து விட் டோம்.

அப்போது எங்களை நோக்கி "இங்கே பாருங்கள். நல்ல மரக்கறிகள் நாங்கள் மரக்கறி சூப் வைக்கலாமே" என்று லீக்ஸ், கோவா, பீன்ஸ், முள்ளங்கி இப்படி பல காய்கறிகள் எம்மைத் தம்பக்கம் ஈர்த்தன. நாமும் அவற்றுக்குத் திருப்தியாக இசைந்து அவற்றை வாங்கிக் கொண்டு மீன் சந்தைப் பக்கம் நகர்ந்தோம். பெரியவரும் நல்ல இலாபம் கிடைத்த மகிழ்வுடன் தனது கடையை அடைத்தார். அடுத்த ஞாயிறும் காய்கறிக ளின் வினோத சந்தையைப் பார்க்க மீண்டும் வருவோமென அப்பா கூறியதும் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

ஜலதரங்கம்
நீரில் ஒரு இசைத்தாளம்

தொழில்நுட்ப வளர்ச்சி அறவே இல்லாததிருந்த பண்டைக் காலத்தில் பாவனையில் இருந்த ஒரு இசைக் கருவியே இந்த ஜலதரங்கம். ஆனாலும் இதனை இசைக்கருவி என்பதை விட இசையை வெளிப் படுத்தப் பயன்படுத்தப்படும் உத்தி என்றே கூறலாம். ஜலம் என்ற வடசொல்லின் கருத்து நீர் என்பதாகும். ஜலம் - அரங்கம் என்ற இரு சொற்களின் இணைப்புச் சொல்லின் உருவாக்கமே ஜலதரங்கம் என்பதாகும். அதாவது தண்ணீரை மூல மாகக் கொண்டு இசையை அரங்கேற்றுவது என்று அர்த் தப்படுத்திக் கொள்வதே சாலச் சிறந்தது. பானைகள் மட்பாண்டங்களில் தட்டி இசை எழுப்பும் வில்லுப் பாட்டுப் போன்ற கிராமிய நாட்டுப் புறக் கலைகளுக்கு பயன்படுத்தப்பட்ட இசைக் கருவிகள் போன்று மக்களின் அன்றாட பாவனைப் பொருள்களில் ஒன்றான சிறிய சட்டிகள் அல்லது கிண் ணங்கள் போன்ற கோப்பைகளுள் நீரை வெவ்வேறு அளவுகளில் நிரப்பி, அரை வட் டமாக அவற்றின் நீர்க் கொள்ளவுக்கு ஏற்ப ஏறு வரிசைப்படுத்தி அல்லது இறங்கு வரி சைப் படுத்தியோ அடுக்கி உட்காந்திருந்து இரு கைகளிலும் குச்சி கொண்டு பாத்திரங் களின் விளிம்புகளில் தட்டி இசை எழுப்பிக் கொள்ளுவதே ஜலதரங்கமாகும். குச்சியால் தட்டும் போது கோப்பைகளில் நிரப்பப் பட்டுள்ள நீரின் அளவுக்கு ஏற்பவே ஒலி வெளிவ ருகின்றது. ஆகையால் நீரின் அளவுக்கு ஏற்பவே மெட்டுக்களை உருவாக்கலாம். நீர் குறைந்த பாத்திரங்களில் தட்டும்போது கணீர் என்ற துல்லியமும், நீர் அதிகமுள்ள பாத்திரங்களில் மந்தமான ஓசையும் எழுகின்றது. கூடுதலாக இந்த முறையில் மென் மையான இசையே வெளிவர வாய்ப்பு இருக்கும்.

இசையை முழுமையாக இரசிக்க முடியாதுள்ள இந்தக் காலம் போலல்லாமல், துல்லி யமாக இசைக்கு மட்டும் முக்கியத்துவமளித்த அந்தக் காலத்தில் தொழில்நுட்ப வசதிகள் இல்லாதவிடினும், நீரின் அடர்த்தி கொண்டு இசையமைத்த நுட்பம் வியப்புக்குரிய ஒன்றே. பிற்காலங்களில் பீங்கான் பாத்திரங்களில் நீர் நிரப்பி இசைத்து வந்த ஜலதரங் கம், கால ஓட்டத்தில் மறைந்து வருகின்றதும் உண்மையே.

மரங்கள் பேசினால்...

- நாங்கள் மரங்கள்; நாங்கள் மனிதர்களின் நல்ல நண்பர்கள்.
- உலகில் எல்லா உயிரினங்களையும வாழ வைக்கும். உண்மைத் தொண்டர்கள் நாம்.
- எங்களது காய், கனி, பூ, இலை, தண்டுகள், கிளைகள், வித்துக்கள், கிழங்குகள் என்பனவற்றை மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உணவாகத் தருகிறோம்.
- இவற்றோடு வேர்கள் மரப்பட்டைகளையும் சேர்த்து மனிதருக்கு ஏற்படும் நோய்க ளுக்கு மருந்துகள் தயாரிக்க உதவுகின்றோம்.
- மனிதரின் உணவு மற்றும் கைத்தொழில் தேவைகளுக்கு எரிபொருளாகப் பயன் படுகின்றோம்.
- வீடுகள் கட்டவும், தளபாடங்கள் செய்யவும், போக்குவரத்துப் பாலங்களை அமைக் கவும் பயன்படுகிறோம்.
- புகையிரப் பாதைகள் அமைக்கவும் மின்கம்பங்களுக்கும் நீர்ப்போக்குவரத்தில் படகு, கட்டுமரம், தெப்பம், கப்பல் என்பவை ஆக்கவும்உதவுகின்றோம்.
- போக்குவரத்தில் பொருள்களை ஏற்றிச் செல்லும் பெரிய பெட்டிக ளைச்செய்யவும்கடதாசி, பிசின் என்பவைசெய்யும்உதவுகின்றோம்.
- கிராமப் புறங்களில் போக்குவரத்துக்கும் விவசாயத்துக்கும் வண்டில் கள், கலப்பைகள் செய்யவும் உதவியாகின்றோம்.
- நாம் பூமியில் பற்றிப் படர்ந்து இலைகளை உதிர்த்தி மண்வளத்தைப் பெருக்குவ தோடு மண்ணரிப்பையும் தடுக்கின்றோம்.
- வெப்ப காலத்தில் சூழலுக்கு குளிர்மையையும் நிழலையும் வழங்குகிறோம்.
- நாம் அடர்த்தியாக வளர்ந்து குளிர்ந்த காற்றை தடைசெய்வதால் பூமிக்கு மழை கிடைக்கிறது..
- அசுத்தமான காற்றை உள்வாங்கி சுத்தமான காற்றை மனிதன் சுவாசிப்பதெற்கென வெளிவிடுகிறோம்.
- எமது காட்டு வளங்கள் எத்தனையோ மிருகங்கள் பறவைகளின் சரணாலயங்க ளாகின்றன. எம்மால் நீர்வளம் பாதுகாக்கப்படுகிறது.
- நாம் இல்லா விடில் பூமியே பாலைவனமாகி விடும்.
- எனவே உலக சீவராசிகள் அனைத்துக்கும் வாழ்வழிக்கும் மரங்களை அவசிய மின்றி அழிக்காதீர்கள்.
- வீட்டிலும் வீதி ஓரங்களிலும் எம்மை நாட்டி வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மை செய்து பயன் பெறுங்கள்.

சுவரொட்டி

சுற்றாடலை தூய்மையாக்குவோம்
பிளாஸ்ரிக் கழிவுகள் ஆபத்தானவை

மீள் சூழற்சிக்கு உட்படுத்துங்கள்.
எதிர்காலம் உங்கள் கைகளில்
சிந்தியுங்கள்.

சூழல் பாதுகாப்பு அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியிலுள்ள இரண்டு அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய தொடர்மாடி. நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.
தொடர்பு - 077 837 8597

கல் விற்பனைக்கு

4 இஞ்சி கொங்கிறிட் கற்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 5782 684

வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் செம்மணி வீதி,நாயன்மார் கட்டில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு கொள்க
077 445 8348

காணிதேவை

இயக்கச்சிக்கும் முகமாலைக்குமிடையில் 10 தொடக்கம் 15 ஏக்கர் வரை அளவுடைய காணி தேவையாகவுள்ளது. வீதிக்கு அருகில் விரும்பத்தக்கது.
077 445 8348

வலயக் கல்விஅலுவலகம்,வவுனியாதெற்கு
ஒப்பந்தஅடிப்படையில் சிற்றுண்டிச்சாலை
குத்தகைக்குவழங்குதல்
15.06.2017தொடக்கம் 14.06.2018வரை

வலயக்கல்விஅலுவலகம்,வவுனியாதெற்கிற்குரியசிற்றுண்டிச்சாலையைநடாத்துவதற்குதகுதியான/தகைமைவாய்ந்தசிற்றுண்டிச்சாலை நடத்துனர்களிடமிருந்து15.06.2017தொடக்கம் 14.06.2018வரையானகாலப்பகுதிக்குவலயக்கல்விஅலுவலகபெறுகைக்குழுவினால்முத்திரையிடப்பட்டபெறுகைகள்கோரப்படுகின்றன.

1. நாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் வலயக் கல்விஅலுவலகம் வவுனியாவில் கிடைக்கும் 'Application for Bid Documents'என்றபடிவத்தினைப் பூர்த்தி செய்து மீளளிக்கப்படாதபெறுகைக் கட்டணமாக ரூபா 500ஐ காசாக அலுவலககாசாளரிடம் செலுத்திபெறுகைப்பத்திரங்களை அலுவலகநாட்களில் 30.05.2017தொடக்கம் 13.06.2017வரையானகாலப்பகுதியில் 09.00 மணிதொடக்கம் 16.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
2. விலைக்கேள்விகள் 13.06.2017 திகதி03.00 மணிக்குமுன்பதாக வலயக் கல்வி அலுவலக வலயக்கல்விபணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்டவிலைக்கேள்விகள் கேள்விநேரமுடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ளவிலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினைஅலுவலகநேரங்களில் கணக்காளர் வலயக் கல்விஅலுவலகம் வவுனியா அவர்களின் தொலைபேசி இலக்கம் 024-2222026 உடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.
4. கிடைக்கப் பெற்றவிலைக்கேள்விகளைநிராகரிப்பதற்குஅல்லதுவிலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதுஅல்லதுநிராகரிப்பதுஅல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும்விலைக்கேள்வியாளர்களுக்கானபொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச்செய்வதற்குதிணைக்களபெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

திரு.மு.ராதகிருஸ்னன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்விஅலுவலகம்,
வவுனியாதெற்கு.

UNIVERSITY COLLEGE OF JAFFNA
UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING
TVEC Reg No: P25/0071

Applications are invited for NVQ Level 6 (Higher National Diploma) Programmes

- Limited Opportunities available
- Full Time
- Opportunities to acquire
  - Professional Industry Qualification for Employment in Junior Management and Supervisory level
  - To follow B.Tech Degree at University of Vocational Technology (Full Time / Part Time)

✓ Higher National Diploma in Building Services Technology
✓ Higher National Diploma in Construction Technology
✓ Higher National Diploma in Cosmetology (Beauty Culture)
✓ Higher National Diploma in Farm Machinery Technology
✓ Higher National Diploma in Food Technology
✓ Higher National Diploma in Hospitality Management
✓ Higher National Diploma in Mechatronics Technology
✓ Higher National Diploma in Production Technology

Accreditation QMS TVEC Approved Registration

Entry Qualification: NVQ Level 5 in Relevant Stream

Career Path:

University College
NVQ 5 → NVQ 6 (Higher National Diploma) → NVQ 7 / B.Tech Degree (UNVOTEC)

Closing Date: 07.06.2017

- Qualified interested candidates are requested to contact the office on or before the closing date during the office hours.

Note: Internal students do not need to apply and requested to contact the office.

For More Detaiis:

University College of Jaffna
No 29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Website : www.ucj.ac.lk
E-mail : info@ucj.ac.lk
Phone No: 021 221 7791

மரண அறிவித்தல்

கந்தையா ஆனந்தர்

(பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.. சங்க முன்னாள் பேக்கரி முகாமையாளர்)

சிறுவிளான் இளவாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆனந்தர் நேற்று (29.05.2017) திங்கட் கிழமை இறைவனடி சேந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வட்டுக்கோட்டையை சேர்ந்த கார்த்தியேசு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் அன்பு கணவரும். காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மகேஸ்வரி கண்மணி, நித்தியானந்தம். ஏரம்பு, பரதகுலராணி. கமலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் உஷா ரஜனி(லண்டன்), சபேசன்(கல்விசாரா உத்தியோகத்தர் மானிப்பாய் இந்துக்கல்லூரி), பத்மராஜ் (பணியாளர் ,பண்டத்தரிப்பு ப.நோ கூ.சங்கம்), தர்மினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா தெற்கு பிரதேசசெயலகம்) உதயகலா(கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தபேந்திரன் (லண்டன்), நிவேதிகா, கோமதி, சுதர்ஜன்(செயலாளர் , நல்லூர் பிரதேசசபை), வசந்தகுமார் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வவிசன், சானுகா, ஆதுசன், ஷப்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2017) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் சிறுவிளானில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுவிளான், இளவாலை.
021 568 0169

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

சபாபதிப்பிள்ளை முருகேசு சிவலிங்கம்



தோற்றம் 05.12.1938
மறைவு 29.05.2017

காரைநகர் களபூமி, தன்னையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தை, மாதங்கவத்தை ஒழுங்கையோகா தொடர்மாடி குடியிருப்பு, இல. 1/1 மற்றும் காரைநகர், மணற்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை முருகேசுசிவலிங்கம்29.05.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை முருகேசு - நாகம்மா தம்பதியரின் இரண்டாவது புதல்வனும் காரைநகர் அறுகம்புலத்தைச்சேர்ந்த காலஞ் சென்றவர்களான கந்தையா - சவுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் பாய்க்கியத்தின் பாசமிகு கணவரும் தெய்வேந்திரன் (லண்டன்), சர்வேஸ்வரன் (லண்டன்), நகுலேஸ்வரி (ஹட்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகரட்ணம் (ஆசிரியர், High Lan ds College, Hattan), விஜயலட்சுமி (லண்டன்), யாழினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் வைஷ்ணவி, கிருஷ்ணகாந், சிவரூபினி, வத்சலா, வத்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற இராசரத்தினம், மதனசுந்தரம், காலஞ்சென்ற உமாதேவி, சபாரத்தினம், அமராவதி, நவரத்தினம், காலஞ்சென்ற புவனேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.06.2017) வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் அவரின் காரைநகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணற்காடு,
காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.
0765841136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி நகரத்தில் வைத்தியசாலைக்கு முன்பாக சகல வசதிகளுடன் கூடிய (வாகனத் தரிப்பிட வசதி உட்பட) புதிய மாடி வீட்டின் கீழ்த்தளம் வாடகைக்கு உண்டு.(முற்பணம் 300,000/=, மாதாந்த வாடகை 10,000/=)

077 235 3586, 077 151 0047

கண்ணீர் அஞ்சலி

எமது பரிபாலன சபையின் தலைவர்

அப்பாத்துரை விநாயகமூர்த்தி

அவர்களின் மறைவினால் பெருந்துயர் அடைந்துள்ளோம். எங்கள் அனைவருக்கும் நல்ல வழிகாட்டியாகத் திகழ்ந்து அன்போடு அரவணைத்து நின்ற

இப்பெரியாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சிவனாரின் திருவடியில் பேரின்ப வீடு பெற மாத்தனைக் கந்தன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

சம்பியன் ஒழுங்கை, கொக்குவில்.

பரிபாலனசபை, மாத்தனைக்கந்தசுவாமிகோயில்.

மரண அறிவித்தல்

அகஸ்தீன் அருளப்பு

(இளைப்பாறிய அதிபர்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிட மாகவும், 35/2, இந்து மகளிர் வீதி, கந்தர்மடத்தை வசிப்பிட மாகவும் கொண்ட அகஸ்தீன் அருளப்பு நேற்று (29.05.2017) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான அகஸ்தீன் அந்தோனி யாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதர் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை) யின் அன்புக்கணவரும் ஜெயக்குமார், தவக்குமார், தேவகுமார், அனுசூயா ஆகியோரின் அன்புத்தந்தையும் செல்வி. நிஷானி, சுபா, ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர் களான அல்பிரட், றோசலின், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பவதி காலஞ்சென்ற கனகம்மா மற்றும் சேதுப்பிள்ளை காலஞ்சென்ற கோபால் மற்றும் பார்வதி, பேரம்பலம், துரைராசா, புவனேஸ்வரி, லலிதாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/2, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம்.

தகவல்: குடும்பத்தினர்.

தலைக்கவசம் அணியாதோரை பொலிஸ் துரத்தியதால் முறுகல்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாண நகரில் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசம் அணியாது சென்ற மூவரைப் பொலிஸார் துரத்திப் பிடிக்க முற்பட்டனர். இதன்போது அவர்கள் பொலிஸாரைத் தாக்க முற்பட்டமையால்கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் கிறீன்கிறாஸ் விடுதிச் சந்திக்கு அண்மையில் நேற்று மாலை ஒரே மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரைப் பொலிஸார் வழிமறித்துள்ளனர். ஆயினும்அவர்கள்மோட்டார் சைக்கிளை நிறுத்தாது தப்பியோட முயன்றனர். பொலிஸார் விரட்டிப் பிடித்தனர். இதன்போது அவர்கள் பொலிஸாரைத் தாக்க முயன்றதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

மூவரையும் கைது செய்த பொலிஸார் அவர்களின் மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர்.

(த-101)

வீழ்ந்தது...

உளளான அதனை விமானி சமயோசிதமாகக் கையாண்டு உயிர்ச் சேதம் இன்றிக் கட்டுப்படுத்தினார். அதிலிருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்பட வில்லை. எனினும் உலங்குவானூர்தி பயன்படுத்த முடியாத அளவுக்கு உடைந்துபோனது பத்தேகமவுக்கு உதவிப் பொருள்களைக் கொண்டு சென்ற உலங்கு வானூர்தி தரையிறங்கியபோது கட்டுப்பாட்டை இழந்து வீடொன்று டன் மோதியது என்று . என்று வான் படையின் பேச்சாளர் கிகான் செனிவிரத்ன தெரிவித்தார். (ற-5)

கனகராயன்...

உடலம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது. காயமடைந்தவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-21-101)

பேரிடரால்...

டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இரத்தினபுரி மாவட்டத்தில் 29 ஆயிரத்து 345 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 928 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 77 பேர் உயிரிழந் துள்ளனர். 26 பேர் காயமடைந் துள்ளனர். 28 பேர் காணாமற் போயுள்ளனர். 79 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 140 வீடுகள் பகுதியாகவும் சேத மடைந்துள்ளன. 169 நலன்புரி நிலையங்களில், 8 ஆயிரத்து 997 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 323 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் 29 ஆயிரத்து 199 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 906 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 54 பேர் உயிரிழந்துள்ளனர். 69 பேர் காயமடைந் துள்ளனர். 57 பேர் காணாமற் போயுள் ளனர். 91 வீடுகள் முழுமையாகவும், 805 வீடுகள் பகுதியளவிலும் சேதம டைந்துள்ளன. 60 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 602 குடும்பங் களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 34 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் 41 ஆயிரத்து 545 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 775 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். 21 பேர் உயிரிழந் துள்ளனர். ஒருவர் காயமடைந்துள் ளார். 14 பேர் காணாமற் போயுள்ள னர். 87 வீடுகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து ஒரு வீடுகள் பகுதியளவில் சேதம டைந்துள்ளன. 29 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 714 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 370 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 38 ஆயிரத்து 155 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 360 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். 12 பேர் உயிரிழந் துள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ள னர். 10 பேர் காணாமற்போயுள்ள னர். 161 வீடுகள் முழுமையாகவும், 467 வீடுகள் பகுதியளவிலும் சேதம டைந்துள்ளன. 13 நலன்புரி நிலையங்களில் 634 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 411 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2 ஆயிரத்து 409 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 368 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். 5 பேர் உயிரிழந் துள்ளனர். 37 வீடுகள் முழுமையாகவும், 417 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 2 நலன்புரி நிலையங்களில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 80 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பகா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 756 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 133 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காயமடைந்துள்ளார். 2 வீடுகள் முழுமையாகவும், 55 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 27 நலன்புரி நிலையங்களில் 2 ஆயிரத்து 535 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 692 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் ஆயிரத்து 526 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 799 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் உயிரிழந்துள்ளனர். 6 பேர் காயமடைந்துள்ளனர். 9 வீடுகள் முழுமையாகவும், 58 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. 8 நலன்புரி நிலையங்களில், 345 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 395 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்புமாவட்டத்தில் 5 ஆயிரத்து 150 குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்து 172 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 3 பேர் காயமடைந்துள்ளனர். 7 வீடுகள் முழுமையாகவும், 30 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. 55 நலன்புரிநிலையங்களில் ஆயிரத்து 744 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 544 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாத்தளை மாவட்டத்தில் 7 குடும்பங் களைச் சேர்ந்த 31 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருவர் காயமடைந் துள்ளார். 6 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (த-5)

உதயன்...

உதயன் சார்பில் அரச தலைவர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கே.வி.எஸ்.கணேசராசா, சாறா ஜோர்ஜ் ஆகியோர் வழக்கை நடத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் சட்டத்தரணி ரெங்கன் முன்னிலையானார். (உ)

மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 12 . 1933

மறைவு 28 . 05 . 2017

அப்பாத்துரை விநாயகமூர்த்தி

(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சிரேஸ்ட சட்டத்தரணியும்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சிரேஸ்ட சட்டத்தரணியுமான உயர்திரு . அப்பாத்துரை விநாயகமூர்த்தி நேற்று முன்தினம் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை - யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக்கண ரும் காலஞ்சென்ற நடராசாவின் (மட்டக்களப்பு) அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைக்காக இ று (30.05.2017) செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு காலை 7.30 -8.30 மணி வரை சாவகச்சேரி பேரூந்து நிலையத்தில் அஞ்சலி காக வைக்கப்பட்டு பின்னர் குளப்பிட்டி ஒழுங்கை கொக்குவிலில் உள்ள அவரது ல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி அ னைத் தொடர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று தகனக்கிரியைக்கா பி.ப. 3 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். ந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெ ள்ளவும்.

குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோத்தாவின்...

முடியாது. இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் முக்கியமாக கூறப்பட்டுள்ளதாவது:

1980களிலும்கூட வடக்கில் இராணுவமுகாம் கள் இருந்தன. அதனுள் இராணுவமும் இருந்தது.

பலாலியிலும், வடமராட்சியிலும் இராணுவ முகாம்கள் இவ்வாறு இருந்தாலும் அதனை சூழ புலிகளே இருந்தார்கள். அங்கிருந்து அடுத்த முகாம்களுக்குகூடச் செல்ல முடியாத நிலையில் இராணுவம் இருந்தது. மேலும் எமது நாடு 30 வருடகால போருக்கு முகம் கொடுத்திருந்தது. குறுகிய காலத்தில் அந்த பிரபாகரனின் சிந்தனைகளில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று கருதிவிட முடியாது. பிரபாகரனின் காலத்தில் தற்கொலை குண்டு தாரிகளாகும் அளவுக்கு மக்கள் சிந்தனை மாற்றம் செய்யப்பட்டிருந்தனர். அதனால் அவ்வாறான ஒரு நிலைமை மீண்டும் தோன் றாது என்று நினைப்பது முட்டாள்தனமான தாகும்.

"தற்காலத்தில் முப்படையினரில் பலரும் பல் வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் கைதாகின் றார்கள். அந்த நாள்களில் பாதுகாப்பு செயலா ளர் என்ற வகையில் நீங்கள் தானே அவற் றுக்கு பொறுப்பு கூற வேண்டியவர்?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "நாட்டின் பாதுகாப் புக்காக தீவிரவாதத்தை ஒழித்தது தவறு என்று கூற முடியாது. அவர்கள் தீவிர வாதத்தை முடக்கும் நோக்கில் மேற்கொண்ட செயற்பாடுகளை தற்காலத்தில் வன்முறை களாகக் கருதி அவர்களை கைது செய்வது தேசத்துரோகச் செயலாகும். எவ்வாறாயினும் இராணுவத்தினர் செய்த அனைத்து செயற்பா டுகளையும் நான் பொறுப்பேற்றுக் கொள் கின்றேன்" என்று தெரிவித்தார்

"எனது கேள்வி போரின் பேரில் குற்றம் இழைத்தவர்கள் பற்றியதாகும்?" என்று மீளவும் கேட்கப்பட்ட கேள்விக்கு, "இராணு வப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் போர் என்ற போர்வையில் தவறு செய்திருந்தால் அவர்கள் தண்டனைக்குரியவர்களாவர். இவர்களை தண்டிப்பதிலும் தவறில்லை. ஆனால் ஒரு தனிப்பட்ட நபரால் செய்யப்பட்ட குற்றம் என்றே அது கருதப்பட வேண்டும். எனவே அவற்றுக்கு நாம் பொறுப்புக் கூற முடியாது என்று தெரிவித்துள்ளார்.

"வேறு அதிகாரத்தில் உள்ளவர்களின் கோரிக் கைக்கு அமைவாக குற்றம் செய்திருந்தால்?" எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு, "அவ்வாறான ஒரு நிலைமை அன்று இருக்கவில்லை. அவ் வாறான நிலைப்பாடு காணப்பட்டதாக ஒரு கதையை உருவாக்கும் முயற்சிகள் தற் போது மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தொடர்பு படுத்திக்கொண்டு முன்னெடுக்கப்பட்டது போர். இதனால் தமிழ் மக்கள் வாழும் பகுதி களை இலக்கு வைத்து சோதனை நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் 10 பேரை கைது செய்கின்ற போது 3 அப்பாவிகள் சிக்கியிருக்கக் கூடும். அதனை நாங்கள் பொறுப்பேற்க முடியாது. உலக நாடுகளில் இந்த நடப்பு ஒன்றும் புதிதல் லவே. மேலும் 99 வீதமான தீவிரவாதிகள் தமிழர்களாக இருந்த போது நாங்கள் அம் பாந்தோட்டையில் சென்று அவர்களைத் தேடி சோதனையிடுவது பயனற்றதாகும்.

"தேசிய பாதுகாப்பின் நிமித்தம் சற்று சட்டத் துக்கு முரணான செயற்பாடுகளும் இடம்பெற் றன என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர் களா?" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "தீவிர வாதிகள் என்று வருகின்ற போது அவர்கள் சட்டத்தை மதித்து செயற்படுவார்களா? அத னால் அவர்களுடன் தலையைத் தடவிப் பேசு வதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. அதனை தவறு என்று கூறுவார்களாயின் நானும் குற் றவாளி என்று ஒப்புக்கொள்ளத் தயாராகவே உள்ளேன்" - என்றார். (உ-5)

கொலைக்கு...

குடும்பங்களுக்கும் இழப்பீடுகள் வழங் கப்பட்டன. எனினும் கைதிகளைச் சுட்டுக் கொன்றமை தொடர்பான விசாரணை கள் ஆட்சி மாற்றத்தின் பின்னர் தீவிரமாக்கப் பட்டன.

சிறையில் கலவரம் நடந்துகொண்டிருந்த போது பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச, தொலைபேசி அழைப்பு எடுத்த நபர்களின் தகவல்கள் மற்றும் குறித்த அழைப்புகள் தொடர்பில், குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், கோத்தபாய, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க ஊடாக, பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவுக்கு வழங்கியதாகக் கூறப்படும் காகிதத் துண்டும் கிடைக்கப்பெற் றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆதாரங்களை விரைவில், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித் தனர். (உ-5)

வித்தியா...

மூவரையும் ஏற்கனவே நியமித்திருந்தார். இந்தத் தீர்ப்பா யம் நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத் தில் முதல் தடவையாகக் கூடியது. இதன் ஊடாகத் தீர்ப்பாயம் தனது பணிகளை உத்தி யோகபூர்வமாக பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பித்தது.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலசிங்கம் சசிமகேந்திரன், யாழ்ப்பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழி யன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதி பதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகியோ ரைக் கொண்ட தீர்ப்பாயமே இந்த வழக்கு விசாரணையை நடத்தவுள்ளது.

தீர்ப்பாயத்தின் அமர்வை யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டத் தொகுதியின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள திறந்த மன்றில் (தொழில் நியாய சபை அமர்வு இடம்பெறும் திறந்த மன்றில்) முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து சட்டமா அதிபரின் அறிவுறுத்தலில் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றால் பாரப் படுத்தப்பட்ட வழக்கு ஆவணங்கள் தீர்ப்பாயம் முன்னிலையில் திறக்கப்பட்டன. வித்தியா படுகொலைவழக்கின் 9 சந்தேகநபர்களுக்கும் எதிராக சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்ட ஆவணங்கள் கோவையிடப்பட்டன.

தீர்ப்பாய விசாரணைக்காக எடுத்துக் கொள் ளப்படும் வழக்கு ரிஏபி 001/2017 என இலக்க மிடப்பட்டது. தீர்ப்பாயத்தால் சிறப்புக் கட்டளை கள் பிறப்பிக்கப்பட்டன. அவை தீர்ப்பாயத்தின் பதிவாளரான யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளரால் அறிவித்தல் பலகையில் இடப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றைய அமர்வில் வழக்கின் குற்றப் பகர்வுப் பத்திரங்களை - குற்றச்சாட்டுக்களை சந்தேகநபர்களுக்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி வாசித்துக் காட்டுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஜூலை முதல் வாரத்தில் இருந்து விசாரணைகளை ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டது.

வழக்குத் தொடர்பாக அரச சட்டவாதி நாகரட் ணம் நிஷாந்துக்கு அழைப்புக் கட்டளை அனுப்பப்படுகிறது. ஜூன் மாதம் 12ஆம் திகதி தீர்ப்பாயத்தில் முற்படுமாறு சந்தேகநபர் களுக்கும் அழைப்புக்கட்டளை அனுப்பிவைக் கப்படுகிறது.

புங்குடுதீவு மாணவி வித்தியா 2015ஆம் ஆண்டுமேமாதம் 13ஆம்திகதிபாடசாலைக்கு சென்ற வேளை கடத்தப்பட்டு கூட்டுவன்புணர் வின் பின்பு படுகொலை செய்யப்பட்டார். மாணவியின் படுகொலையுடன் தொடர்பு டையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 12 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் அரச சாட்சியாக ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் உறுதியுரை செய்தார். மேலும் 2 சந்தேகநபர்கள் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படாத நிலையில் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய 9 சந்தேகநபர்களும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக 41 குற்றச்சாட்டுக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்டுள்ளன. வழக்கில் 23 பேர் சாட்சிகளாக இணைக்கப் பட்டுள்ளனர்.

9 சந்தேகநபர்களுக்கும் எதிரான குற்றப் பத்திரிகை கடந்த 12ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த வழக்கை விசாரணை செய்ய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலசிங்கம் சசி மகேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் ஆகியோர் அடங்கிய தீர்ப்பாயத்தை தலைமை நீதியரசர் நியமித்தார். (உ-10, 32)

வெள்ளத்தால்...

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சிறப்புச் சலுகைகள் இடைநிறுத்தப்படும் எனவும் மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிக்கே முக்கியத்துவம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இடர் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளை மீளவும் அமைத்துக் கொள்ள இரு பது இலட்சம் ரூபா வரையில் அரசு நிதி உத வி களை வழங்க உள்ளதாகவும் உயிரிழந் தவர்களின் குடும்பங்களுக்கு நிதி வழங்கப் பட்டுள்ளதாகவும் இந்த தொகையை ஒரு மில்லியன் வரையில் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (உ-5)

ஹெலியில்...

மக்களை மீட்கும் நடவடிக்கையில் இலங்கை வான் படைக்குச் சொந்தமான உலங்குவா னூர்திகள் ஈடு படுத்தப்பட்டுள்ளன. கம்பகா மாவட்டத்தின் கலவானையில் இருந்து இரத் தினபுரிக்கு, வான்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியில் பாதிக்கப்பட்ட மக் களை மீட்டுச்செல்கையில், அதிலிருந்த கர்ப் பிணிப் பெண்ணொருவர் குழந்தையைப் பெற்றெடுத்தார். தாயும் சேயும் நலமாக இருக் கின்றனர் என வான் படைப் பேச்சாளர் தெரி வித்தார். இதேவேளை, இந்த உலங்குவா னூர்தியில் கொண்டுசெல்லப்பட்ட மற்றொரு கர்ப்பிணிப் பெண் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபின் குழந்தையைப் பிரசவித்துள் ளார். அந்தக் குழந்தை உயிரிழந்துள்ளது. (உ-5)

வடக்கின்...

கூடும் என்று தபால் திணைக்கள வட்டாரங் கள் தெரிவித்தன.

வழமையாக அதிகாலையில் யாழ்ப்பாண தொடருந்து நிலையத்துக்குத் தபால் பொதிக ளைச் சேகரிக்கச் செல்லும் ஊழியர்கள் நேற்று அங்கிருந்து வெறுங் கையுடனேயே திரும்பி னர். கொழும்பில் இருந்து வரும் பொதிகள் சேவை ஊழியர்களும் பொதிகளும் வர வில்லை.

வெள்ளப் பாதிப்பால் தபால் ஊழியர்கள், உத் தியோகத்தர்கள் கடமைக்குச் செல்வதில் இடையூறு ஏற்பட்டிருக்கலாம். அதனாலேயே தென்பகுதியில் இருந்து வடக்குக்கு எடுத்து வரப்படும் தபால் பொதிகள் வரவில்லைப் போலும் என யாழ்ப்பாண தபால் நிலைய வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன. (உ-ரி-17,173)

பதில்...

நாளை எட்டியுள்ளது. வவுனியாப் போராட்டம் 96ஆவது நாளையும், முல்லைத்தீவில் 84ஆவது நாளையும், யாழ்ப்பாணம் மரு தங்கேணியில் 78 ஆவது நாளையும், கிழக் கில் திருகோணமலையில் 88 ஆவது நாளை யும் போராட்டங்கள் எட்டியுள்ளன.

போராட்டம் இடம்பெற்றுவரும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் சர்வமத பிரார்த் தனையும் நடைபெற உள்ளது. ஆலயத்தில் பாலாபிசேகமும் செய்யவுள்ளனர். பிரார்த்த னைகளின் பின்னர் ஆர்ப்பாட்டம் இடம்பெ றும் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்த னர். இந்த போராட்டத்தில் கலந்து கொள்வதற் காக வவுனியாவிலிருந்து மூன்று பேருந்துக ளில் மக்கள் கிளிநொச்சிக்கு வரவுள்ளனர்.

இதற்கிடையில் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு நேற்றையதினம் சென்ற கிளி நொச்சி பொலிஸார் " போராட்டத்தில் ஈடுபடும் போது அரச சொத்துக்களுக்கு சேதம் விளை விக்கும் வகையிலோ, அரசை முடக்கும் வகையிலோ செயற்பட்டால் கைது செய்வ தாக எச்சரித்துள்ளனர்.

முன்னதாக மக்களுடைய போராட்டத்தால் அசம்பாவிதங்கள் நிகழலாம் எனத் தெரி வித்து கிளிநொச்சி நீதிவான் மன்றில் தடை உத்தரவு பெற பொலிஸார் முயன்றனர். ஆனால் நீதிவான் பொலிஸாரின் கோரிக் கையை நிராகரித்துவிட்டார். (உ-21)

பிரபாகரனைக்...

சுமத்தினார். அந்தக் கட்சியின் ஆட்சி தொடங்கி 3 ஆண்டுகால நிறைவை முன்னிட்டு நடை பெற்ற சாதனை விளக்கக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிர பாகரனை இறுதி வரை அமைதிப் பேச்சுக்க ளில் ஈடுபடவிடாமல் அவர் உயிரிழப்பதற்குத் தமிழகத்தை சேர்ந்த வைகோ, சீமான் மற் றும் திருமாவளவன்தான் காரணம்.

இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டு அரசியல் வாதிகளின் பேசைக் கேட்பதில்லை. இவர்கள் பேசப் பேச இலங்கைத் தமிழர்கள்தான் பாதிக் கப்படுகின்றனர். நன்றாக இருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை துப்பாக்கியை கீழே போடவிடாமல் வைகோ, சீமான், திரு மாவளவன் ஆகியோர் பேசிப் பேசி உணர்ச்சி வசப்படவைத்து உயிரிழக்கச்செய்தனர். இறுதி வரை அவரை சமாதானம் பேசவிடாமல் தடுத்தது தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் தான். இலங்கைத் தமிழர்களுக்குக் குரல் கொடுக் கும் தமிழக அரசியல்வாதிகள் யாரும் இலங்கை சென்றது கிடையாது. இலங்கைத் தமிழர்களைச் சந்தித்து அவர்களின் குறை களைக் கேட்டது தலைமை அமைச்சர் மோடி தான் - என்றார். (உ5)

3 பெண்...

குற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்று சந்தேகிக்கப் படுபவர்களைப் பணிக்கமர்த்திய கட்டட ஒப் பந்தக்காரரைப் பிடித்து, கட்டிவைத்து உதைத் தனர். வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மூதூர் தமிழ்ப் பாடசாலைகள் சிலவற்றின் மாணவர்களும் நேற்றைய தினம் போராட்டத்தில் குதித்தனர்.

மூதூர், பெரியவெளி, மல்லிகைத்தீவில் இடம் பெற்ற வதைச் சம்பவம் குறித்துத் தெரிவிக்கப் படுவதாவது:

நேற்றுமுன்தினம் மல்லிகைத் தீவு பிரதேசத் தைச் சேர்ந்த 3 மாணவிகள் அறநெறிப் பாட சாலைக்குச் சென்றனர். அவர்களில் இருவ ருக்கு 7 வயது. ஒருவருக்கு 8 வயது. நேரம் தாழ்த்தியே மூவரும் வீடு திரும்பினர். தாம தத்துக்கான காரணத்தைப் பெற்றோர் துருவி னர். பாடசாலையில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டுத் திரும்பினோம் என்று குழந்தைகள் பதிலளித்தனர். அத்தோடு தம்மைச் சிலர் மல சலகூடத்தில் வைத்து பாலியல்ரீதியில் வதைத் தனர் என்றும் கூறி அழுதனர்.

உடனடியாகவே தொலைபேசியூடாக மூதூர் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட் டது. தகவலை கேட்டறிந்த உடன் அந்தப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் மல்லிகைத் தீவு பாடசாலைக் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட இருவரைக் கைது செய்தனர்.

கட்டட கட்டுமானத்தைப் பொறுப்பெடுத்திருந்த ஒப்பந்தகாரரை அந்தப் பகுதி மக்கள் பிடித்துக் கட்டிவைத்திருந்தனர். இதனால் அந்தப் பகுதி யில்பதற்றம்தோன்றியது. அங்குவிரைந்தபொலி ஸார் அவரை விடுவித்ததுடன் அவரின் உத வியுடன் மேலும் இருவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்டவர்கள் மூதூர் அல்லைந கர் மற்றும் செல்வநகர் பகுதிகளைச் சேர்ந்த 18, 30, 36, 40 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் நேற்று மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். மாண விகள் மூவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் மருத்துவ சோதனைக் காகச் சேர்க்கப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை 8 மணிக்கே கிளிவெட்டிப் பாடசாலை மாணவர் கள் தமது பாடசாலைக்கு முன்பாக நீதியை நிலைநாட்ட வலியுறுத்திப் போராட்டத்தில் குதித்தனர். அவர்களுடன் பொதுமக்களும் இணைந்துகொண்டனர். இதனால் அந்த இடத்தில் பதற்றம் நிலவியது. பின்னர் அவர் கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட தொடங்கினர்.

மதியம் 12.15 மணியளவில் கிழக்கு மாகாண கல்வியமைச்சர் எஸ்.தண்டாயுதபாணி சம் பவ இடத்துக்கு வந்தார். பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர், பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான தீர்வு கிடைக்கும், தற்போது ஆர்ப்பாட்டத்தை கைவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டார். அதன்பின் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்க் குழந்தைகள் என்றும் கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் முஸ்லிம்கள் என்றும் கூறப்படுவதால் அந்தப் பகுதியில் சமூகப் பதற்றங்களோ வன்முறை களோ ஏற்படாத வகையில் பாதுகாப்பு இறுக் கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூர் சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தி குற்றம் இழைத்தவர் களை நீதமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உரிய விசாரணை நடத் த வேண்டும் என்று சிறுவர் விவகார இரா ஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்தியுள் ளார். இதுபோன்ற சம்பவங்கள் இனியும் இடம்பெற இடமளிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் இடத்தில் இருந்து விந்தணு மாதிரி கள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்தனர். அவற்றை மரப ணுப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறு மூதூர் தலைமை நீதவான் இதன்போது உத்தரவு பிறப்பித்துள்ளார். (உ-10, 45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

பெரும் வித்தியாசத்தில் யாழ்ப்பாணம் சம்பியன்

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண விளையட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தடகளத் தொடர், பெருவிளையாட்டு, உள்ள விளையாட்டு என ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டம் சம்பியனானது. இரண்டாம் இடத்தைப் பிடித்த கிளிநொச்சி மாவட்டம் பெற்ற புள்ளிகளை விட இரண்டு மடங்கைவிட அதிகமான புள்ளிகளை யாழ்ப்பாண மாவட்டம் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை என இரண்டு தினங்கள் வடமாகாணத் தடகளத் தொடர் நடைபெற்றது.
இரண்டாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் இந்தப் பட்டியல் வெளியிடப்பட்டது. 354 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டம் முதலிடம் பிடித்தது.
அடுத்தடுத்த இடங்களில் முறையே கிளிநொச்சி மாவட்டம் 170 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், வவுனியா மாவட்டம் 160 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும், மன்னார் மாவட்டம் 130 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்திலும், முல்லைத்தீவு மாவட்டம் ஐந்தாம் இடத்திலும் உள்ளன.
(ம-23)

800 மீற்றர் ஓட்டத்தில் மன்னாருக்கு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என். கிளாஸ்டன் மார்சியஸ் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என்.கிளாஸ்டன் மார்சியஸ் 2 நிமிடங்கள் 04 செக்கன்கள் 6 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தையும், ஜே.ஏ. றோயன் பொன்னாண்டஸ் 2 நிமிடங்கள் 06 செக்கன்கள் 3 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.றேனுஜன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422-23)

கிளிநொச்சி சாதித்தது

வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.டென்சிகா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை என இரண்டு தினங்கள் வடமாகாணத் தடகளத் தொடர் நடைபெற்றது.
முதலாம் நாளில் பெண்கள் பிரிவு 800 மீற்றர் ஓட்டம் நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.டென்சிகா 2 நிமிடங்கள் 39 செக்கன்கள் 3 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.கிருசாளினி 2 நிமிடங்கள் 44 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.விழியரசி 2 நிமிடங்கள் 47 செக்கன்களில் ஓடிமுடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422)

வடக்கு மிக விரைவில் மீண்டெழும் முதல்வர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

அனித்தாவை மாதிரியாக வைத்து அறிவுரை

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண வீர மற்றும் வீராங்கனைகளின் பங்குபற்றலால் வடமாகாணம் மிக விரைவில் தேசியத்தில் முன்னிலை பெறும் இவ்வாறு" தெரிவித்தார் வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரன்.
வடமாகாணத் தடகளத் தொடரின் இறுதிநாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்குத் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"வடமாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரின் விளைவாக இங்குள்ள வீர வீராங்கனைகள் தமது பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு ஏற்ற பயிற்சியாளர்கள் இல்லாமை, பயிற்சி பெறுவதற்கு ஏற்ற விளையாட்டு உபகரணங்கள் இல்லாமை, உள்ளக, வெளியக விளையாட்டு அரங்கங்கள் இல்லாமை போன்ற காரணங்களால் விளையாட்டு நிகழ்வுகளில் ஏனைய மாகாணங்களில் உள்ள வீர வீராங்கனைகளை விட சற்றுக் குறைவாகவே செயற்பட வேண்டியிருந்தது. ஆனால் எமது விளையாட்டு வீரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களிடம் சிறந்த உடல் வலிமையும் மனஉறுதியும் இருப்பதை நான் பல தடவைகளில் அவதானித்திருக்கின்றேன். இவை வடக்கை மிக விரைவில் முன்னணிக்குக் கொண்டு செல்லும்.
கடந்த வருடம் நடைபெற்றதேசியமட்ட தடகளத் தொடரில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்த வீராங்கனையின் சாதனையை இந்தத் தருணத்தில் மீண்டும் ஒருமுறை நினைவுறுத்த விரும்புகின்றேன். முறையான விளையாட்டு மைதானம் இல்லை. கோலூன்றிப் பாய்தல் பயிற்சிக்கான விசேட மெத்தைகளோ ஏனைய விளையாட்டு உபகரணங்களோ இல்லை என்ற நிலையிலும் வெறும் மணற்கும்பிகளில் தடிகளை நட்டுப் பயிற்சி செய்து முதலிடத்தைப் பெற்றது மட்டுமன்றி சாதனையும் படைத்தமை உங்கள் ஒவ்வொருவருக்கும் முன்மாதிரியாக அமைய வேண்டும்.
எந்தவொரு நிகழ்விலும் கலந்துகொள்ளுகின்ற போது மனதில் வெற்றி பெற வேண்டும் என்ற போட்டித் தன்மை இருக்க வேண்டும். ஆனால் அது பொறாமையாக மாறிவிடாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். சில நாட்களுக்கு முன்னர் ஆழிக்குமரன் ஆனந்தனின் ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறையில் ஒரு நீச்சல் தடாகத்திற்கு அடிக்கல் நட வேண்டியிருந்தது. கின்னஸ் புத்தகத்தில் தனது ஏழு செயற்பாடுகளை உள்ளடக்கி மறைந்த ஒரு வீரர் ஆழிக்குமரன் ஆனந்தன். அவர் வாழ்வை எடுத்துக் கொண்டால் விடாமுயற்சி, எதையும் சாதிக்கலாம் என்ற மனத் துணிவு, துவண்டு விடாத தன்மை என்பவையே அவரை மற்றவர்கள் செய்யமுடியாதனவற்றை செய்ய வைத்தது என்று கூறலாம். வெற்றி நிச்சயம் என்ற மனோதிடம் செயற்கரிய செயல்களை செய்யும்" என முதல்வர் மேலும் தெரிவித்தார்.
(ம)

ஆண்கள் உயரம் பாய்தல் மன்னார் வென்றது தங்கம்

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண தடகளத் தொடரில் ஆண்கள் பிரிவு உயரம் பாய்தலில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். சரத்பாபு தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம், கடந்த சனிக்கிழமை என்று இரண்டு தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்களுக்கான உயரம் பாய்தலில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சரத்பாது 1.84 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.ராம்குமார் 1.75 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த என்.நவீன்ராஜ் 1.75 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினார்.
(ம-422)

ஆண்கள் குண்டெறிதலில் யாழுக்குத் தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண தடகளத் தொடரில் ஆண்களுக்கான குண்டெறிதலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.சுஜீவன் தங்கப்பதக்கம் வென்றார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம், கடந்த சனிக்கிழமை என்று இரண்டு தினங்கள் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. ஆண்களுக்கான குண்டெறிதலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஆர்.சுஜீவன் 11.08 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும் வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சி.ஜெனோஜன் 10.85 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.விசாகன் 10.85 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422)

தட்டெறிதலில் தங்கப்பதக்கம் கிளிநொச்சிக்குக் கிடைத்தது

யாழ்ப்பாணம், மே 30
வடமாகாண தடகளத் தொடரில் பெண்கள் பிரிவு தட்டெறிதலில் கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்த எஸ். லினோஜிதா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இந்தப் போட்டி நடைபெற்றது.
கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.லினோஜிதா 24.87 மீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தையும், யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுஜீபா 22.15 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.மனுஜா 21.86 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்பந்தாட்ட இறுதிகள்

கரணவாய், மே 30
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் மன்னார் பொது விளையாட்டரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

17 வயது ஆண்கள்

17 வயது ஆண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால யத்தை எதிர்த்து மன்னார் பற்றிமா மகா வித்தியாலய மும், மூன்றா மிடத்திற்கான ஆட்டத்தில் கொக்குவில் ஞானபண்டித மகா வித்தியா லயத்தை எதிர்த்து மன்னார் சென். சேவியர் கல்லூரியும் மோதவுள்ளன.

17 வயதுப் பெண்கள்

17 வயது பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து மயிலணி மகா வித்தியாலயமும் மோதவுள்ளன.

(ம-108)

சம்பியனானது வளர்மதி அணி

யாழ்ப்பாணம், மே 30
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் சம்பியனானது.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதியது.
5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றது வளர்மதி விளையாட்டுக் கழகம். மூன்றாவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி வளர்மதியின் நேர்செற் வெற்றி வாய்ப்பை இல்லாமல் செய்தது பாரதி. எனினும் சரிவில் இருந்து மீண்ட வளர்மதி அணி நான்காவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம-23)

சூசையப்பர் வி.கழக அரங்குக்கு அடிக்கல்

44 மில். ரூபா செலவில் அமைப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், மே 30
மன்னார் பனங்கட்டிக்கொட்டுக் கிராமத்தில் சூசையப்பர் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு அரங்குக்காக 44 மில்லியன் ரூபா செலவில் நேற்றுமுன்தினம் அடிக்கல் நடப்பட்டுள்ளது.
கொழும்பு விளையாட்டுத்துறை அமைச்சிடம் சூசையப்பர் விளையாட்டுக் கழகம் சார்பில் கடந்த ஆண்டு விடப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் குறித்த மைதானத்தை நவீன வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானமாக அமைப்பதற்கும், விளையாட்டு அரங்கு அமைப்பதற்கும் 44 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
அடிக்கல் நடும் நிகழ்வுகள் புனித செபஸ்ரியார் ஆலய பங்குத் தந்தையின் தலைமையில் இடம்பெற்றது. அடிக்கல்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் நட்டார். வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் உறுப்பினர் சிராய்வா உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ம-23-101)

சண்ஸ்ரார், குறிஞ்சிக்குமரன் அடுத்த சுற்றுக்கு முன்னேறின

யாழ்ப்பாணம், மே 30
கலைமதியின் கால்பந்தாட்டத் தொடரில் புங்குடுதீவு சண்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மற்றும் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறின.
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சண்ஸ்ரார் அணி மோதியது. அன்ரனிஸ் அணியின் அலெக்ஸ் 3ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்ய 13ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் கிருசாந். 1:1என்ற நிலையில் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் சண்ஸ்ரார் அணியின் சுரேஸ் ஓர் கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் குறிஞ்சிக்குமரன் அணியின் முதல்கோல் பதிவானது. அதுவே ஆட்டத்தின் ஒரே கோலுமாக அமைந்தது. (ம-108)

பாண்டியா இருக்கப் பயமேன்

இந்திய அணியின் கலிஸ் என்றால் எல்லோரின் நினைவுக்கும் உடனே வந்துசெல்பவர் பாண்டியா. இந்திய அணியின் சகலதுறை வீரராக உருவெடுத்துள்ள இவரே அந்த அணியின் எதிர்காலம் என்று வர்ணிக்கப்படுகிறார். வேகப்பந்துவீச்சுடன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடவும் வல்லவராக பாண்டியா இருக்கிறார். மினி உலகக்கிண்ணம் நடைபெறவுள்ள இங்கிலாந்து ஆடுகளங்களில் இத்தகையவர்களே அணிக்குத் தேவையானவர்கள்.
பும்ரா, சமி, புவனேஸ்வர் குமார் என்று பலமான வேகப்பந்து வீச்சையும் கொண்டுள்ளது இந்தியா. அஸ்வின், ஜடேயா இருவரும் அணியில் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது. எனவே ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக அமைந்தால் எதிரணி பாவம்தான்.
துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை கோக்லி, டோனி, ரோகித், ரகானே, தவான் உள்ளனர். மொத்தத்தில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கும் இந்திய அணி அதைத்தக்கவைக்கவும் வாய்ப்புக்கள் அதிகம்.
இந்திய அணி விவரம்: கோக்லி (தலைவர்), டோனி, யுவராஜ், ரோகித் சர்மா, பும்ரா, கேதர் யாதவ், புவனேஸ்வர்குமார், பாண்டியா, அஸ்வின், ஜடேயா, தவான், டினேஸ் கார்திக், மொகமட் சமி, ரகானே உமேஸ் யாதவ்.

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மே 30
நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.
பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி வி.கழகமும் மோதவுள்ளன. (ம-108)

இந்து இளைஞர் வாகை சூடியது

யாழ்ப்பாணம், மே 30
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது.
முதல் இரு செற்களையும் 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது. மூன்றாவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆவரங்கால் மத்திதனதாக்கியது. நான்காவது செற்றை 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது இந்து இளைஞர் அணி.

(ம-23-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டத்தை வென்றது தென்னாபிரிக்கா தொடரைக் கைப்பற்றியது இங்கிலாந்து

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. எனினும், முதலிரு ஆட்டங்களையும் வெற்றிபெற்ற காரணத்தால் இங்கிலாந்து தொடரைக் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓட்டங்களில் தனது முன்வரி சையைப் பறிகொடுத்தது. ரபாடா, பார்னல் வேகப்பந்துக் கூட்டணி இங்கிலாந்தின் முன்வரிசையை தகர்த்து எறிந்தது. பரிஸ்ரௌவ் மத்திய வரிசையில் போராடி அரைச்சதம் கடந்தார். அவர் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முடிவில் 153 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து அணி. பரிஸ்ரௌவைத் தவிர ரோலன்ட் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும், வில்லி 26 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களைத்தவிர வேறெவரும் இரட்டை இலக்கத்தைத் தாண்டவில்லை.

பந்துவீச்சில் ரபாடா 4 இலக்குகளையும், பார்நெல், மகாராஜ் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 127 பந்துகள் மீதமிருக்க 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 7 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அம்லா 55 ஓட்டங்களையும், குயின்டன் 34 ஓட்டங்களையும், டுமினி ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம)

மாணவர்களே! அரச தனியார் உத்தியோகத்தர்களே LapTop பிரியர்களே!

உலகத்தரம் வாய்ந்த Laptopகள் உங்கள் கைகளில்...

இலகுவில் காவிச்செல்லக்கூடிய, கையடக்கான

Asus E202S EEBOOK

Model	Asus E202S EEBOOK
Processor	Intel N3060
Ram	4 GB DDR3
Hard Disk	500 GB
Options	Wifi/CR/BT
Screen	11.6 LED
Colour	Dark blue
Operating System	DOS
Web cam	Yes
Warranty:1YEAR	
Price	41,000.00
FREE- MOUSE , NORTON ANTIVIRUS	

Touch screen Laptopகள்

DELL LAPTOP 7TH GEN

Model	Dell Inspiron 15 5566
Processor	Intel Core i3 2.40GHz (7100U)
Ram	6 GB DDR4
Hard Disk	1 TB
Optical Drive	DVD/RW+DL
Options	Wifi/CR/BT
Screen	15.6 LED Touch Display
Graphics	Shared Graphics
Operating System	Windows 10 Home
Web cam	Yes
Warranty:1YEAR	
Price	69,500.00
FREE- BAG , MOUSE , NORTON ANTIVIRUS	

HP 250 G5

: HP 250 G5
: 6th Generation Intel® Core™ i3 -6006U
: 4 GB DDR3L-1600 SDRAM
: 500 GB SATA
: DVD+/-RW SuperMulti DL
: Wifi/CR/BT
: 15.6" LED HD Display
: Intel® HD Graphics
: FREE DOS
: Yes

Warranty:1YEAR
Price 52,000.00
FREE- BAG, MOUSE, NORTON ANTIVIRUS

NALIN Information Technologies Pvt Ltd.
NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.
No. 195/2, Parameswara Junction, Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975
உங்கள் LapTopகளுக்கு முந்துங்கள்
உலகை வெல்லுங்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே

பக்க வடிவமைப்பாளர் தேவை

யாழ்.நகரில் மாதாந்த சஞ்சிகை ஒன்றுக்கு திறமையான பக்கவடிவமைப்பாளர் தேவை.

ஆரம்பக் கொடுப்பனவு
20,000 - 30,000
071 110 0066

TVS

இலங்கையில் முதலாவது FULLY LOADED ஸ்கூட்டர்

சிறந்த அம்சங்களை கொண்ட

100cc CVTi எஞ்சின் | தாராளமான கேரேஜ் | கொண்டோத சாவிஎன்ட்ரி | இலகுவான செட் ஸ்டேண்ட் | நீளமான சீட்

புத்தம் புதிய TVS WEGO 110 SBS மேலும் அதிக அம்சங்களுடன். மேலதிக விபரங்களுக்கு அருகாமையிலுள்ள விநியோகஸ்தரை தொடர்பு கொள்ளவும்.

விற்கும் விலை ரூபா. 238,900

கவர்ச்சிகரமான வர்ணங்களிலும் ஸ்டைலான வடிவங்களிலும்

இப்போதே அருகில் உள்ள விற்பனை முகவரை அணுகவும்

- ரங்கனாத் - 0777283095 - தெற்கு மாவட்டம்
- அருண் - 0772032189 - வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டம்
- ரவிந்ர சொய்சா - 0773215746 - வட மத்திய மாவட்டம்
- இந்திக வீரசிங்க - 0774636345 - மேற்கு மாகாணம்
- ஹர்ச சஞ்சய - 0773497641 - கம்பஹா / கண்டி / கேகாலை / நுவரேலியா
- நீன்காந் - 0773748155 - மட்டகளப்பு / அம்பாரை
- ஜனக தசனாயக - 0771507552 - குருணாகலை / புத்தளம்
- ஜீவன் - 0772057660 - பதுளை / பண்டாரவளை

திரு. ஷாம்சன் அவர்களின்
SPOKEN ENGLISH
ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர் யுவதிகள் கற்றுப்பயன்பெற்ற ஷாம்சனின் நேரடி உரையாடற்பயிற்சிமூலமான 3 மாத ஆங்கிலக்கற்கைநெறி.
ஆங்கிலத்தில் ஒரேமுத்துத்தெரியாதவர்கள்கூட முன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 03.06.2017
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00 (தட்டில்லை)
4. மாலை 03.00-05.00
இலையாவும் திரு. ஷாம்சன் ஆசிரியரின் நேரடிவகுப்புகள்
பயிற்சிநெறி முடிவில் டிப்ளோமா சான்றிதழ்
SHAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

WANTED

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் எமது *Everest (pvt) Company* யானது பின்வரும் பதவிவெற்றிடங்களை நிரப்பவுள்ளது.

ASM	50 000/=
Accountant	45 000/=
Clerk	25 000/=
Supervisor	20 000/=
Administration	15 000/=
Stock Keepers	13 500/=

பதவி வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்படவுள்ளன. O/L, A/L படித்தவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

No.179, Hospital Rd, Jaffna.
தொடர்பு- 0217223317, 076 416 5173

வட இந்திய காசி சீரடி யாத்திரை

ஆரம்பம் : 05.08.2017
யாத்திரீகர் - 20 நாள்கள் : 15

செல்லுமிடங்கள்:- டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், அலகாபாத் (கங்கா, ஜமுனா, சரஸ்வதி), திருவேணி, சங்கமம், கயா, காலமானவர்களுக்கு சிரார்த்தம் செய்யுமிடம், புத்தகயா, புத்தாலயங்கள், சீத்தமடி, காசி (வாரனாசி), 3நாள் குருச் சேத்திரம், பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம், மும்பாய், சீரடி பாபா, சனி சிங்கனாப்பூர், அக்கல்கோட், பாபா, இராமேஸ்வரம், மதுரை, துல்க்காப்பூர் அம்மன்கோயில், வேறு இடங்களும் காணலாம். ஒருநாள் சென்னையில் சொப்பிங். உங்களிடம் வாங்கும் ரூபாவுக்கு எமது சேவை, 4 விமானப் பயணம், AC வாகன வசதி, மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, படுக்கட்டணங்கள் எயாபோட் போக, வர வாகன வசதி, 2 பேருக்கு குளியலறை (வெஸ்ரன் கொமட்), இணைந்த அறைகள் (NON AC) குடிநீர் (மேலும் ஆலயங்களில் எடுக்கும் புகைப்படங்கள் 25 அன்பளிப்பாகத் தரப்படும்) விருப்பமுடையவர்கள் பாஸ் போர்ட் போட்டோக் கொப்பியும், ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப் படமும் அனுப்பி பதிவு செய்யவும். மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன், மகன் ராஜன்
No.59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11
Tel: 077 768 0102 / 077 736 2154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.